பாண்டிச்சேரி சிறப்பிதழ்

வாஸந்தி — அயல்நாட்டுப் பயணத்தொடர் ஆரம்பம்



கல்கி

KALKI
12.1.86
ரூ. 1.50

* ராஜேஷ்குமார் — மர்மத் தொடர் ஆரம்பம்.

நரசுஸ் காபி அளிக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்

நரசுஸ் அளிக்கும் புத்தாண்டுப் பரிசுகள்!



Godrej

நரசுஸ் காபியின் வைர விழா

ஆண்டு 1926-1986.



நவரத்தினங்களில் தலை சிறந்தது வைரம்! காபியிலே தலை சிறந்தது வைர விழா காணும் நரசுஸ் காபி!

- 3 கிலோ நரசுஸ் காபிக்கு கோத்ரெஜ் **கிரேஸனிங் குளோரி** அழகு சோப்.
- 1½ கிலோ நரசுஸ் காபிக்கு கோத்ரெஜ் **சூப்பர் பிஸ்** கிளீனிங் பவுடர்.
- 1 கிலோ நரசுஸ் காபிக்கு கோத்ரெஜ் **ட்ரைலோ** நீல டிடர்ஜெண்ட் வாஷிங் கட்டி.

மொத்தமாகவோ, சில்லறையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதி கூப்பன்களைப் பெற்று வெகுமதிகளைப் பெறுங்கள்.

30-12-85 முதல் 1-2-86 வரை முடியும் விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.

நரசுஸ் காபி கம்பெனி

சேலம் 636 007

கிளைகள்: தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலும்.

ADWAVE NCC 3022

"இது சின்ன மாநிலம்தான் ஆனால் சின்னத்தனம் இல்லை!"

– ஃபாரூக் பேட்டி

நிருபர்: பாண்டிச்சேரியைப் பொறுத்த வரை ஒரு நிலையான ஆட்சியை யாராலும் தர முடியவில்லையே! இதற்கு என்ன காரணம்?

முதலமைச்சர்: பாண்டிச்சேரி அரசியல், தமிழ்நாட்டு அரசியலிலிருந்து வேறுபட்டது. இங்கே கட்சியை விடத் தனி நபர் புகழ் அவருக்குள்ள ஆதரவு இவற்றைப் பொறுத்ததுதான் அரசியல். கட்சித் தாவலும் இதற்கு ஒரு காரணமாய் இருந்தது. இப்போது அதற்குத் தடை வந்துவிட்டது. எங்களால் நிலையான அரசாங்கத்தைத் தர முடியும்; எங்களால் மட்டுமே முடியும்.

நிரு: பாண்டிச்சேரி சிறிய மாநிலமாய் இருந்தாலும் நான்கு இடங்களில் சிதறி இருக்கிறதே! இதனால் நிர்வாகத்தில் சிரமங்கள் இல்லையா?

முதல: எந்தவிதமான சிரமமும் இல்லை. பாண்டிச்சேரியிலிருந்து மூணு மணி நேரப் பயணத்தில் காரைக்கால், மாஹேயும். ஏனமும் வேறு வேறு மாநிலங்களில் இருக்கின்றன. மூன்று இடங்களுக்கும் தனித்தனி நிர்வாகி (அட்மினிஸ்டிரேட்டர்) இருக்கிறார். அவர்களுக்கு நிறைய அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. மற்றப் பகுதி மக்கள் அனாவசியமாகத் தலைநகரான பாண்டிச்சேரிக்கு வந்து, தொல்லைப்பட வேண்டியதில்லை. அவரவர் ஊரிலேயே காரியங்களை முடித்துக் கொள்ளலாம். எனவே இதில் சிரமம் ஒன்றும் இல்லை.

நிரு: பாண்டியும், காரைக்காலுமாவது தமிழகத்திலேயே இருக்கின்றன. மாஹேயையும், ஏனமையும் ஏன் இன்னும் பாண்டிச்சேரியுடன் இணைத்து வைக்க வேண்டும். இவை இரண்டையும் அந்தந்த மாநிலங்களுடன் இணைத்துவிட்டால் என்ன?

முதல்: நான்தான் நிர்வாகப் பிரச்னை ஏதும் இல்லை என்கிறேனே! எங்கள் மாநில வாழ்க்கைத் தரம், தமிழகம், ஆந்திரம், கேரளத்தைவிட மேலானதாய் இருக்கும் போது, எதற்காக இந்த இணைப்பு என்கிற வேண்டாத வேலை!

நிரு: காரைக்காலுக்குத் தண்ணீர் காவிரியிலிருந்துதானே வரவேண்டும். அப்புறம் ஏன் நீங்கள் காவிரி நீர் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதில்லை?

முதல்: இதுவரை எங்களுக்கும் சேர்த்து, தமிழகமே பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வந்தது. இப்போது நாங்களும் நேரடியாய்ப் பங்கேற்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளோம். விரைவில் நாங்களும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளுவோம்.

நிரு: பாண்டிச்சேரி மாநிலத்துக்கெனத் தனியாய்ப் போக்குவரத்துக் கழகம் ஏன் இன்னும் ஆரம்பிக்கவில்லை? பஸ் முதலாளிகளுக்குத்தானே இதனால் லாபம்?

முதல்: இதுபற்றி 1969லேயே பரிசிலனை செய்யப்பட்டது. அப்போதைய அறிக்கையின்படி, தனிப் போக்குவரத்துக் கழகம் அமைப்பது லாபகரமானது இல்லை என்று சொல்லப்பட்டது. அதனால்தான் ஆரம்பிக்கவில்லை. இதில் ஒரு விஷயம் இருக்கிறது. இந்தச் சின்ன மாநிலத்தில் மொத்த 'ரூட்'களே குறைவு. இப்போதைய முறை மக்களுக்குச் சௌகரியமாகத்தான் இருக்கிறது. மக்களுக்குச் சௌகரியம் செய்வதுதான் அரசாங்கத்தின் பணி. அந்தச் சௌகரியத்தை

* "நான் முதலமைச்சர் என்பதால் என் குடும்பத்துக்கு உள்ள உரிமைகள் மறுக்கப்படக்கூடாது!"



அரசாங்க பஸ்கள் செய்தால் என்ன? தனியார் பஸ்கள் செய்தால் என்ன? இருந்தாலும் நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இதற்காகவே இன்னொரு முறை பரிசீலிக்கிறோம். லாபகரமானதாய் நடத்த முடியுமெனில் நிச்சயம் நடத்துவோம்.

திரு: பாண்டிச்சேரியில் நிறைய டூரிஸ்ட்டுகளைக் கவருகிற விஷயங்கள் இல்லையே! அதிக அளவில் சுற்றுலா பயணிகளை ஈர்க்க என்ன செய்யப் போகிறீர்கள்?

முதல்: பாண்டிச்சேரிக்கு பஸ் டிரான்ஸ்போர்ட் ஒன்றுதான். ரயில் அதிகமில்லை. ஏர்போர்ட் இல்லை. ஆனால் விரைவில் ஏர்போர்ட் வரவிருக்கிறது. இதற்காக இடம்கூட கொடுத்தாகிவிட்டது. ஐ.டி.டி.சி.யின் உதவியுடன் மூன்று நட்சத்திர ஓட்டல் உருவாகவிருக்கிறது. கடற்கரையை இன்னும் அழகுபடுத்தப் போகிறோம். படகுத் துறை எல்லாம் ஏற்படுத்தப் போகிறோம். இதெல்லாம் அதிக டூரிஸ்ட்டுகளை ஈர்க்கும்!

திரு: மின்சாரத்துக்கு நீங்கள் நெய்வேலியைத்தானே இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்?

முதல்: ஆமாம்! ஆனாலும் எங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய அளவு மின் உற்பத்தி செய்யும் சிறு மின் நிலையம் அமைக்கிற திட்டம் ஒன்றும் இருக்கிறது. அதற்கு, நிலக்கரி கடல் வழியாகத்தான் கொண்டுவரப்படவேண்டும். பாண்டிச்சேரி துறைமுகம் சிறியது. இப்போது அரியாங்குப்பம் பகுதியில் கடலை ஆழப்படுத்தும் திட்டம் இருக்கிறது. அது முடிவடைந்ததும் மின் நிலைய வேலைகள் துரிதமாய் நடைபெறும்.

திரு: தனி மாநிலமாய் இருந்தும், பாண்டிச்சேரியில் பெரிய தொழிற்சாலைகள் ஒன்றும் வரவில்லையே! தொழில் அபிவிருத்திக்கென நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள்?

முதல்: பாண்டிச்சேரியில் பெரிய கனரகத் தொழிற்சாலைகள் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் தொழில் வளர்ச்சிக்குக் குறைவில்லை. பாண்டிச்சேரியில் மட்டும் நாலு தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. காரைக்காலிலும் மாஹே, ஏனமிலும் கூட தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. மொத்தம் இங்குள்ள சிறு தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 2200!

திரு: இருந்தாலும் காரைக்கால் புறக்கணிக்கப்பட்ட பகுதி என்று குறை சொல்லப்படுகிறதே!

முதல்: நாலு பிள்ளைகளில் எந்தப் பிள்ளையைப் புறக்கணிப்பாள் தாய்? சொல்லுங்கள்! தொழில் தொடங்குபவர்களுக்கு, 'சிகப்பு நாடா' தேக்கம் இல்லாமல் உடனடி லைசென்ஸ் கிடைக்க வழி இருக்கிறது. முதலீட்டில் 25 சதவீதம்வரை மான்யமாய் அளிக்கிறோம். முதல் 5 வருஷங்களுக்கு முழுமையான விற்பனை வரிச் சலுகை. மின்சார கட்டண விகிதத்தில் சலுகை தருகிறோம். சுற்றுப்புற சூழல் பாதிக்காதிருக்கக் கருவிகளைப் பொருத்துகிற நிறுவனங்களை ஊக்குவித்து அவற்றுக்கு மான்யம் வழங்குகிறோம். பிப்டிக் என்கிற புதுவை அரசின் தொழில் வளர்ச்சி நிறுவனத்திலிருந்து எளிய கடன் வசதிகள் தருகிறோம். இப்போது பல்வேறு மாநிலத்தவரும் பாண்டிச்சேரியில் தொழில் ஆரம்பிக்க முன்வருகிறார்கள். காரைக்காலைப் பொறுத்தவரை டிரான்ஸ்போர்ட் ஒரு பிரச்னையாய் இருக்கிறது. பாண்டிச்சேரியிலேயே ஆரம்பித்தால், அதைத் தவிர்க்கலாமே என்று தொழில் அதிபர்கள் கருதுகிறார்கள். இந்த நிலைமையையும் சீராக்க முயற்சிகள் செய்து வருகிறோம்.

திரு: சமீபத்திய வெள்ளத்தால் பாண்டிச்சேரியில் பாதிப்பு எப்படி? நிவாரண உதவி பற்றிச் சொல்லுங்களேன்!

முதல்: பாண்டிச்சேரி புயலில் அகப்பட்டுக் கொண்டபோது, நான் திட்டக் கமிஷன் மீட்டிங் விஷயமாய் டெல்லியில் இருந்தேன். விஷயம் கேள்விப்பட்டதும்



• தொழிற்பேட்டை



● ரோடியர் மில்.....ஒரு வழியாய்ப் பிரச்னை முடிந்தது.

பாண்டிச்சேரியுடன் தொடர்புகொண்டேன். எங்கள் அரசு அதிகாரிகளும், அமைச்சர்களும் இரவு பகலாய்ப் பணியாற்றினதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதிக்குப் பொறுப்பேற்றுக் கொண்டனர். அதிகாரிகள் கூடவே இருந்தனர். ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை நிலைமை பற்றி என் அலுவலகத்துக்குத் தகவல் தந்தார்கள். இரண்டுமணி நேரத்துக்குஒருமுறைஎனக்குத் தகவல் வந்தது. பொதுப் பணித்துறை, போலீஸ் இவர்கள் என்னமாய் உழைத்தார்கள் தெரியுமா? அடித்துச் செல்லப்பட்ட ரோடுகள் 24 மணி நேரத்தில் சரி செய்யப்பட்டு, போக்குவரத்துத் தொடங்கியது! 80000 பேருக்கு ரேஷன் வழங்கினோம். 20000 பேருக்கு நான்கு நாட்களுக்கு உணவு வழங்கியிருக்கிறோம். வெள்ள நிவாரணப் பணிகளுக்கென மொத்தம் 7 கோடி தந்திருக்கிறார்கள்.

நிரு: பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதில் ஏதோ ஊழல் நடந்ததாய்க் குற்றம் சொல்கிறார்களே!

முதல்: அதெல்லாம் ஒன்றுமில்லை. கோடிக் கணக்கில் பணம் வழங்கப்படும் போது ஓரிருவர் அங்கே இங்கே தில்லு முல்லு பண்ணுவது சகஜம்தானே! அது மாதிரி ஒரு கேஸ் என் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டது. உடனடியாக சம்பந்தப்பட்டவரை சஸ்பெண்ட் செய்து விட்டேன்.

நிரு: உங்கள் ஒரு வருஷ சாதனை என்று எதைச் சொல்வீர்கள்?

முதல்: 7000 தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்னையான ரோடியர் மில்லைத் திறப்போம் என்று தேர்தலின்போது வாக்குறுதி தந்தோம். அதைக் கஷ்டப்பட்டு நிறைவேற்றி விட்டோமே! மத்திய பல்கலைக் கழகம் வந்திருக்கிறதே! இன்னும் பல. ஆனால் இதையெல்லாம் எங்கள் சாதனை என்று சொல்ல மாட்டோம்; எங்கள் கடமை, அவ்வளவே!

நிரு: காங்கிரஸ் உட் கட்சிப் பூசல் உங்கள் ஊரையும் விட்டு வைக்கவில்லை போல இருக்கிறதே! உங்கள் கட்சியினரே உங்களுக்கு எதிராகத் தீர்மானம் போட்டிருக்கிறார்களே!

முதல்: அது கிடக்கட்டும் விடுங்கள். அது பற்றி ஏதோ தகவல்கள் வந்திருக்கின்றன. நான் அவற்றைப் படித்துக்கூடப் பார்க்கவில்லை. கட்சி என்றால் பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். எனக்குக் கட்சிப் பிரச்னை பெரிசில்லை; மக்கள் பிரச்னைதான் பெரிசு.


நிரு: உங்கள் சகோதரருக்கு பஸ் ரூட்கள் வழங்குவதில் சலுகை காட்டியிருப்பதாய்ச் சொன்னார்களே!

முதல்: தம்பி! எங்கள் குடும்பம் பரம்பரை பரம்பரையாய்த் தொழில் செய்து வருகிற குடும்பம். இந்த பதவியில் உட்கார்ந்து கொண்டு, சலுகை பெற்று, பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற அவசியம் எங்களுக்கு இல்லை. இங்கே மெரிட்டுக்குத்தான் முதலிடம். பாருங்கள்! என் மகனுக்கு பி.காம் இடம் கிடைக்கவில்லை. சென்னையில் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறேன். இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

நிரு: (சிரித்தபடி) நாங்கள் இதை நம்பத் தயாராய் இல்லை. (கல்லூரியின் பெயரைச் சொல்லி) இந்தக் கல்லூரி கல்வித் தரத்துக்கும், கண்டிப்புக்கும் சென்னையில் பெயர் பெற்றது. நீங்கள் அங்கேதான் படித்தவர். எனவே நீங்கள் உங்கள் மகனை அங்கே சேர்த்திருக்கிறீர்கள். இங்கே இடம் கிடைக்கவில்லை என்று சொன்னால் அதை நாங்கள் எப்படி நம்புவோம்?

முதல்: ஒண்ணு மட்டும் சொல்கிறேன்! என் குடும்பத்தார், நான் முதல் அமைச்சர் என்கிற ஒரே காரணத்துக்காக அத்து மீறிச் சலுகைகள் பெறுவதும் கூடாது. அதே சமயம் என் குடும்பத்தினருக்கு இருக்கக் கூடிய உரிமைகள் நான் முதல் அமைச்சர் என்கிற காரணத்துக்காக மறுக்கப்படவும் கூடாது. அவ்வளவுதான்!

புகைப்படங்கள்: மனோ.



4



3



2

1



ஒரு புயல் வேகச் சுற்றுப் பயணம்

- மான்கரி – பிரெஞ்சு ஹோட்டல் நடத்துபவர்
- வி. சுப்பையா
- ஊசுட் ஏரி
- மகாகவியின் இல்லம்
- பிரெஞ்சு கழகத்தில் தமிழ்ப் பணி
- ஒருதரம், ரெண்டு தரம்.... தினமும் காலையில் ஏலம்.

பீச்

பீச் ஓரம் நெடுக மதிற் சுவர் எழுப்பப்பட்ட ஒரே கடற்கரை அநேகமாய்ப் பாண்டிச்சேரியாய்த்தான் இருக்கும். காலையில் கடற்காற்றை அனுபவித்தபடி வாக்கிங் போவது ஜாலி என்றால், அப்படி வாக்கிங் போகிறவர்களை மதில் மேல் உட்கார்ந்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும் ஜாலிதான். கடற்கரையின் ஒரு பகுதியில் தினமும் காலை வழக்கமாய் நடக்கிற ஒன்று மீன் ஏலம்! மீனவர்கள் கடலிலிருந்து அள்ளிக் கொண்டு வரும் மீன்களை மணலில் கும்பல், கும்பலாய்க் கொட்டி ஏலம் விடுகிறார்கள். ஆண்கள் பலர் ஒதுங்கி வேடிக்கை பார்க்க, பெண்களால், பெண்களுக்காக நடத்தப்படும் ஏலம் இது. மொத்தமாய் மீன்களை வாங்கி, கடைத் தெருக்களில் விற்கிறார்கள் பெண்கள்.

பாரதியார் வீடு..

பாண்டிச்சேரியில் ஈஸ்வரன் கோவில் தெருவில் இருக்கிறது மகாகவி பாரதி வாழ்ந்த வீடு. வ்ராந்தாவைத் தாண்டி உள்ளே போனால் திறந்த முற்றம். உள்ளே வாசகசாலை வைத்திருக்கிறார்கள். சாதாரணமான ஓட்டு வீடுதான். ஒரே ஒரு அறையில் பாரதி சம்பந்தமான கடிதங்கள், புகைப்படங்கள், பத்திரிகை கட்டிங்குகள் இவை வைத்திருக்கிறார்கள். பாரதியுடன் இருந்த தலைவர்கள், பாரதியின் சொந்தக்காரர்கள் எல்லாருடைய போட்டோக்களும் இருக்கின்றன. தவிர, சாதாரண பெஞ்சைப் போல சுமார் இரண்டரை மடங்கு நீட்டத்துக்கு ஒரு மர பெஞ்ச். கைவைத்தால் சொர சொர என்று செதில்கள் குத்துகின்றன. 'இதுதான் பாரதியார் உபயோகப்படுத்தின பெஞ்ச்' என்கிறார்கள். பாரதியார் இந்த வீட்டை விட்டுக் கிளம்பின போது, இதை எதிர் வீட்டிலிருந்த செட்டியாரிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டாராம். செட்டியார் குடும்பத்தினர்தான் இந்தப் பெஞ்சை அரசாங்கத்துக்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது பாரதியார் வீட்டில் லைப்ரரியைப் பார்த்துக் கொள்பவர், "பாரதியார் மாடிக்குப் போய், சுவரேறி, மாடியில்



5



6

இருக்கிற அறையின் மேல் இருக்கிற திறந்த வெளியில் உட்கார்ந்து கொண்டு தியானம் பண்ணுவார்'' என்று சொன்னார்.

ஆரோவில்!

'இன்டர்நேஷனல் நகரமாய் அமைக்கும் பெரிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அற்புதமான திட்டம் இன்னும் முழுமையாய் நிறைவேறினபாடில்லை. பிரும்மாண்டமான பூமி உருண்டை மாடலில் ஒரு தியான மண்டபம் உருவாகி வருகிறது. இடையிலே, ஆரோவில் நிர்வாகத்தில் ஏதோ தகராறு. கட்டிட வேலைகள் பாதியில் நிற்கின்றன. விஷயம் சுப்ரீம் கோர்ட் வரை போயிருக்கிறது. மத்திய அரசாங்கம் ஒரு அட்மினிஸ்ட்ரேட்டரைப் போட்டு நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறது இப்போது.

பிரெஞ்சு இன்ஸ்டிடியூட்!

1954 ல் நேருவின் கனவை நனவாக்குகிற மாதிரி உருவாக்கப்பட்டதுதான் பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட்.' இங்கே இரண்டு விதமான பணிகள் நடக்கின்றன. ஒன்று வானவில்லின் ஏழு நிறங்களையும் குழைத்து, பல ரகமான தேசப் படங்கள் தயார் செய்வது. இன்னொன்று தமிழ்ப் பணி. பீரோ, பீரோ வாய் ஓலைச் சுவடிகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். எண்ணத் தொடங்கினால் பன்னிரெண்டாயிரம்வரை போகுமாம். இங்கே கோபாலய்யரும், மற்றவர்களும் எல்லா ஓலைச் சுவடிகளையும் கருத்துடன் படித்து, புத்தகமாய்க் கொண்டுவர மெனக்கெடுகிறார்கள். இங்கிலீஷிலும், பிரெஞ்சிலும், தமிழிலக்கியங்களை மொழி பெயர்க்கிறார்கள். தமிழ் இலக்கணத்துக்கென தனி அகராதி போட்டிருக்கிறார்கள். ஓலைச் சுவடிகளைப் படிக்கிறது கஷ்டமா? என்று கேட்டால், 'இருக்காதா பின்னே?' புள்ளியே இருக்காது. எழுத்தாணியால் புள்ளி வைத்தால் ஓலையில் ஓட்டை விழும்; 'கொம்பு' களைக்கூட இஷ்டப்படி எழுதியிருப்பார்கள். படிப்பது கஷ்டம்தான். ஆனாலும் பழகிவிட்டது. ஓலைச் சுவடிகளைப் படிக்கிறதைவிட, அவற்றைப் பாதுகாப்பது இருக்கிறதே அதுதான் கஷ்டம். லெமன் கிராஸ் எண்ணெயைத் தடவி, துடைத்து வைக்கிற வேலையை ஒரு பீரோவில் ஆரம்பித்து 12,000 சுவடிகளுக்கும் ஒரு ரவுண்டு முடிக்க ஒரு வருஷம் ஆகிவிடும். இத்தனை சுவடிகளையும் தேடித் தேடிப் பல ஊர்களுக்கும் அலைந்த கதையைக் கேட்கையில் இவர்களுக்கு இந்தியாவில் இருக்கிற அவார்டுகளையெல்லாம் அள்ளித் தரலாம் என்று தோன்றுகிறது.

108 யானைகள்!

பாண்டிச்சேரியில் 1975 முதல் செயல்பட்டு வரும் ஆன்மீக அமைப்பு 'ஓங்காரம்!' இவர்கள் இதுவரை 1008 பெண்கள் கலந்து கொண்ட குத்து விளக்கு பூஜை, 1008 தம்பதிகள் கலந்து கொண்ட சிவசக்தி பூஜை, 108 துளசி பூஜை என்று பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி முடித்து, 110 வது நிகழ்ச்சியாக 108 கஜ பூஜை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்! இது பற்றிக் காஞ்சிப் பெரியவரை அணுகின போது, அவர் ஆசீர்வதித்து, பூஜைக்கு ஆண் யானைகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுரையும் அருளினாராம்!

வில்லியனூர் மாதா!

பாண்டிக்கு மேற்கே 6 வது மைலில் இருக்கிறது வில்லியனூர். 1867 லிருந்து இங்கே ஒரு மாதா கோவில் உள்ளது. சுற்றுப்புற ஊர்களிலிருந்து மக்கள் ஜாதி, மதம் பார்க்காமல் வந்து பிரார்த்தனை செய்கிறார்கள். பிரார்த்தனை நிறைவேறினதும் காணிக்கை செலுத்தத் தவறுவதில்லை. குழந்தை பிறந்ததற்காகத் தொட்டில், பரீட்சையில் பாஸ் பண்ணினதற்காக பேனா, ஊனம் நேரானதற்காக உடல் உறுப்பின் வடிவங்கள் என்று பல. தன்னிடம் வரும் நோயாளிகளைக் காப்பாற்றுவது அன்னையின் அருளே என்று அன்னைக்கு ஸ்டெத்தாஸ்கோப் காணிக்கை செலுத்தியிருக்கிறார் ஒரு டாக்டர்! சர்ச் ஒன்றுக்கு எதிரில் இந்துக் கோவில்களில் உள்ள தெப்பக்குளம் ஸ்டைலில் ஒரு திருக்குளம் அமைத்து அதன் நடுவிலே மாதாவின் உருவம் இடம் பெற்றுள்ளது இங்கு மட்டுமே. இந்தக் குளத்தைச் சுற்றி வருகிறார்கள்; தேவாலயப் பிரார்த்தனைக்குப் பின் குளத்து நீரில் கொஞ்சம் அருந்துகிறார்கள்; வெளியூர்களுக்குக்கூட குளத்து நீரைப் பார்சலில்

அனுப்புகிறார்கள்!

ஜிப்மர்

திடீரென பிரச்னைக்குள்ளானது ஜிப்மர் ஆஸ்பிடல். ஏன்? அகில இந்திய மருத்துவக் கழகம், ஜிப்மரின் அங்கீகாரத்தை ரத்து செய்துவிடலாம் என அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்ததுதான் இதற்கான காரணம். திடீரென அங்கீகாரத்தை ரத்து பண்ண வேண்டிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது? மருத்துவக் கல்லூரியில் ஆசிரியர்கள் இல்லாமலேயே பல இடங்கள் காலியாய் இருந்தது இதற்குக் காரணம். காலியிடங்களை நிரப்பாவிட்டால், பாடங்கள் நடத்துவதில் பிரச்னைகள் வருமில்லையா? காலியிடங்கள் எப்படி ஏற்படுகின்றன? ''இங்கே நியமனங்கள் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலமாக. ஆனால் இங்கே அப்பாயிண்ட்மெண்ட் ஆன மற்ற மாநிலத்தவர்கள் வந்த கையோடு ஆளைப் பிடித்து டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். இல்லையெனில் வேலையையே ராஜினாமா பண்ணி விட்டுப் போய்விடுகிறார்கள். இது ஒரு தொடர்கதையாகிவிட்டதால் ஒன்றும் செய்ய முடிவதில்லை'' என்றார் ஒருவர்.

ஒருவழியாக இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைத்து அங்கீகாரத்தை ரத்து செய்யும் ஐடியாவையும் கைவிட்டுவிட்டார்கள். எப்படி? யூ.பி.எஸ்.ஸி. மூலமாகத்தான் என்றாலும், தமிழ்நாடு பாண்டிச்சேரி டாக்டர்களுக்கு நியமனத்தில் முன்னுரிமை தருவதின் மூலம் பிரச்னை சமாளிக்கப்படவிருப்பதாய்த் தெரிகிறது.

கொசுறு: மொத்தம் ஜிப்மரில் 65 சீட்கள் இவற்றில் 15 பாண்டிச்சேரி மாணவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது. மீதி 50 சீட்களுக்கு அகில இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் போட்டி போடுகிறார்கள்.

ஊசுட் ஏரி

பாண்டிச்சேரியின் முக்கியமான பிரம்மாண்டமான ஏரி ஊசுட் ஏரி! பிரெஞ்சுக்காரன் நன்றாய்த் திட்டமிட்டுக் கட்டின ஏரி. மதுராந்தகம்மாதிரிபிரச்னைவராதபடி,வேலை நடந்திருக்கிறது. தண்ணீர் மட்டம் அபாய கட்டத்தை நெருங்கினால், ஏரிக்குள் தண்ணீர் நுழைவதையே நிறுத்தி தண்ணீரை வேறு இரண்டு வழிகளில் திருப்பி விட்டுவிடலாம்!

* ஆரோவில்லில் உருவாகி வரும் தியானக் கூடம்.



இதை ஒரு டூரிஸ்ட் ஸ்பாட்டாக மாற்றவும், படகு விடவும் திட்டம் இருக்கிறதாம்.

அரவிந்தர் ஆசிரமம்

'பின்'னிலிருந்து 'பியானோ' வரை என்று சொல்லும்படி அத்தனையையும் அரவிந்தர் ஆஸ்ரமத்தினரே செய்துவிடுகிறார்கள். ஆஸ்ரமத்தில் நுழைய ஒரே கண்டிஷன்: துளி சத்தம் கூடப் போடக் கூடாது. அன்னையின் சமாதியும், அரவிந்தரின் சமாதியும் அடுத்தடுத்து இருப்பதாய்த்தான் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மை அது இல்லை. அரவிந்தர் சமாதிக்கு மேலேதான், அன்னையின் சமாதி இருக்கிறது. சமாதிக்குச் செய்யப்படும் மலர் அலங்காரம் பற்றி ஒரு வண்ண போட்டோ ஆல்பமே தயாரிக்கலாம். மனத்தைக் கொள்ளை கொள்கிற அத்தனை அழகு!

ஆனந்தரங்கம் பிள்ளை


சென்னை பெரம்பூரில் 1709ல் பிறந்த இவர் தம் அப்பா திருவேங்கடம்பிள்ளையுடன் பாண்டிச்சேரிக்குப் போய், அங்கே பிரெஞ்சுக் கவர்னரான டியூப்ளெயின் நெருக்கமான ஒருவரானார். 1736 முதல் 1760 வரை இவர் எழுதிய டைரியில் பல பரபரப்பான உண்மைகள் தெரிய வருகின்றன. அந்தக் காலத்திய பாண்டிச்சேரி பற்றிச் சரித்திர பூர்வமான பல விஷயங்களைச் சொல்கிறது இந்த டைரி. 'ஆ. ரங்கப்பிள்ளை' என்கிற ரங்கப் பிள்ளை வீதியில் 69–ஸி எண்ணுள்ள வீட்டில்தான் ஆனந்தரங்கம் பிள்ளை வசித்தார். இன்றைக்கும் அதை 'ஆனந்த ரங்கம் பிள்ளை மாளிகை' என்றே அழைக்கிறார்கள். அந்த வீடே பிரெஞ்சுக் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இந்த வீட்டில் இப்போது பிள்ளையின் ஏழாவது தலைமுறையினர் வசிக்கிறார்கள். இன்றைக்குக்கூடப் பாண்டிச்சேரி வருகிற பிரெஞ்சுக்காரர்கள் ஆனந்தரங்கம்பிள்ளையின் வீட்டைப்பார்க்க ஆவலுடன் போகிறார்கள்.

பாரதிதாசன் வீடு

பெருமாள் கோவில் தெருவில் 95ம் நெம்பர் வீடுதான் பாரதிதாசன் வீடு. அங்கேயும் நூலகம் வைத்திருக்கிறார்கள். பாரதிதாசன் ஜிப்பா, கைத்தடி, கண்ணாடி, சனிசேர் என்று அவர் உபயோகித்த பொருட்கள் நிறையவே வைத்திருக்கிறார்கள். இங்குள்ள 'லைப்ரேரியன்' வசந்தா, பாரதிதாசனின் பெண்ணேதான்! அரசாங்கம் இவர் வீட்டை எடுத்துக் கொண்டபோது, அவர்கள் கொடுத்த பணம் கடன் அடைக்கவே சரியாக இருந்ததால், கோர்ட்டில் கேஸ் போட்டு அதிகப் பணம் வாங்கிய கதையை விலாவாரியாய்ச் சொன்னார்.

பிரெஞ்சு ஸ்டைல் ஹோட்டல்!

பாண்டிச்சேரியில் உள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கும் பிரான்சிலிருந்து திரும்பின





* மியூஸியத்திலுள்ளே பிரெஞ்சு தள்ளு வண்டி

* ஒல்லியான போலீஸ்காரர்

இந்தியர்களுக்குமாய்ச் சில பிரெஞ்சு ரெஸ்டாரண்டுகள் இருக்கின்றன. இவற்றில் ரொம்ப வயசானது ஹோட்டல் டி யூரோப். ரெஸ்டாரண்டை நடத்தி வருபவர் 'மாஸ்கரி' என்ற பிரெஞ்சுக்காரர். வயது சுமார் 80. இதை 95 வருஷங்களுக்கு முன், மாஸ்கரியின் அப்பா ஆரம்பித்து நடத்தி வந்தாராம். மீன், இறைச்சி, சிக்கன் இவற்றில் பிரெஞ்சு மணம் கமழ, விதம் விதமாய் ஐட்டங்கள் தயார் செய்கிறார் இங்கே. மாஸ்கரியின் மனைவி, வாரிசுகள் எல்லாம் பிரான்ஸில்தான். வருஷத்துக்கொரு தடவை வருவார்களாம். வரும்போது, டின்னில் அடைத்த பன்றி இறைச்சியிலிருந்து எல்லா சாமான்களும் கொண்டு வந்து கொடுப்பார்களாம். அவர் தயாரிக்கிற பிரெஞ்சு உணவு வகைகளின் பெயர்கள் புரியவுமில்லை, வாயில் நுழையவும் இல்லை! ஒரு சாப்பாடு ரூ 55 ஆச்சே!

புதுவையிலிருந்து இனிப்பான சேதி!

நம் நாட்டில் கூட்டுறவுத் துறையில் ஒரு அமைப்பு இருக்கிறதென்றால், அதில் ஊழல் மெத்தனம் போன்றவை இருக்கும். விதிவிலக்குகள் உண்டு. அந்த விதிவிலக்குகளில் ஒன்று பாண்டிச்சேரியில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை. ஆரம்பித்த ஒரு வருடத்திலேயே உயர்ந்த ரக சர்க்கரையை உற்பத்தி செய்து 'சபாஷ்' பெற்றிருக்கிறது. 800 பேர்கள் பணியாற்றும் இந்தத் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குனர் ராமதாஸ் தொழிலாளர்களிடம் வேலை வாங்குவதில் மன்னர். தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளுக்கு அடிக்கடி சென்று தொழிலாளர்களின் பிரச்னைகளில் பங்கு கொண்டு, அவர்களுக்கு ஒரு ஈடுபாட்டை உண்டாக்கியிருக்கிறார். சமீபத்தில் கரும்பு விலையை உயர்த்த வேண்டும் என்ற கரும்பு பயிரிடும் விவசாயிகள் மாநாடு நடத்தியபோது, "மாநாடு வெற்றியடைய வாழ்த்துக்கள்" என்று இவர் அனுப்பிய தந்தியைக் கண்டு விவசாயிகள் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். "அவர்கள் பிரச்னைகளுக்காகப் போராடுகிறார்கள். வாழ்த்துவதில் என்ன தவறு?" என்கிறார் ராமதாஸ்.

ஒரு 'சொல்தா'வுடன்!

இன்றைக்கு பாண்டிச்சேரியில் நிலங்கள் விலை ஏறிவிட்டன. கடைக்காரன் கேட்ட தொகையை எந்தவித பேரமும் இல்லாமல் கொடுப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். இதனால் பாண்டிச்சேரியின் பொருளாதாரமே கொஞ்சம் ஆடித்தான் போயிருக்கிறது. காரணம் சுமார் எட்டாயிரம் பேர் இன்று பாண்டிச்சேரியில் பிரான்ஸ் நாட்டிலிருந்து பென்ஷன் வாங்கிக் கொண்டிருப்பதுதான். இதில் 'சொல்தாக்கள்' எனப்படும் ராணுவத்தினர்தான் அதிகம். மூன்று மாதத்திற்கொருமுறை குறைந்தது ஒன்பதாயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் வரை பென்ஷன் பெறும் ஆட்கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட நாற்பதாயிரம் ரூபாய் பென்ஷன் பெறும் அடால்ஃப் பெஞ்சமின் என்ற 'சொல்தா'வைச் சந்தித்தோம். "1965ல் 15 வருட ராணுவ சேவையை முடித்துக்கொண்டு இந்தியாவுக்கு வந்தேன்" என்றார்.

"வருமான வரி கட்டுகிறீர்களா?" என்று கேட்டதற்கு "பிரான்ஸில் கட்டுகிறேனே" என்றார் அடால்ஃப். வரியைக் கழித்துக் கொண்டுதான் பென்ஷன் அனுப்புகிறதாம் பிரெஞ்சு அரசு.

"அடால்ஃப் பரவாயில்லை, நிலங்களையும் வீடுகளையும் வாங்கிவிட்டார். ஆனால் சில பென்ஷன்தாரர்கள் பென்ஷன் பாஸ் புக்கை அடமானம் வைத்துக் குடித்தே சாகிறார்கள்!" என்றார், கூட வந்த பாண்டிவாசி ஒருவர். பரிதாபம்தான்.

வி. சுப்பையா

புதுவையில் எந்த ரிக்ஷாக்காரரிடமும் போய் 'வி. எஸ்.' என்று அழைக்கப்படும் வி. சுப்பையாவின் வீட்டிற்குப் போக வேண்டும் என்றால் உடனே அழைத்துச் சென்று விடுவார். அத்தனை பிரபலம். பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திலிருந்து புதுவையை மீட்க நடந்த விடுதலைப் போராட்டத்தில் தோழர் வி. சுப்பையாவின் பணி மகத்தானது. 1936ல் நடந்த தொழிலாளர்கள் போராட்டம், பின்னர் 1954 வரை தொடர்ந்த பல இயக்கங்கள் ஆகியவற்றில் இன்னல்களை அனுபவித்து இறுதியில் வெற்றி கண்டவர் தோழர் வி. எஸ். புதுவையில் உள்ள மூன்று மில் தொழிற்சாலைகளின் தொழிலாளர் போராட்டம்தான் பின்னர் விடுதலைப் போராட்டமாக வெடித்தது. 1947ல் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு புதுவையில் போராட்டம் தீவிரமாகியது. வி. எஸ். அவர்கள் காந்தி, நேரு ஆகியோரிடம் தொடர்பு வைத்துக் கொண்டு அதே சமயம் கம்யூனிஸ கோட்பாடுகளில் முழு நம்பிக்கையும் வைத்துச் செயல்பட்டவர்.

இந்தியாவில் எங்கும் தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று சட்டம் இல்லாத அந்தக் காலத்திலேயே பிரெஞ்சு அரசிடம் புதுவையில் போராடி எட்டு மணி நேர வேலை நேரத்தை

அமுலாக்கியவர் வி.எஸ். 1950ல் பிரெஞ்சு ராணுவம் இவர் வீட்டிற்கும், அச்சகத்திற்கும் தீவைத்து சாம்பலாக்கியது. நாடு கடத்தி பிரெஞ்சு அரசு உத்தரவிட்டபோது தலைமறைவாய் இருந்தபடியே விடுதலை இயக்கத்தைத் தொடர்ந்தார்.

ஒரு காலகட்டத்தில் பாண்டிச்சேரி தொகுதியிலிருந்து பிரெஞ்சு பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வி. எஸ். பிரெஞ்சு ஏகாதிபத்தியம் புதுவையிலிருந்து வெளியேற வேண்டும் என்று பாரிஸிலேயே அவையில் முழக்கமிட்டார். புதுவை இந்தியாவுடன் இணைந்த பிறகு, பாண்டியில் இருந்த ஒரு கூட்டு மந்திரி சபையில் அமைச்சராகவும் இருந்திருக்கிறார்.

24 மணி நேரத்தில்!

பாண்டி மக்களின் நெடு நாளைய போராட்டம், பாண்டிக்கு ஒரு பல்கலை கழகம் கொண்டு வருவதுதான். மத்திய அரசு பாண்டி மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு மத்திய பல்கலை கழகத்தைப் பாண்டியில் அமைத்திருக்கிறது. இதற்குத் துணைவேந்தர் நம்ம ஊர் வேங்கட சுப்பிரமணியன்தான். காரியங்கள் மளமளவென்று நடைபெறுகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கல்வியாளர்கள், துணைவேந்தர்கள், பல்கலை கழக மான்ய அதிகாரிகள் ஆகியோர் அடிக்கடி இப்போது பாண்டிச்சேரிக்கு விஜயம் செய்து பல்கலைக் கழக வளர்ச்சிக்கு உதவிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பல்கலைக் கழகம்தான் தென்னிந்தியாவில் முதல் மத்திய பல்கலைக் கழகம். 32 துறைகள் (faculties) இருக்கப் போகின்றன. இந்தப் பல்கலைக் கழகத்தின் ஆணைக்குள் அந்தமான், லட்சத் தீவு போன்றவைகளும் அடங்கும். தற்போது ஒரு ஹோட்டலில் அலுவலகம் வைத்திருப்பதைப் பல பேர் கிண்டலாகச் சொல்கிறார்கள். இது பற்றி வேங்கடசுப்பிரமணியத்தைக் கேட்டபோது, "நாங்கள் தற்காலிகமாக இருக்கும் ஹோட்டல் மண்டபம் கல்யாணத்திற்கும், உபந்யாஸங்களுக்கும் வாடகைக்கு விடப்படுவது, மங்களகரமாக நிறைய விஷயங்கள் நடந்த மண்டபத்தில்தான் எங்கள் அலுவலகம் தொடங்கி இருக்கிறது" என்றார்.

இந்தப் பல்கலைக் கழகத்திற்காகப் பாண்டி சென்னை சாலையில் மரக்காணம் அருகில் கடற்கரை ஓரமாக 1500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களைக் கையகப்படுத்தியிருக்கிறார்கள். நிலங்களைக் கையகப் படுத்துவது என்பது எளிதான காரியம் அல்ல. துணைக் கலெக்டர் ஒருவர் துணைவேந்தரிடம் "நிலமில்லாதவர்களுக்குத்தான் நிலம் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறதே" என்றாராம். "நாங்களும் நிலமற்றவர்கள்தானே" என்று வேங்கடசுப்பிரமணியம் பதில் சொன்னவுடன் அசந்து போய்விட்டாராம்! 24 மணி நேரத்தில் நிலங்களைக் கையகப் படுத்தும் வேலை முடிந்தது பெரிய சாதனை என்கிறார்கள் பாண்டி அதிகாரிகள்:



அமுதசுரபி அமுதசுரபி அமுதசுரபி அமுதசுரபி அமுதசுரபி அமுத

KONARK TV

(A Govt. of Orissa Enterprise)

(கொனார்க் டிவி)

தவணைமுறையில்

தற்பொழுது பாண்டிச்சேரி மாநிலத்தில் உங்கள் அபிமான

அமுதசுரபி

கூட்டுறவு அங்காடிகளில் விற்பனையாகிறது.
விபரங்கள் அறிய உங்கள் அருகிலுள்ள அமுதசுரபி
அங்காடியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.



கொனார்க் டிவியின் சிறப்பு அம்சங்கள்:

- உலகப் புகழ் பெற்ற ஜெர்மனி கிரண்டிக் நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் தயாரிக்கப்படுபவை.
- கண்ணாடியில் முகம் பார்ப்பது போன்ற ஒளித்தெளிவு.
- எதிரே அமர்ந்து கேட்பது போன்ற ஒலிச் சிறப்பு.
- உள்ளேயே இணைக்கப்பட்ட வோல்டேஜ் ஸ்டெபிலைசர்
- ஒரிசா அரசாங்கத்தின் ஒரு பிரத்தியேக தயாரிப்பு.
- வீடியோ கம்ப்யூட்டர் மற்றும் ''டெலிடெக்ஸ்'' மூலம் இயக்கக் கூடியது.
- எலக்ட்ரானிக் டியூனர்

இன்றே உங்கள் அருகாமையிலுள்ள அமுதசுரபி அங்காடிக்கு விஜயம் செய்து
இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

கிளை அலுவலகம்

கொனார்க் டெலிவிஷன் லிமிடெட்

189, மவுண்ட் ரோடு, சென்னை-600 006 போன்: 81921/454161

விற்பனை மற்றும் சேவை நிலையம்

சன்பீம் எலக்ட்ரானிக்ஸ் 137, காந்தி ரோடு, பாண்டிச்சேரி-605 001,

விற்பனை ஏஜன்ட் :

லட்சுமி ஏஜன்சிஸ் 109, ஜவஹர்லால் நேரு தெரு, பாண்டிச்சேரி--605 001.

அமுதசுரபி அமுதசுரபி அமுதசுரபி அமுதசுரபி அமுதசுரபி அ.

மியூஸியம்

புராண காலம் வேதபுரியிலிருந்து, ஃப்ரெஞ்சு கால புதுவைவரை பாண்டிச்சேரிக்குப் பரபரப்பான வரலாறு உண்டு. அதை முழுமையாகக் 'கெஸட்டியர்' என்றபெயரில் ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட புத்தகமாய்ப் போட்டிருக்கிறார்கள். இதை உருவாக்கும் வேலையைச் செய்து முடித்திருப்பவர், சிரைல் ஆண்டனி என்கிற புதுவை அரசின் அதிகாரி. இவருக்குத் தமிழ்நாடுதான். ஆனால் புதுவை பற்றி நன்கு அறிந்தவர். இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டதும், பலஇடங்களையும்சுற்றிப்பார்த்து, ஆராய்ச்சிகள் பல செய்து, பல சரித்திர ஆதாரங்களைத் திரட்டி ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறார். இந்த ஆய்வின்போது கிடைத்த பல்வேறு பொருட்களுடன், மற்றும் சில பொருட்களையும் சேர்த்து மியூஸியம் அமைக்கப்பட்டுள்ளது. டியூப்ளே உபயோகித்த படுக்கை, சாப்பாட்டு மேஜை, உணவுத் தட்டுகள் என்று எல்லாவற்றையும் பார்க்கலாம். ஒரு பகுதியில் நிறைய ஈட்டிகள், வாட்கள் எல்லாம் வைத்திருந்தார்கள். இரண்டு மூன்று பேர் சேர்ந்து தூக்கினால்தான் முடியும் என்கிற மாதிரி இருந்தன ஈட்டிகள். இதை எப்படி அந்தக் கால சிப்பாய் தூக்கி எறிந்திருப்பான் என்று கற்பனை பண்ணிப் பார்த்தோம். விளங்கவில்லை! பெரிய சைஸ் வாளைக் கஷ்டப்பட்டுத் தூக்கி எதிரி தலைமேலே வைத்துவிட்டால் போதும். அதன் கனத்திலேயே ஆளை இரண்டு கூறு போட்டுவிட்டுத் தரைக்கு வந்துவிடும்! ஓரிடத்தில் புஷ்—புஷ் என்று ஒன்றைக் காட்டினார்கள். பிரெஞ்சுக் காலத் தள்ளு வண்டியாம். பாண்டிச்சேரியில் அன்று ரொம்பப் பாபுலராம். பாரதியார் கூட இதில் போயிருக்கிறாராம்! சொன்னார்கள். மனிதர் இழுத்து, மனிதர் தள்ளும் வண்டியில் பாரதியார் போயிருப்பாரா?

ஒரு டூரிஸ்டின் பார்வையில்...

ஒரு டூரிஸ்ட்டின் கண்ணோட்டத்தில் பாண்டிச்சேரி எப்படி இருக்கிறது? அணுகினோம் ஒரு ஃபாரின் பெண்மணியை. பெயர்: ரஜினு. வயது 22. கூட வந்திருந்தவர் பெயர் சூஸனு. வயது 20. இரண்டு பேரும் சுவிஸ் பிரஜைகள். இது இரண்டாவது இந்தியன் டிரிப். கொடைக்கானலிலிருந்து, மதுரையில் சுற்றிவிட்டு, நேரே பாண்டிச்சேரி வந்து இரண்டு நாளாகிறது. அரவிந்தர் ஆஸ்ரமத்துக்குப் போனார்களாம். 'ஓ! இட்ஸ் எ லவ்லி ப்ளேஸ்! லவ்லி ஃப்ளவர்ஸ்!' என்று பூவாய்ச் சிரித்தார் சூஸனு. 'வேறு என்ன பார்த்தீர்கள்?' என்றதற்கு 'வேறே என்ன இருக்கிறது பார்க்க, ஆஸ்ரமத்தைத் தவிர?' என்று பதில் கேள்வி போட்டனர்.

போலீஸ், போலீஸ்!

பாண்டிச்சேரி போலீஸ்காரர்களின் சீருடை தமிழக போலீஸ் மாதிரிதான் என்றாலும்


* ஸ்விஸ் டூரிஸ்ட் ரஜினு

தொப்பி மட்டும் பாரீஸ் பாணி. அகலமான டபராவைக் கவிழ்த்தாற்போல் சிவப்பு நிறத் தொப்பி. பாண்டிச்சேரி ஜனத்தொகையோடு ஒப்பிடும்போது போலீஸாரின் எண்ணிக்கை அதிகம்.

ஆல் இந்தியா ரேடியோ!

தமிழ், இந்தி, ஆங்கிலம் தவிர பிரெஞ்சிலும் நிகழ்ச்சிகள் வழங்கும் ஒரே இந்திய வானொலி நிலையம் பாண்டிச்சேரி வானொலி நிலையம்தான். இதன் ஒலிபரப்பு பாண்டிச்சேரி தவிர தென் ஆற்காடு மாவட்டத்துக்காரர்களுக்கும் கேட்கும். நிலையத்தின் இன்றைய டைரக்டர் திருமதி அகிலா சிவராமன். "எங்கள் 'வலிவும் பொலிவும்' என்கிற உடல் ஆரோக்கியம் பேணும் நிகழ்ச்சி எவ்வளவு பாபுலர் தெரியுமா?" என்று சந்தோஷமாகக் கேட்ட அவருக்கும் ஒரு குறை: ரேடியோவில் நடத்தப்படும் கல்வி நிகழ்ச்சிகளைப் பள்ளிக் கூடங்கள் முழுமையாய்ப் பயன்படுத்திக் கொள்வதில்லை என்பது.

எழுத்தாளர் சங்கம்.

புதுச்சேரி மாநில இளம் எழுத்தாளர் சங்கம் ஒன்று இருக்கிறது. தவிர பிரஸ் கிளப்பும் உண்டு. எழுத்தாளர் சங்கத்தில் பாதிக்கு மேல் தாகூர் கலைக் கல்லூரி மாணவர்கள். அனைவரும் வளர்ந்து வரும் நல்ல எழுத்தாளர்கள். பேட்டி, கட்டுரைகள், துணுக்குகள், சிறுகதைகள், கவிதைகள் படைப்பதுடன் பல வாரப் பத்திரிகைகளுக்கு நிருபர்களாகவும் பணியாற்றுகிறார்கள். சங்க நிர்வாகம் அரு. அழ. அண்ணாமலை கையில். கவி அரங்கங்கள், பட்டி மன்றங்கள், பல அமைப்புக்களுடன் இணை சேர்ந்து நடத்துகிறார்கள். பல பட்டங்களையும் பரிசுகளையும் பெற்ற எழுத்தாளர்களைக் கொண்ட சங்கம் இது. குழந்தை இலக்கிய மன்றமும், நகைச்சுவை மன்றமும் சிறப்பாகப் பணிபுரிகின்றன.


பாண்டி பிரஸ் கிளப்பில் பிரபலஸ்தர்களின் சொற்பொழிவு, நேருக்கு நேர் நிகழ்ச்சிகள் தவிர வளரும் பத்திரிகையாளருக்குப் பயிற்சி கொடுப்பது முக்கியமான ஒரு பணி. பிரஸ் கிளப்பை ஆரம்பித்து வைத்தவர், ஆளுனர் திவாரி. தலைவர்: பார்த்தசாரதி (யு.என்.ஐ.) செயலாளர்: தணிகைத் தம்பி (தினமலர்.)

—சந்திரமௌலி.

புகைப்படங்கள்: மனோ.


பஞ்சாப்
பயங்கர வாதிகள்


காதுலயே சாத்திக்கவா!
பஞ்சாப்


RAMA
ஐந்து காட்சிகள்
இந்த மாதிரி வளர்ச்சிக்கு ஒரு குறையுமில்லே!
தமிழ் நாடு
தொழில் வளர்ச்சி



கல்கி

1986 ஜனவரி 12

மலர் 44 இதழ் 24

குரோதன மார்கழி 28



மாநில அரசுகள் — மத்திய அரசின் கிளைக் காரியாலயங்கள்!

மத்திய மாநில உறவுகளை ஆராய அமைக்கப்பட்டது ஸர்க்காரியா கமிஷன். அண்மையில், சென்னைக்கு வந்திருந்த ஸர்க்காரியா பல மாநிலங்களிலிருந்து பல்வேறு பட்டவரிடமிருந்து தங்களுக்குக் கருத்துக்கள் கிடைத்துள்ளன என்றும் குறிப்பாக நிதி விஷயத்தில்தான் மாநிலங்கள் அதிக அதிகாரம் கோருகின்றன என்றும் கூறியுள்ளார். இது உண்மையாயின் மிகவும் வருந்தத்தக்க விஷயமே.

மத்திய ஆட்சி வேறு, மாநில ஆட்சி வேறு என்று புரிந்து கொண்டு இன்று வாக்காளர்கள் வோட்டுப் போடக் கற்றுக் கொண்டுவிட்டதால், பிராந்தியக் கட்சிகள் மாநிலங்களில் பதவிக்கு வருவது சாத்தியமாகிறது. இதனால் நிதி விஷயத்தில் இன்னும் கொஞ்சம் அதிகாரம் கிடைத்தாலே போதும், வெளுத்து வாங்கிவிடலாம் என்ற எண்ணம் சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம். இது மிகவும் தவறான கணிப்பு.

மத்தியிலே 38 ஆண்டுகளாக இருந்து வருகின்ற காங்கிரஸ் ஆட்சியானது மாநிலங்களுக்கு அரசியல் நிர்ணயச் சட்டம் உறுதி செய்கின்ற பல அதிகாரங்களைக் கூட ஒவ்வொன்றாக விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது. கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற பல துறைகள் மாநில அரசுகளின் பொறுப்பில் இருக்கும் என்பதாக அரசியல் சாசனம் கூறியபோதிலும் இன்று இவையெல்லாவற்றிலும் மேலாதிக்கம் செலுத்தி நிர்வகிப்பது மத்திய அமைச்சரவையே. எல்லா அம்சங்களிலும் மத்திய அரசின் உத்தரவுகளைப் பெற்று நிறைவேற்றி வைக்கும் கிளைக் காரியாலயங்களாகவே மாநில அரசுகள் இயங்க வேண்டியுள்ளது. இத்தகைய போக்கு கம்யூனிஸ சித்தாந்தத்தினைப் பின்பற்றுவதாகும். உண்மையான ஜனநாயக ஃபெடரல் தத்துவம் என்பது வேறு. அதன்படி மாநிலங்களெல்லாம் சுதந்திரமாகப் பல அம்சங்களில் இயங்கி, அதேசமயம் மத்தியிலே இணைந்து ஐக்கிய பாவத்துடன் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும்.

மத்தியிலே அதிகாரங்கள் குவிவதால் தொழில், பொருளாதார வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் தில்லிக்குக் காவடி தூக்க வேண்டியிருப்பதால், அந்தந்த மாநிலங்களும் தத்தமக்கு உள்ள இயற்கை வளங்களையும் மக்களின் உழைப்பார்வத்தையும் பயன்படுத்திப் போட்டா போட்டியுடன் முன்னேற வாய்ப்பில்லாது போகிறது. எவ்வளவுதான் திறமைமிக்க மாநில அரசு அமைந்தாலும் அவர்கள் மனக்கத்துடன் செயல்பட முடியாமல், கட்டிப்போட்டதாகிவிடுகிறது. இதேநேரத்தில் திறமைக் குறைவான மாநில அரசுகள் மத்திய அரசு மீது பழிசுமத்திவிட்டுத் தப்பித்துக் கொள்ளவும் முடிகிறது! எனவே, ராணுவம், நோட்டு அச்சடித்தல், அயல்நாட்டு விவகாரம் போன்ற சில அம்சங்களைத் தவிர மாநிலங்களுக்கே தங்களை நிர்வகித்துக் கொள்ள முழு அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். அப்போதும் மாநிலம் முன்னேறவில்லை என்றால், மக்கள் மற்ற மாநிலங்களின் வளர்ச்சியைக் கண்டு தங்களுக்கு அமைந்த அரசின் ஆற்றலின்மையை உணர்ந்துகொள்ள முடியும். அவ்வாறு உணர்ந்த பின்னும் மறுபடி அந்தக் கட்சியையே பதவியில் அமர்த்துவார்களானால், அது அந்த மாநில மக்களின் தனிப்பட்ட விவகாரமாகிப் போகும்.

பொதுவாக நாம் காண நேரும் லஞ்ச ஊழல், திறமையின்மை இவற்றைக் கருத்தில் கொண்டு சக்தி வாய்ந்த மத்திய அரசே விமோசனம் என்று சிலர் எண்ணலாம். ஆனால் மாநிலங்கள்தான் தவறு செய்யும், மத்தியில் எல்லாம் சரியாக நடக்கும் என்று எண்ணுவது மடமை. மாநிலங்களுக்கே அதிகாரம் எனில், ஒரு மாநிலம் தவறான பாதையில் போனாலும் அது, மற்ற மாநிலங்களைப் பாதிக்காது. வளம் கொழிக்கலாம். ஆனால் மத்தியில் அதிகாரங்கள் குவியும்போது மத்திய அரசு தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டால், எல்லா மாநிலங்களுமே அதனால் பாதிக்கப்படும்.

பஞ்சாயத்துக்கள் வரை அதிகாரங்களைப் பரவலாக்குவதே சிறந்த ஜனநாயகம். வாக்காளருக்கும் அதிகாரத்தில் உள்ளவருக்கும் இடைவெளி மிகக் குறைவாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஆட்சியிலுள்ளவர்கள் மக்களால் பாதிக்கப்படுவதும், அச்சமும், பொறுப்புணர்வும் கொண்டு செயல்படுவதும் சாத்தியமாகும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

பாலசிங்கம் வீட்டில் குண்டு வெடித்தது பற்றி...

* சு. தியாகராஜன், நெய்வேலி.

? சிறுதொகைகளையோ, பொருள்களையோ லஞ்சமாகப் பெறுவது தவறல்ல என்று தமிழகச் சட்டமன்றத் தலைவர் பி. எச். பாண்டியன் கூறியுள்ளது பற்றி...?

! அயல்நாடுகளுக்கெல்லாம் சுற்றுப்பயணம் செய்து திரும்பியும் சிந்தனைப் போக்கில் முன்னேற்றமில்லை.

* ஆர். விஜயராஜ், பெரியகுளம்.

? தமிழக அமைச்சரவையில் விளையாட்டுத் துறை மந்திரி நியமிக்கப்படுவாரா?

! இங்கே எல்லாமே விளையாட்டாக இருக்கத் தனியே அதற்கு ஒரு மந்திரி எதற்கு என்று எண்ணியிருக்கலாம்.

* குமரி ஜெய், சென்னை—5.

? உடையார் வீட்டில் கூடச் சோதனை போட்டிருக்கிறார்களே?

! பின்னே, உடையார் வீட்டில் அல்லாமல் இல்லார் வீட்டிலா சோதனை போடுவார்கள்?

* ரேவதி பிரியன், ஈரோடு.

? இந்த வருஷம் இசைவிழா நிகழ்ச்சிகளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?

! பத்து நாள் லீவு போட்டுவிட்டு எல்லா நிகழ்ச்சிகளுக்கும் போக முடிந்திருந்தால் ஆனந்தமாயிருந்திருக்கும். முடிந்த வரை சென்று களித்த நிகழ்ச்சிகள் பற்றிச் சுருக்கமாக: பாடகர்களில் சங்கரநாராயணன் இன்று முழுமதி. இரண்டு மதுரைகளின் சாயலுடன் தனது தனித்தன்மையையும் காத்துக் கொண்டிருக்கும் அவருக்குத்தான் டிசம்பரில் அநேகமாய் ஒருநாள் விட்டு ஒருநாள் கச்சேரி! பின்பாட்டுக்குக் கூட யாரும் கிடையாது! அதனால் சற்று களைப்படைந்திருந்த குரலில் 31ம் தேதி கச்சேரியை இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸில் கேட்டுவிட்டே ஓவியர் உமாபதி சொன்னது "எனக்குப் பத்து வயசு குறைந்துவிட்டது போலிருக்கிறது!" அந்தத் தண் நிலவு அத்தனை ஜிலுஜிலுப்பு. அகாடமியில் சிறந்த பாடகர் பரிசு பெற்றதில் வியப்பில்லை. 'கிருஷ்ண கான சபாவா? ரஜினி காந்த் நடித்த படத்தின் முதல் தினம் முதல் ஷோவா?' என்று எண்ணும்படி சந்தானத்துக்குக் கூட்டமாவது கூட்டம்! ராக ஆலாபனைகள், விரிவாகப் பாட வேண்டிய கீர்த்தனைகள்; தனி ஆவர்த்தனம் எல்லாம் முன்னதாகவே முடித்துக் கொண்டு, கடைசி அரை மணியில் பல்வேறு ராகங்களின் வடிவழகுகளை வானவில்லின் வர்ண ஜாலங்களாகக் காட்டி ரசிகர்களைச் சொக்க வைக்கிற ஆற்றல் அவருக்குத்தான் உண்டு. அகாடமியில் இறங்கிய திரை, இவரது தில்லானாவுக்காக மீண்டும் உயர என்னமாய் ஆனந்தித்தார்கள் விசிறிகள்! கிருஷ்ண கான சபாவில் மாலி ஒரே ஏமாற்றமாய்ப் போய்விட அதற்கு ஈடுகட்டுவது போல் கலாக்ஷேத்ராவில் சௌராஸியா ஒரே தூக்காக ரசிகர்களை எங்கோ விண்வெளிக்குக் கொண்டு சென்று விட்டார்! 'கண்ணன் குழலிசை இதை விட இனிமையாக இருந்திருக்குமா?' என்று சந்தேகிக்கும்படியாகி விட்டது! "உங்களுக்கு என்ன இரண்டு கரமா, இருபதா?" என்று ருக்மிணி தேவி கேட்க, "இரு கரங்களும் உங்கள் ஆசிகளும்," என்று இலவசக் கச்சேரி நிகழ்த்திய இந்த இசை வள்ளல் சொன்னது, குழலோசையை விட இனிமையானது. அகாடமியில் ரமணியின் புல்லாங்குழல் அபாரம் எனில் அவரது ஒவ்வொரு சுவராட்சரத்துக்கும் ஈடுகொடுத்து வாசித்த இளைஞர் மைசூர் நாகராஜ் பிரமிக்க வைத்தார். கருத்தைக் கவர்ந்த மற்றொரு இளைஞர் அகாடமியில் டி. வி. எஸ். ஸ்ரீக்குச் சக்கை போடாக மிருதங்கம் வாசித்த திருவாரூர் பக்தவத்சலம். காலையில் நடந்த சொற்பொழிவுகளுக்கெல்லாம் கூட நல்ல கூட்டம் என்பது சென்னை



* பக்தவத்சலம்.



* விஜய் சிவா.



* சந்தானகோபாலன்.



* சௌராஸியா.

வாசிகள் இசையைக் கேட்க மட்டுமல்ல, அதுபற்றித் தெரிந்து கொள்ளவும் ஆர்வமாய் இருக்கிறார்கள் என்பதை உணர்த்தியது. இதில் அதிகமான கூட்டத்தை ஈர்த்தவர்கள் சாருமதி, டி. ருக்மிணி - இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸில். சிவராமன் மிருதங்கம் விறுவிறுப்பான கச்சேரிகளைக் களை கட்டச் செய்வது என்னவோ உண்மைதான்; ஆனால் அவர் ஆற்றலை முழுமையாக உணர டி. கே. ஜயராமன் போன்ற சாவகாசப் பாணி கலைஞருக்கு அவர் வாசிக்கக் கேட்க வேண்டும். பாட்டையே வாசித்து விடுகிறார், போங்கள்! பாடகரின் உருக்கமும் மிருதங்கத்தின் சுகமும் சேரும்போது தியாகையர் எதிர்பார்ப்பது போல் இறைவன் மயங்குகிறானோ இல்லையோ, நாம் நெகிழ்ந்துதான் போகிறோம். மறுபடி இளைஞர்கள்: டி. கே. ஜே. சிஷ்யர் விஜய் சிவா, சேஷகோபாலன் சிஷ்யர் நெய்வேலி சந்தானகோபாலன் — இருவரும் குரல் வளத்தால் மட்டுமின்றி, இசை அறிவாலும் இளைய, முதிய ரசிகர்களைக் கவர்ந்தார்கள். அகாடமியில் வயலினுக்கு முக்கியத்துவம் பெற லால்குடி நடத்திய போராட்டம் வெற்றி. அதுவே ஜி. ஜே. ஆர். கிருஷ்ணனுக்கு அகாடமி அரங்கேற்றமாகவும் விளங்கியது. இதற்கு மேல் எழுதிக்கொண்டு போனால் ரேவதி பிரியன் மீது இந்த வாரம் கேள்விகள் தொடுத்துள்ள மற்ற வாசகர்கள் யுத்தத்துக்குத் தயாராவார்கள்!

* கை. குலாம் முகம்மது, முக்கணுமலைப் பட்டி.

? பாலசிங்கம் வீட்டில் குண்டு வெடித்தது பற்றி?

! யார் வைத்த குண்டோ? பல ஊகங்கள் என்றாலும் இஸ்ரேலிய மொஸாத் பண்ணின காரியமாய் இருக்க முடியாது. அவர்கள் இத்தனை கற்றுக்குட்டித்தனமாக நடந்து கொண்டிருக்க மாட்டார்கள்!

* ஆர். எச். கோபி, குடியாத்தம்.

? காங்கிரஸ் நூற்றாண்டு விழாவை இ. காங்கிரஸ் ஒரு தலைப்பட்சமாகக் கொண்டாடுவதாக ஹெக்டே கூறியுள்ளாரே?

! சுதந்திரத்துக்குப் போராடிய காங்கிரஸ் இன்று இல்லை. அந்தக் காங்கிரஸுக்கும், இன்றுள்ள காங்கிரஸுக்கும் ஸ்நானப் பிராப்திக் கூடக் கிடையாது. எனவே, ஒரு தலைப்பட்சமாகக் கொண்டாடுகிறார்கள் என்று கூடக் கூற முடியாது. ஏதோ கொண்டாடுகிறார்கள், அவ்வளவுதான்!

* டி. விஜய நமார், கொப்பம்பட்டி.

? ஒரு பெண்ணைக் கற்பழித்தால் பத்து ஆண்டுகள் தண்டனை கிடைக்கிறது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கற்பு கிடைத்து விடுமா? இதற்குப் பெயர் தண்டனையா?

! பலவந்தப்படுத்தப்படும் ஒரு பெண் தன் கற்பை இழந்ததாகக் கருதவே முடியாது. எனவே அவள் கற்பை மீண்டும் பெறுதல் என்ற பிரச்னையே எழவில்லை. தண்டனை அளிப்பது அவனைப் போன்ற இதரக் கயவர்களுக்கும் ஓர் எச்சரிக்கை.

* எம். செல்லையா, சாத்தூர்.

? மனித சக்திக்கு அப்பாற்பட்டது எது?

! எத்தனையோ! அன்றாட வாழ்க்கையில் கூடக் காண்கிறோம். பதினைந்து நாட்களாய் எண்ணெய்க் கிணறு ஒன்று எரிந்து கொண்டிருந்தது ஆமதாபாத் அருகே. அணைக்கும் முயற்சியில் யாருக்கும் வெற்றி கிட்டவில்லை. கடைசியில் ராணுவ டாங்குகளை அழைத்து குண்டு வீசச் செய்யலாம் என்று எண்ணிய வேளையில், 'சடக்' கென்று அது தானே அணைந்து போயிற்று!

* எஸ். பி. சிவகுமார், மதுரை.

? தமிழ்நாட்டில் ஒரு மாணவர் இயக்கம் உருவானால் தமிழக மக்களின் ஆதரவு கிட்டுமா?

! ஓ! 1967 நினைவில்லையா?

* எச். கே. நாசர், தோப்புத்துறை. *

? இலங்கை அகதிகளைத் திருப்பி அழைக்கும்வரை தோட்டத் தமிழர்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரதமர் ராஜீவ் கூறியிருப்பது பற்றி...?

! இதனால் ராஜீவுக்கு மனிதாபிமானம் இல்லை என்று முடிவு கட்டிவிடக் கூடாது. ஆட்சியில் உள்ளவர்கள் இப்படிப் பல ராஜதந்திரங்களைக் கையாளத்தான் வேண்டியிருக்கும். இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வர இப்படியெல்லாம் மிரட்டலாகப் பேச வேண்டியதுதான்.

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.

? உலகத்துக் கவிஞர்களுள் தராசைக் கவர்ந்தவர் யார்?

! இங்கே பல கவிஞர்கள் தராசைக் கிலோ கணக்கில் கவர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்றாலும் பாரதி, அவனே வழிபட்ட ஷெல்லி, வோர்ட்ஸ்வொர்த், ஷேக்ஸ்பியர் என்று பெரிய பட்டியலைத் தர முடியும். எனினும் சின்ன வயதில் **The Brook** என்ற கவிதையைக் கேட்டதை ஆயுசுக்கும் மறக்க முடியாது. ஒரு ஓடையின் பல்வேறுவித ஒலிகளையெல்லாம், சலனங்களையெல்லாம் டென்னிஸன் எழுதிய அந்தக் கவிதையில் காண முடியும்; கேட்க முடியும்!

* ரூ. 10 பரிசு பெறுபவர்:

எச். கே. நாசர்,
13, சின்னப்பள்ளி தெரு,
தோப்புத்துறை — 614 809.

1

புதியதோர் உலகம்

'**தா**ய் ஏர்வேஸ்' விமானத்தில் என் அருகில் உட்கார்ந்திருந்த ஆஸ்திரேலியர் என்னை வியப்புடன் பார்த்தார்.

''தனியாகவா' அத்தனை தொலைவு போகிறீர்கள்?'' என்றார்.

''ஆமாம்'' என்று நான் புன்னகைத்தேன்.

அவருடைய பார்வையில் இன்னும் வியப்பிருந்தது.

''இந்தியப் பெண்கள் இவ்வளவு முன்னேறியிருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.'

நான் சிரித்தேன்.

''சமீப காலம்வரை ஒரு பெண்மணிதான் எங்கள் பிரதமராக இருந்தார், தெரியாதா?''



• கிராண்ட் பாலஸில் துவாரபாலகர்கள்!

''தெரியும்தான். இருந்தாலும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இந்தியா மிகவும் பின் தங்கிய நாடு என்கிற எண்ணம்தான் வெளியில் பரவலாக இருக்கிறது. அங்குள்ள வறுமை, புலிகள், பாம்பாட்டிகள் — இவை தாம் பிரசித்தம்.''

என்னுள் மெலிதாகச் சூடு பரவிற்று.

''அது மேற்கத்திய நாடுகள் பரப்பிவிட்ட பிரமை'' என்றேன். ''இந்தியா இன்னும் ஏழை நாடுதான். ஆனால் எவ்வளவோ முன்னேறிவிட்டோம். உணவுக்காக எந்த நாட்டையும் அண்டிப் போகவில்லை இப்பொழுது! எங்களுடைய பொறி இயல் விஞ்ஞான நிபுணர்கள் எல்லாம் எந்த வகையிலும் மேற்கத்திய நிபுணர்களுக்குச் சளைத்தவர்கள் இல்லை!''


''குட்! ஐ ஆம் ஹாப்பி!''

''நீங்கள் இந்தியாவுக்குப் போனதில்லையா?''

''இல்லை. ஒரே ஒரு இரவு லண்டனிலிருந்து வரும்போது தில்லியில் தங்கினேன், அசோகா ஹோட்டலில். ஹோட்டல் நன்றாக இல்லை. ஃப்ளஷ்ஷே வேலை செய்யவில்லை. சார்ஜ் மட்டும் எக்கச்சக்கமாக வாங்கிவிட்டார்கள். ஆஸ்திரேலியாவில் மிக மலிவான ஹோட்டல்கள்கூட மிக சுகாதாரமானதாக இருக்கும்.''

இந்தியாவில் அந்த ஓர் இரவின் அனுபவமே இவருக்குப் போதும் என்றாகியிருக்கும் என்கிற அவமான உணர்வில் நான் பேசாமல் இருந்தேன்.

வெளிநாட்டுப் பயணத்தின்போது பல சமயங்களில் ரோஷத்துடன் பிறந்த மண்ணுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினாலும்



* பாங்காக்கில் கிராண்ட் பாலஸ் என்னும் அரண்மனையின் முழுத் தோற்றம்.

சில விஷயங்களுக்காக நம் ஜனங்களைப் பற்றி அவமானப்படாமல் இருக்க முடியவில்லை. கோடிக் கணக்கில் கொட்டி ஹோட்டல் கட்டுவோம். அதை சரியாகப் பராமரிக்க மாட்டோம். விளக்கில் பல்பு இருக்காது; அறை ஓரம் ஒட்டடை தொங்கும்..... லட்சக் கணக்கில்செலவழித்துசாலை அமைப்போம்; ஒரு பலத்த மழையால் அத்தனையும் பாழ்! கோடிக்கணக்கில்கொட்டி விமானம்வாங்குவோம். அது நேரத்தில் புறப்படாது! இத்யாதி..... இத்யாதி.....

நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு, பொறுப்புணர்வு ஆகியவிஷயங்களைமிகலேசானவையாக, அதிக முக்கியத்துவம் இல்லாதவையாக நினைக்கும் இயல்பு கிழக்கத்திய சீதோஷ்ணத்தின் குணாதிசயங்களாக இருக்க வேண்டும் என்று நான் சில சமயங்களில் நினைத்துக் கொள்வேன்.

சமீபத்தில் தெற்குப் பஸிஃபிக் தீவுகள் வரை கிழக்கில் பயணம் செய்த அனுபவத்திற்குப் பிறகு சீதோஷ்ண நிலைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை; இவை இந்தியாவின் பிரத்யேக குணாதிசயங்கள் என்று புரிந்தது!

அடுத்த ஸீட்டில் ஸிட்னியில் வேலை பார்க்கும் ஒரு ஆங்கிலப் பெண் தில்லி ஜன்பத் கடைகளிலிருந்து ஏகப் பித்தளை வெண்கல சாமான்களை அள்ளிக் கொண்டு வந்திருந்தாள்.

''யாருக்கும் சொல்லாதே. என்னுடைய கை லக்கேஜ் இருபது கிலோ இருக்கும்!'' என்று கிசுகிசுத்தாள். ''ஆனால் இந்த சாமான்கள் எத்தனை மலிவு! இது போல வேறு எங்கே கிடைக்கும்?''

அவள் வாங்கியிருந்த சாமான்களின் விலையை விசாரித்தேன். சரியாக இரண்டு பங்கு, நாம் கொடுப்பது போல்!

நான் அவசரமாக என் கவனத்தைத் திருப்பினேன். தாய்லாந்து அழகிகள் விமானத்தில் தங்கள் தேச உடையான லுங்கியிலும் சட்டையிலும் அதற்கு மேல் ஒரு சின்ன உத்தரீயத்திலும் பணிப் பெண்களாய் வளைய வந்து கொண்டிருந்தார்கள். 'தாய் ஏர்வேய்ஸ்'ஸுக்கு இது வெள்ளி விழா ஆண்டு. ஏக உபசாரம்.

வாஸந்தி

''எங்கே போகிறீர்கள்?'' என்றாள் ஆங்கிலேயப் பெண் என்னிடம்.

''முதலில் பாங்காக்குக்கு. அங்கு இரண்டு நாள் தங்கிவிட்டு அங்கிருந்து ஸிட்னி வழியாக ஃபீஜிக்கு.'' என்றேன்.

''வவ்! தட் ஷுட் பீ எக்ஸைட்டிங்! விடுமுறைக்கா?''

''இல்லை. லெக்சர் டூர். இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த கலாச்சாரப் பிரிவு என்னை அங்கு இரண்டு வாரங்களுக்கு அனுப்புகிறது. நான் ஒரு எழுத்தாளர்!''

''நீங்கள் மிகவும் அதிர்ஷ்டம் செய்தவர்! ஃபீஜி மிக அழகான இடம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே நிறைய இந்தியர்கள் இருக்கிறார்கள்.''

''அதற்காகத்தான் போகிறேன்'' என்றேன். ''நூறு வருஷங்களுக்கு முன் இந்தியர்கள் அங்கே கரும்புத் தோட்டத்தில் வேலை செய்யப் போனார்கள். அவர்களுடைய சந்ததிகள் இப்பொழுது எப்படியிருக்கிறார்கள், எவ்வளவு மாறியிருக்கிறார்கள், இன்னும் எந்த விதத்தில் இந்தியத் தன்மையுடன் இருக்கிறார்கள் என்று பார்க்க எனக்கு ஆர்வம்! ஸிட்னியில் ஆஸ்திரேலிய இன்ஃபர்மேஷன் ஸர்விஸ்ஸின் விருந்தினராக இருப்பேன்.''

''ஓ, ஆரின்ட் யூ லக்கி?'' என்றாள்.

ஃபீஜிக்குச் செல்லும்போது அந்த இடத்தைப் பற்றிக் கொஞ்சமாவது விஷயம் தெரிந்திருக்கவேண்டும்என்றகாரணத்தால்நூலகத்துக்குச் சென்று சில விஷயங்களைச் சேகரித்திருந்தேன்.

என்னை ஃபீஜிக்கு அனுப்பிய I.C.C.R. ரின், ஒரு கிளை ஃபீஜித் தலைநகரான ஸுவாவில் இருக்கிறது. தில்லி ஆஃபீஸ் ஒரு தமிழ் நாவலாசிரியையை அங்கு அனுப்பப் போவதாகத் தெரிவித்தபோது, ஸுவா கிளையிலிருந்து டெலெக்ஸ் வந்தது.

''தமிழ் இங்கு வெகு சில பேருக்குத்தான் தெரியும். வாஸந்திக்கு ஆங்கிலமோ, ஹிந்தியோ தெரிந்திருந்தால் மட்டும் அனுப்புங்கள்.''

இரண்டு பாஷையும் எனக்கு நன்றாகத் தெரியும் என்று இங்கிருந்து செய்தி போனதும் அவர்கள் உற்சாகத்துடன் பல ப்ரோக்கிராம் செய்திருப்பதாக நான் கிளம்புவதற்கு முன் பதில் செய்தி வந்தது. ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் நான் லெக்சர் கொடுக்க வேண்டியிருக்கும் என்று தெரிவித்தார்கள்.

பெரிய புதிய பொறுப்பு நெஞ்சில் அமர்ந்தாற்போல் என்னுள் பாரம் ஏற்பட்டாலும் அதைப் பற்றி யோசனை செய்யக்கூட நேரமில்லாமல் கடைசி நிமிஷம்வரை வீட்டுப் பிரச்னைகள், பயண ஏற்பாடுகள்....

தில்லியிலிருந்து பாங்காக்குக்குத் 'தாய் ஏர்வேஸி'ல் சிவராத்திரியன்று கிளம்பினால் புண்ணியம் கிடைக்கும், தூங்க வேண்டும் என்று பிரம்மப் பிரயத்தனம் செய்தாலும் தூங்க முடியாது! பாங்காக்குக்கும் தில்லிக்கும் நேர வித்யாசம் 1½ மணி நேரம். இங்கிருந்து 12.30க்குக் கிளம்பினால் பாங்காக்கில் ஆறு மணிக்கு இருப்போம். அதாவது நமது 4.30 மணி.

''எங்களுடன் உங்கள் பயணம் ஆனந்தமாக இருந்திருக்கும் என்று நம்புகிறோம். மீண்டும் எங்களுடன் பயணிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்'' என்ற அறிவிப்புடன் விமானம் பாங்காக்கை நெருங்கியது.

விமானம் தளத்தில் இறங்கியதும் இந்தியாவைப் போலப் பயணிகளை பஸ்ஸில் ஏற்றி பிரதான கட்டிடத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். உள்ளே நுழைந்து எமிக்ரேஷனைத் தாண்டி கஸ்டம்ஸைக் கடந்து சாமானை எடுக்கப் போகையில் அங்கே யாரும் ஆங்கிலம் புரிந்து கொள்ளாததைக் கவனித்தேன். மேலும் வேறு ஏதோ ஒன்று சொல்லத் தெரியாமல் என்னை உறுத்திற்று.

அங்கிருந்த ஊழியர்களோ, அதிகாரிகளோ, யார் முகத்திலும் பிரஸன்னம் இல்லை! 'தாய் ஏர்வேஸ்'காரர்கள் தொழில் ரீதியில் புன்சிரிப்புக்குப் பழக்கப்படுத்தப் பட்டிருந்தனர். ஆனால் விமான நிலையத்தில் இருந்த ஊழியர்கள், அதிகாரிகள் எல்லார் முகத்திலும் முகமூடி தரித்ததுபோல் ஓர் உணர்ச்சியற்ற தோற்றம். சந்தேகத்திற்கு விளக்கம் கேட்டால் ஆங்கிலம் கொஞ்சம் தெரிந்தவர்கள்கூட விறைப்பாகக் கடுகடுவென்றுதான் பதில் சொன்னார்கள்.

நான் ஒரு மனோதத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது, நண்பர் ரங்கராஜன் ''ஹலோ!'' என்றபடி வந்தார் முகமெல்லாம் சிரிப்பாக.

(தொடரும்)

மேலட்டை வண்ணப்படம் நன்றி:

தாய் ஏர்வேஸ்

புதுவை அரசாங்கம் பிரெஞ்சை வளர்க்க கொல்லேஜ் கல்வே (College Calve), பான்சியோன்னு தெ ழேஃபீய் (Pensionnat De Jeunes Filles) என்ற கல்விக் கூடங்களை நடத்திவருகிறது. இவற்றில் படித்துப் பிரேவே (Brevet) என்ற பட்டத்தைப் பெறுபவர் S. S. L. C., Matriculation நிகர் பட்டத்தைப் பெறுபவர் ஆவர்.

இன்றும் Jipmer ல் நுழையும் மாணவர்கள் முதலாண்டில் பிரெஞ்சு மொழியைக் கற்கின்றனர். பிரெஞ்சுக்காரர்கள் மருத்துவக்கல்லூரியை நிறுவியதன் நினைவாக இன்றும் இப்பழக்கம் இருக்கிறது போலும்.

பிரெஞ்சுக் கல்லூரிப் பேராசிரியை திருமதி மதனகல்யாணி கூறக் கேட்டவர்: வி. காமராஜ்.



மதன கல்யாணி


GREAT FANS
khaitan
GREAT GIFTS
குலுக்கல் இல்லை! போட்டி இல்லை!
ஒவ்வொரு கேதான் ஃபேனுடனும்
ஒரு கவர்ச்சியிக்க பரிசு*
ரூ. 1.5 கோடிக்குமேல் மதிப்புள்ள பரிசுகள்
கேதான்
மின் விசிறிகளில் முதல் பெயர்
* சீலிங், போர்ட்டபிள் மற்றும் ஃப்ரெஷ் ஏர் மின்விசிறிகளுக்கு மட்டுமே இச்சலுகை
KAN ADS 1857

அதிகாலையில் சந்திரசூடன் விழித்த போது பார்வதி, டீயுடன் மாடிக்கு வந்தாள். டீ கோப்பையை வாங்கியபடியே, ''நீ தினம் காலையில் டீ கொண்டு வரப் போய், விழித் ததுமே உன் நினைவுதான் வருகிறது'' என்றார் சந்திரசூடன்.

பார்வதியின் புன்முறுவலை ரசித்தார்.

'சிலருக்குச் சில கவர்ச்சி உண்டு. இவளுக் குச் சிரிப்பில் கவர்ச்சி. இந்தப் புன்னகை மனத்திற்கு எவ்வளவு இதமாயிருக்கிறது!

இந்திராணிக்கும் கவர்ச்சி இருந்தது. ஆனால் அந்தக் கவர்ச்சி, மனத்தைச் சூறை யாடி, ஒரு பைத்தியகாரக் கூட்டத்தையே அல்லவா உண்டு பண்ணிவிட்டது. அது எப்படியெல்லாம் பைத்தியமாக்கியது என்பதைஎழுதநான் அகப்பட்டேன். இதைப் படிக்க லட்ச லட்சமாக வாசகர்கள் வேறு காத்துக் கிடக்கிறார்கள். இதோ குத்து விளக்கு மாதிரி குளுமையாகச் சிரிக்கும் இந்தப் பார்வதியின் புன்னகை தரும் மனச் சாந்தியை இந்திராணியின் கவர்ச்சி கொடுக் குமா? அது ஒரு சாராய போதை மாதிரி, வெறித்தனத்தைத் தூண்டிவிடும், விஷம்..!'

''என்ன யோசனை?'' என்று பார்வதி கேட்டதும் திடுக்கிட்டுச் சுயநினைவிற்கு வந்தார்.

''இந்திராணியின் வரலாற்றை எழுது வதைப் பற்றிச் சிந்தித்தேன்.''

''சீக்கிரம் எழுதுங்கள்.''

''உனக்கென்ன அவசரம்?''

''உங்களுக்குச் சீக்கிரம் பணம் கிடைக்கும். நிழல் பத்திரிகையைத் தொடங்கலாமே.''

''நிழல் பத்திரிகை நடத்துவதில் என்னை விட உனக்குத்தான் ரொம்ப அக்கறை வந்து விட்டது'' என்று சிரித்தார்.

''வேறொரு பத்திரிகையில் வேலை செய் வதை விடச் சொந்தமாக பத்திரிகை நடத்தி னால், சுதந்திரமாக எழுதலாம் அல்லவா? வருமானமும் கூடும்.''

''பத்திரிகையில் லாபம் வரவேண்டுமே.''

''நீங்கள் நடத்தும் பத்திரிகை லட்சக் கணக்கில் விற்கும். உங்களுக்கென்று லட்சக் கணக்கில் வாசகர்கள் இருக்கிறார்கள்.''

''நீ சொல்வதை நம்பித்தான் பத்திரிகை யைத் தொடங்க வேண்டும்'' என்று சிரித் தார். காலிக் கோப்பையை நீட்டினார்.

கோப்பையை வாங்கியபடியே, ''நேற்று மயானத்தில் ஏகக் கூட்டமாமே?'' என்று பார்வதி கேட்டாள்.

''ஊரே திரண்டு வந்துவிட்டது. அவர் ஒரு சித்தர் என்பதை இப்போதுதான் ஜனங்கள் புரிந்திருக்கிறார்கள். ஓ.....! அவர் ஓர் அதி சயமான பக்தர்.''

''பரணி எல்லாம் சொன்னான்'' என்ற வாறே வாசலை நோக்கித் திரும்பினாள் பார்வதி.

''மேஜை மீது கிடக்கிற நியூஸ் பேப்பரை எடு'' என்றார் சந்திரசூடன்.

பார்வதி செய்தித் தாளை எடுத்துக் கொடுத்துவிட்டுக் கீழே இறங்கிச் சென்றாள். பத்திரிகையைப் புரட்டியதும் முதலில் தென்

உணர்வுகள் உறங்குவதில்லை



ர. சு. நல்லபெருமாள்



பட்ட செய்தி சந்திரசூடனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

'சினிமா கொட்டகை அதிபர் ராமசுப்பன் கைது' என்ற தலைப்பில் செய்தி இருந்தது. கோயில் பூசாரி மீது பொய் வழக்கு ஜோடித்ததற்காக போலீஸ் அவரைக் கைது செய்திருப்பதாக வந்திருந்த செய்தியைப் படித்து உள்ளூரத் திருப்தியடைந்தார். அந்தச் செய்தியை ரசித்துப் படித்துக் கொண்டிருந்த போது குமார் பரபரப்புடன் அறைக்குள் வந்தார்.

"டேய், சேட்டைக் கொன்றது முத்துராமன்தான். செய்தி பார்த்தாயா?" என்றார். சந்திரசூடன் பதறியபடி எழுந்து உட்கார்ந்தார்.

"பேப்பரில் முழுச் செய்தியும் வரவில்லை. முழு விவரமும் நாளையப் பேப்பரில் வரும். இப்போது இன்ஸ்பெக்டரைப் பார்த்து விட்டுத்தான் வருகிறேன்" என்று கூறியபடியே குமார் செய்தித்தாளை வாங்கி இரண்டாவது பக்கத்தைத் திருப்பி சந்திரசூடனிடம் கொடுத்தார்.

"அடப் பாவி....." என்று முனகியபடியே சுருக்கமாக வெளியாகியிருந்த செய்தியைப் படித்தார் சந்திரசூடன்.

"எனக்கு அவன் மீதுதான் சந்தேகம். நான் சொன்னதற்கு என் மீது எரிந்து விழுந்தாயே. பரம்பரைக் குணம் போகாது" என்றார் குமார்.

"ஏன் கொலை செய்தானாம்?"

"எல்லாம் பணத்திற்காகத்தான். சேட் எப்போதுமே வேலையாட்கள் எல்லாரும் போன பிறகு இரவில் சில சமயங்களில் தனியாக இருந்து கணக்குப் பார்த்துவிட்டுத்தான் வீட்டுக்குப் போவாராம். அன்று ஒன்றரை லட்சம் ரூபாயை பாங்கில் போடாமல் வைத்திருந்திருக்கிறார். அது இவனுக்குத் தெரிந்திருக்கிறது. இவன் மாலையில் வேலை முடிந்ததும் வீட்டிற்குப் போகாமல் பின்புறத்துக் கக்கூசில் ஒளிந்து கொண்டானாம். இரவு எட்டு மணிக்கு சேட் தனியாகக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு இரும்புத் தடியால் மண்டையில் அடித்துக் கொன்று விட்டுப் பணத்தை எடுத்துக் கொண்டு பின்புறம் வழியாக வெளியேறியிருக்கிறான். பின் பக்கத்து முடுக்கு வழியாக மெயின் ரோடிற்கு வந்து ஆட்டோ ரிக்ஷாவில் ஏறியதை பிளாட்பாரத்திலிருந்த ஒரு பூக்காரி பார்த்திருக்கிறாள். அவள் சொன்ன அடையாளங்களைக் கொண்டு இவனைப் பிடித்துவிட்டார்கள். போலீஸில் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டுவிட்டான். நேற்று நம்மிடம் யோக்கியன் போல் பேசினானே" என்றார் குமார்.

இதைக் கேட்டுச் சந்திரசூடன் மௌனமானார். தாம் அவனுக்காகச் சிபாரிசு செய்ததை எண்ணினார். அவனுடைய புதுக் கவிதைகளை நினைத்துப் பார்த்தார்.

"ஓ....! ஒருவனுடைய அறிவிற்கும் குணத்திற்கும் சம்பந்தமே கிடையாதா? அறிவை விட குணம்சம்தான் சக்தி வாய்ந்ததா....?"

"இனி நம்முடைய பெயர்கள்தாம் அடிபடும். உன்னுடைய சிபார்சினால்தான் இந்த மிருகம் வெளியே வந்தது. அறிவாளி, புதுக்

கவிதை எழுதுகிறுன் என்றெல்லாம் புகழ்ந் தாய். கடைசியில் சந்தர்ப்பம் கிடைத்த போது கொலை செய்து கொள்ளையடித்து விட்டான். செட்டின் உயிரை உன்னல் திருப் பிக் கொடுக்க முடியுமா?'' என்ருர் குமார்.

இந்தக் கேள்வி சந்திரசூடனை உலுக்கி விட்டது. தம்முடைய தோல்வியை ஜீரணிக்க முடியாமல் உள்ளூரப்பொறுமினுர்.

இரண்டு நாட்களாக ஒரு பணியிலும் ஈடுபடாமல் சந்திரசூடன் இதே சிந்தையில் பொழுதைக் கழித்தார். சக்திசிவத்தை எண் ணியபோதெல்லாம் உள்ளத்தில் ஓர் ஆனந்த உணர்வு தோன்றியது. முத்துராமனை எண்ணியபோதெல்லாம் மனம் சஞ்சலத்தில் மூழ்கியது. இந்த நினைவிலிருந்து விடுபட இந்திராணியின் வரலாற்றை விட்ட இடத் திலிருந்து தொடர்ந்து எழுத முனைந்தார். அதற்காக இந்திராணியின் டைரிகளைப் புரட்டிப் பார்க்க எண்ணியவராய் கட்டிலில் படுத்திருந்தபடியே ஒரு டைரியை எடுத்துப் புரட்டினுர்.

அவள் எழுதியிருந்தாள்:

(என்னுடன் நட்போடு பழகும் சந்திர சூடன், ஊர்வசிப் பட்டத்திற்குச் சிபாரிசு செய்ய மறுக்கிருர். தலைக்கனம் பிடித்தவர். எனக்கு ஊர்வசிப் பட்டம் கொடுத்தால் என்ன குறைந்துவிடும்? அவரை நினைத்தால் கோபம்தான் வருகிறது. ஆனல் அவரைச் சந்திக்கும்போது என் கோபமெல்லாம் எங்கோ பறந்துவிடுகிறது. இதற்குக்காரணம் அவருடைய முகக் கவர்ச்சியா? அல்லது அவர் சிறந்த எழுத்தாளர் என்னும் மரி யாதையா? எதுவோ ஒன்று என்னை அவர்பால் ஈர்க்கிறது. எப்படியும் ஊர்வசிப் பட்டத்திற்கு அவரைச் சிபார்சு செய்யும்படி வைத்துவிடுவேன்.)

அவளுக்கு ஊர்வசிப் பட்டத்தின் மீது அவ்வளவு தூரம் ஆசை! அந்த ஏமாற்றத் தால் தற்கொலை செய்வானேன்?

அவர் மீது அவளுக்கிருந்த ஈடுபாட்டைப் பற்றிப் படித்தபோது அவருடைய மனம் நெகிழ்ந்தது. அவளுடைய மரணம் அவ ருள்ளே வேதனையை உண்டு பண்ணியது.

அந்த டைரியைத் தொடக்கத்திலிருந்து படிக்க விரும்பினுர். டைரியின் முன் பக்கத் திலிருந்து புரட்டத் தொடங்கினுர்.

அவள் எழுதியிருந்தாள்:

(இன்று எனக்குப் பெரும் அதிர்ச்சியா யிருந்தது. குளியலறையில் கண்ணுடியின் முன்பு நின்றபோது முதன் முதலில் இந்த அதிர்ச்சி. ஓ..... கண்களைச் சுற்றி இலேசாகக் கருமை.... கழுத்தருகே சிறு சுருக்கம்.

கண்ணுடியை உற்றுப் பார்த்தேன். முகத் தில் ஆயாசத்தின் சாயல். இதைச் சில நாட்களாகவே கவனிக்கிறேன். இன்று ஒரு பெரியஉண்மையைஉணர்ந்தபோது அதிர்ச்சி யடைந்துவிட்டேன்.

ஓ. எனக்கு வயதாகிக்கொண்டுவருகிறது. இந்த உண்மையை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறேன்.)

இதைப் படித்தபோது சந்திரசூடனுக்கு வியப்பாயிருந்தது. தனக்கு வயதாகிக் கொண்டு வருகிறது என்பதைக் கூடவா உணராமலிருந்தாள் என்று வியந்தார். வருத் தமும் தோன்றியது.

டைரியை மேலும் தொடர்ந்து படித்தார்:

(என்னுடைய காதலுக்காக எத்தனை பேர் காத்திருந்தார்கள்! ஆனல் நான் காதலித்தது என்னுடைய உருவத்தைத்தான். தினமும் கண்ணுடியில் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போயிருந்த எனக்கு இப்போது எவ்வளவு பெரிய அதிர்ச்சி! ஒரு காலத்தில் எனக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும், கர்வத் தையும் கொடுத்துக்கொண்டிருந்த கண்ணுடி இப்போது பீதியைக் கொடுத்துவிட்டது. என்னுடைய எதிரி யாரென்பதைக் காட்டிக் கொடுத்துவிட்டது. ஓ.... காலம்தான் என் எதிரி. ஸ்டூடியோ வெளிச்சம் என்னை ஏமாற்றிவிட்டது. இன்று உணரும்போது உடம்பு நடுங்குகிறது. என்னுடைய ஒவ்வொரு அசைவிலும் கிறங்கிப் பெருமூச்சு விடும் கூட்டம்; என்னைப் பார்த்து வியப்பும், பொருமையும் கொள்ளும் பெண்கள்; என் காலடியில் விழுந்து கிடக்கும் சினிமாப் பட முதலாளிகள் அத்தனை பேரும் இனி என்னை ஒதுக்கி விடுவார்களே. இனி என்னுடைய மதிப்புத்தான் என்ன? இந்தப் புகழும், பெருமையும் இல்லையென்ருல் இந்த இந்தி ராணி யார்? ஓ..... ரெங்கபுரத்து சாதாரண ஏழைப் பட்டு..... ஐயோ, நினைத்துப் பார்க் கவே கசக்கிறதே.)

படித்துக் கொண்டிருந்த சந்திரசூடனுக்கு இந்திராணியைப் பற்றிய கடந்த கால நினைவு வந்தது.

அவர் மீது அவள் கொண்டிருந்த நட்பை யும், அவருடன் உடல் பூர்வமாக நெருங்கித் தொடர்பு கொள்ள விழைந்ததையும், அவர் விலகியே இருந்ததையும் எண்ணிப் பார்த் தார். அதுவே அவளுக்கு ஓர் ஏக்கமாகவும் இருந்திருக்குமோ என்ற சந்தேகம் எழுந்தது. அவள் விஷயத்தில் தாம் கொடுமை இழைத்து விட்டோமோ என்ற எண்ணம் அவர் மனத் தைச் சங்கடப்படுத்தியது. டைரியை மேற் கொண்டு படிக்கத் தொடங்கினுர்:

(இன்று சந்திரசூடன் வந்திருந்தார். வழக் கம்போல் அவரைக் கண்டதும் தோன்றும் உற்சாகமும், மகிழ்ச்சியும் என்னிடமில்லை.

''ராணியம்மாள் என்ன சோர்வாயிருக் கிறுள்?'' என்றபடியே வந்தார்.

''மனசே சரியில்லை.'' என்றேன்.

''உனக்கு ஒரே ஒரு கவலைதான். ஊர்வசிப் பட்டம், இல்லையா?'' என்று கேட்டார்.

நான் பதில் சொல்லாமல் உணர்சியற்றுச் சிரித்தேன். நான் இந்த ஊர்வசிப்பட்டத்தைப் பெரிதாகவே எண்ணவில்லை. இவர்தான் அதைப் பெரிதாக எண்ணிக் கொண்டு, அதற்காக சிபார்சு செய்துவிட்டால், இவரு டைய கௌரவம் போய்விடும் என்று நினைத் துக் கொண்டிருக்கிருர். எனக்குப் புகழ் இருக்கிறது. பணம் இருக்கிறது. இனி இந்த

1986 ஒவ்வொரு மாதமும் ஒரு புதிய டிசைன்!

1986-ல் ஒவ்வொரு மாதமும் சாரதாஸ் முகூர்த்தப் பட்டுச் சேலைகளை வெவ்வேறு புதுவிதமான டிசைன்களிலும், கண்ணைக் கவரும் வண்ணங்களிலும் தனிச் சிறப்புடன் உற்பத்தி செய்து விற்பனை செய்ய உறுதி பூண்டுள்ளது. தை மாத புது டிசைன் முகூர்த்தப்பட்டுச் சேலைகள் இப்பொழுது விற்பனைக்கு வந்து விட்டது.



குறிப்பு மாற்றம்! திடீர் மாற்றம்!!
விலைகளில் பெரும் மாற்றம்!!!
முகூர்த்தப்பட்டு மற்றும் எல்லா ஜவுளிகளையும்
மிகக் குறைந்த லாபத்திற்கு விலை நிர்ணயம்
செய்து பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறோம்.


*தரமான சிறந்த பட்டுப்புடவைகளை இவ்வளவு குறைந்த விலையில் சாரதாஸ் மட்டுமே அளிக்க முடியும்.

சாரதாஸ்

தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177

N.S.B ரோடு
திருச்சி-620 002
போன் : 27077

இலாப உயர்வு. உங்கள் எல்ஐஸி பாலிஸி மேலும் அதிக வருமானமளிக்கிறது.



இரு ஆண்டுகளுக்கொரு முறை இன்ஷூரன்ஸ் கணக்கு நிபுணர்களால் கார்ப்பொரேஷனின் சொத்து மதிப்பிடப்பட்டதின் பலனாக, 31 மார்ச் 1985ல் நடைமுறையிலிருக்கும் எல்லா லாபப் பங்குள்ள பாலிஸிகளுக்கும் கீழ்க்கண்ட இலாப விகிதம் பெற தகுதி உண்டு.

முழு ஆயுள் காப்பு பாலிஸிகள்	எண்டோமெண்ட் பாலிஸிகள்
ரூ. 55.00	**ரூ. 44.00**
வருடாந்திரம், ஒவ்வொரு ரூ. 1000 ஆயுள் காப்புறுதி தொகைக்கு.	வருடாந்திரம், ஒவ்வொரு ரூ. 1000 ஆயுள் காப்புறுதி தொகைக்கு.

இப்பொழுது எல்ஐஸி பாலிஸி முன்பெல்லாம் விட கவர்ச்சிமிக்க வருவாயளிக்கிறது.

ஆயுள் காப்பு செய்து பாதுகாப்பு
பெறுங்கள்.

மக்களின் சேவைக்கு எல்ஐஸி.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ஊர்வசிப் பட்டம் வந்துதான் ஆக வேண்டியதில்லை. எனக்குப் பட்டம் கொடுத்தால் அந்த ஊர்வசிப் பட்டத்திற்குத்தான் பெருமை. வேண்டுமானால் எனக்கு அதைக் கொடுத்து, அந்தப் பட்டத்தின் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளட்டும். எனக்குச் சிபாரிசு செய்த பெருமையாவது சந்திரசூடனுக்குக் கிடைக்கும்.)

இதைப் படித்துவிட்டுச் சந்திரசூடன் அதிர்ந்து போனார். அவருடைய கர்வத்திற்கே ஒரு சாட்டையடி போலிருந்தது.

அவளுக்கு சிபார்சு செய்வது எனக்குப் பெருமையாமே....? சந்திரசூடா, உன்னை அவள் எவ்வளவு துச்சமாக எண்ணியிருந்திருக்கிறாள்! எவ்வளவு திமிர்.....

டைரியில் இன்னும் சில பகுதிகளைப் பரபரப்புடன் புரட்டினார். அவள் தொடர்ந்து எழுதியிருந்தாள்:

(இன்று இரவு சந்திரசூடன் வந்திருந்தார். உற்சாகமாயிருந்தது. இவருடைய நட்பு எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. என்னிடம் எதையும் எதிர்பார்க்காமல் உள்ளார்ந்த அபிமானத்தோடு பழகும் ஒரே நபர் இவர் ஒருவர்தான். இதற்காகவே என்னை இவருக்குக் கொடுக்க வேண்டும் என்று கூட நினைக்கிறேன்! ஆனால் இவருக்கு தலைக்கு மேல் கர்வம். புகழ் பெற்ற இந்திராணியின் ஆசையையே துச்சமாக மதித்துவிட்டோம் என்று எண்ணி உள்ளூரப் பெருமைப்படுகிறார். இவரைவிட அழகும், இளமையும் உள்ளவர்களும், லட்சாதிபதிகளும் என் காலடியில் விழுந்து கிடக்கத் தயாராக உள்ளனர். இவருடைய கர்வத்தைச் சிதைக்க வேண்டும் என்கிற நினைப்பில்தான் இவரைப் படுக்கைக்கு அழைக்கிறேன். இதில் கடைசியில் இவருக்குத்தான் வெற்றி கிட்டுமோ என்னவோ. அது பற்றி எனக்கு அக்கறையும் இல்லை. இவருக்காக நான் ஏங்கவும் இல்லை. இவர் சம்மதித்தால், உலகப் புகழ் பெற்றிருக்கும் இந்திராணியின் உடலை ஆண்டிருக்கிறோம்என்று இவர் ஆத்மதிருப்தியடைந்து கொள்ளலாம். சுய சரிதம் எழுதினால் இவர் அதில் இது பற்றிப் பெருமைப் பட்டுக் கொள்ளலாம். பாவம், அந்த அதிர்ஷ்டம் இவருக்கு இல்லை. கர்வம் மட்டும் தலைக்கேறிக் கிடக்கிறது. இது எழுத்தாளர்களின் பிறவிக் குணம் போலும்.)

சந்திரசூடன் திகைப்படைந்தார். இந்திராணி எவ்வளவு தூரம் அவரை ஏமாற்றியிருக்கிறாள்! டைரியைத் தொடர்ந்து படித்தார்:

(என்னுடைய கவர்ச்சியெல்லாம் இன்னும் சில காலந்தான். எவ்வளவு காலத்திற்கு மேக் அப் போட்டுக் கொண்டு ஏமாற்ற முடியும்? என்னைச் சுற்றியிருக்கும் கூட்டம் கலைந்துவிடும். புகழ் மறைந்துவிடும். புகழ் மங்கிய இந்திராணியைப் பற்றி எண்ணிப் பார்க்கக் கூடப் பயமாயிருக்கிறது. இந்தக் கவலையால் தலையில் ஓரிரு நரைகள் கூடத் தோன்றிவிட்டது. இந்தக் கவலையைப் பற்றி சந்திரசூடனிடம் சொல்லவில்லை. சொல்லி



பாண்டிச்சேரியில்—'பொசியம்போடுதல்' என்றால், கள்/சாராயம் குடிப்பதாய்ப் பொருள்.

தகவல் : புதுவை அமலன்.

ஆகப் போவதென்ன? காலம் என் உடலில் பண்ணும் கோலத்தை இவர் மாற்றிவிட முடியுமா? என்னுடைய மனச் சோர்விற்கு ஊர்வசிப் பட்டம் கிடைக்காததுதான் காரணம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். அப்படியே நினைத்துக் கொண்டிருக்கட்டும். என்னைப் பொறுத்தவரை அந்தப் பட்டம் அற்பமானதே. என்னுடைய கவலையெல்லாம் என்னுடைய உடம்பைப் பற்றித்தான்.

ஒவ்வொரு நாளும் கண்ணாடியின் முன்பு நிற்கும்போது மன வேதனை தாங்காமல் புழுங்குகிறேன். எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கவே நடுக்கமாயிருக்கிறது. கவர்ச்சி போய்விட்டால்பிறகு எனக்கு ஏது பெருமை?

உயிரோடிருக்கவே பிடிக்கவில்லை. இறந்துவிட்டால் என்ன? பேரும் புகழும் போய் என்னால் வாழவே முடியாது.)

இத்துடன் அவளுடைய டைரி முடிந்துவிட்டது. மேற்கொண்டு எழுத அவள் உயிருடன் இல்லை.

டைரியை மூடி வைத்த சந்திரசூடனுக்கு அசதி தோன்றியது. பெரும் ஏமாற்றத்திற்குள்ளாகிவிட்ட மனச் சோர்வு. சற்று நேரம் கண்களை மூடியபடியே கிடந்தார். உள்ளத்தில் பல நினைவுகள் குமைந்தன. மேஜையைத் திரும்பிப் பார்த்தார். அவர் பாதிவரை எழுதி முடித்திருந்த இந்திராணியின் வரலாறு ஒரு கட்டாக மேஜை மீது கிடந்தது. சம்பத்தும் செட்டியாரும் படித்துவிட்டு உற்சாகத்துடன் புகழ்ந்த பிறகு திருப்பித் தந்திருந்த காகிதக் கட்டு. வருங்காலத்தில் புத்தக வெளியீட்டில் பெரும்புரட்சியைத் தோற்றுவிக்கப் போகிறது. பணம் லட்சக் கணக்கில் குவியப் போகிறது.

அதைச் சற்று நேரம் வெறிக்கப் பார்த்தவாறே படுத்துக் கிடந்தார். காற்றில் அந்தத் தாள்கள் படபடத்தன. சட்டென்று எழுந்தார். அந்தக் காகிதக் கட்டை மேஜை மீதிருந்து எடுத்தார். அறையின் மூலையை நோக்கி வீசி எறிந்தார். ஒரு தீக்குச்சியை உரசி நெருப்பை அதன் மீது பற்ற வைத்தார்.

இந்திராணியின் வரலாறு தீப்பற்றி எரிந்ததை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

தாழ்ப்பாள் எல்லாமே துருப்பிடித்துப் போய்விட்டதால் இழுத்துத் திறப்பதற்குள் விரல் விட்டுவிடும். கதவை மூடுவதும், திறப்பதுமே, விசாலத்திற்குச் சரியாக இருக்கும். தாழ்ப்பாளைத் திறக்கிறபோது ஆள்காட்டி விரலிலோ, சுட்டை விரலிலோ காயம் படுவது சகஜமாகி விட்டது.

"**போ**யிட்டு வரேன். மறக்காம மதுவை மத்தியான்னம் ஸ்கூல்லேந்து கூட்டிண்டு வந்துடுங்கோ. இன்னிக்கு அவனுக்கு அரை நாள்."

கைப்பையைத் தோளில் மாட்டியபடி ஆபீஸுக்குப் புறப்பட்டாள், வித்யா. திருச்சி கன்டோன்மெண்டில் அவள் வேலை செய்யும் ஆபீஸ் இருக்கிறது. பத்து மணிக்குத்தான் ஆபீஸ் என்றாலும் ஸ்ரீரங்கத்திலிருந்து பஸ்ஸில் போக வேண்டும் என்பதால் ஒன்பதேகாலுக்குப் புறப்பட்டு விடுவாள். அவள் ஆபீஸ் போகத் தயாராவதற்குள், விசாலம் சமையல், டிபன் இரண்டையுமே முடித்துவிடுவாள். வித்யா நகர்ந்த கையோடுவிசாலம்,காலேஜ்மூக்கேபி.ஹெச். ஈ. எல்லுக்கு வேலைக்குப் போன பிள்ளை குமாருக்குக் காரியர் கட்டி வைக்க வேண்டும். குமாருக்கு அல்ஸர் வந்ததிலிருந்து வெளிச் சாப்பாடு ஒத்துக் கொள்வதே இல்லை. நல்லவேளையாய்ப் பிள்ளையைப் பார்க்கக் கிராமத்திலிருந்து விசாலம் வந்தாளோ சமையற்காரியை நிறுத்திச் சமையல் பொறுப்பை ஏற்றுக் கொண்டு குமாரைக் குணப்படுத்த முடிந்ததோ...

வித்யா ஆபீஸ் போனதும், கதவை உள் பக்கம் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு சமையலறைக்கு வந்தாள் விசாலம்.

தட்டில் சாதத்தைப் போட்டுக் குழையப் பிசைந்து நெய் ஊற்றும்போது வாசல் கதவு தட்டப்பட்டது.

விசாலம் கைகூடக் கழுவாமல் வாசலுக்கு ஓடினாள்.

"நான்தான் வித்யா, கதவைத திறங்கோ. முக்கியமான ஆபீஸ் ஃபைல் ஒண்ணு மறந்து வச்சிட்டேன்" என்று வித்யா கதவுக்கு வெளியே இருந்து மூச்சிரைக்கக் கத்தினாள்.

விசாலம் இடது கையால் சிரமப்பட்டுத் தாழ்ப்பாளை நீக்கி, கதவை அகலத் திறந்தாள்.

பாய்ந்து உள்ளே வந்த வித்யா, "மணி ஆச்சு... 'சட்'னு கதவைத் திறக்கப்படாதா?" என்று சீறிவிட்டு ஃபைல் எடுக்க அறைக்கு ஓடினாள்.

கும்பக் கும்ப...



கூடத்து கடிகாரம் 'டங்' என்றது. விசாலம் நிமிர்ந்து மணியைப் பார்த்தாள். ஒன்பதரை.

'பாவம்! வித்யாவுக்கு நேரமாச்சு'

திரும்ப வித்யா சொல்லிக் கொள்ளாமல் ஓட்டமாய் ஓடிவிட்டாள். விசாலம் கைகாயும் வரை கதவருகில் நின்று கொண்டு மருமகளை அனுதாபத்தோடு பார்த்தாள்.

பிறகு திரும்பவும் கதவை மூடிக் கொண்டு காய்ந்த கையை கழுவிக் கொண்டாள்.

'மறக்காமல் மதுவைப் பன்னிரண்டு மணிக்குப் போய்ப் பள்ளிக் கூடத்திலிருந்து கூட்டி வரணும்.'

நினைத்தபடியே விசாலம் காரியர் கட்டி முடிக்கவும், வாசலில் காரியர் பையன் சைக்கிள் மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

வாசல் கதவைத் திறந்து காரியரைப் புடவைத் தலைப்பால் துடைத்தபடி அவனிடம் நீட்டினாள் விசாலம். மறுபடியும் கதவைத் தாழ் போட்டாள். இரட்டைக் கதவு. ஐந்து தாழ்ப்பாள்கள். தாழ்ப்பாள் எல்லாமே துருப் பிடித்துப் போய்விட்டதால் இழுத்துத் திறப்பதற்குள் விரல் விட்டுவிடும். விசாலம் ஆறு மாதம் முன்பு ஊர் வந்த புதிதில் பிள்ளையிடம் சொன்னாள். "தாழ்ப்பாள் போட்டுக் கதவை மூடி மூடித் திறக்கிறது சிரமமாய் இருக்கு. ரிப்பேர் பண்ணப்படாதா குமார்?"

"ஆமாமாம்.... சொந்த வீடு தட்டுக் கெட்டுப் போறது. வீட்டு ஓனர் எங்கியோ ஊரில் இருக்கார். மாசாமாசம் வாடகைகூட எம்.டி. பண்ணச் சொல்லிடறார். அவர் வந்து பார்த்து ரிப்பேர் பண்ணணுந்தான்.." என்றான் குமார்.

"தாழ்ப்பாள் போடறது கஷ்டமாயிருக்குன்னு நீங்க பாட்டுக்கு நாங்க ஆபீஸ் போனப்பறம் உங்க கிராமத்து வீடு மாதிரி திறந்து போட்டுண்டு இருக்க வேண்டாம். ...ரியா வேறே இருக்கேள். ஆத்துல இருக்கிற ...ாறு சாமானும் தொலைஞ்சி போகாம பாத்துக் கோங்கோ" என்று எச்சரித்தாள், வித்யா.

மத்தியானம் பள்ளிக்கூடம் விட்டு மூன்று மணிக்கெல்லாம் வந்துவிடுவான் மது. வந்ததும் காலில் சக்கரம்தான். மூன்று சக்கர சைக்கிளை வைத்துக் கொண்டு தெருவுக்கு விளையாடப் போய்விடுவான். இடையில், "பாட்டி வாட்டர்!" என்று கதவைத் தட்டுவான். "பாட்டி! கதவைத் திற! அர்ஜண்ட்!" என்பான் நிஜாரை இறுக்கப் பிடித்தபடி. கதவை மூடுவதும், திறப்பதுமே விசாலத்திற்குச் சரியாய் இருக்கும். நடுவில் வாசலில் அரப்புத் தூள், கோலமாவு வந்தால் கண் அயர்ந்தாலும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து விடுவாள். கதவுத் தாழ்ப்பாளைத் திறக்கிறபோது ஆள்காட்டி விரலிலோ, கட்டை விரலிலோ காயம் படுவது சகஜமாகி விட்டது.

விசாலம் தானும் அந்தத் தாழ்ப்பாளுக்கு ஏதோ வைத்தியம் செய்துகூடப் பார்த்தாள். துருப்பிடித்த அந்த அரையடி இரும்புத் தடி மேல் எண்ணெயைத் தடவி, க்ரீஸைப் பூசி... ம்ஹூம்.... அதெல்லாம் தற்காலிகமாய் ஏதோ உதவி செய்தது. அவ்வளவுதான்.

"அம்மா! அம்மா! கதவைத் திற!"

காரியர் பையனை அனுப்பிவிட்டு விசாலம் கூடத்திற்குக்கூட வரவில்லை, வாசலில் குமாரின் குரல் கேட்டது.

"யாரு, குமாரா?"

"ஆமாம்... ஆபீஸில் நிக்க முடியலை. வயத்து வலி, லீவு போட்டுட்டு வந்துட்டேன்."

விசாலம், கதவின் இரும்புக் கம்பிகளினூடே பிள்ளையைப் பார்த்தபடியே தாழ்ப்பாளை விலக்கினாள். இன்றைக்குச் சற்று அவசரம் கலந்த வேகம். 'சர்' என்று மேல் தாழ்ப்பாளின் இரும்பு நுனி, திறந்து பிடித்துக் கீழே இறக்க முற்படுகையில் கட்டை விரலின் சதையைக் கிழித்துக் கொண்டு தொங்கியது.

ரத்தம், வெளியேறக் காத்திருந்த மாதிரி உற்சாகமாய்ப் பீறிடலானது.

விசாலம் வலியைப் பொறுத்துக்கொண்டு, கட்டை விரலைப் புடவைத் தலைப்பில் அழுத்திக் கொண்டு கேட்டாள்.



ஷைலஜா



அருள்வாக்கு

பக்தி என்பது ஈசனிடம் வைக்கும் அன்புதான்.

அன்புக்கே அது யாரைக் குறித்து வைக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து வேறு வேறு பேர்கள் உண்டு. ஸம வயஸினரிடம் வைக்கும் அன்புக்கு ஸ்நேஹிதம், நட்பு என்று பேர். பெரியவர்களிடம் வைக்கிற அன்பு— மரியாதை. குழந்தைகளிடம் வைக்கும் அன்பு— வாத்ஸல்யம். கதாநாயகன்—நாயகி அன்பு கொள்வது ச்ருங்காரம். நம் மாதிரி ஸாதாரணப்பட்டவர்கள் நம்மைவிட தீனர்களிடமும், கஷ்டப்படுகிறவர்களிடமும் வைக்கும் அன்புக்குப் பரிவு என்று பெயர். அதுவே நம்மைவிட மஹா பெரியவர்கள் நம்மிடம் வைக்கும்போது அருள், க்ருபை என்றெல்லாம் பேர் எடுக்கிறது. வெறுமே பரிவாக ஒரு ஆறுதல் தருவதாக மட்டுமின்றி தீனநிலையை, கஷ்ட ஸ்திதியைப் போக்கடிக்கும் சக்தியே மஹான்களின் அருளுக்கு இருக்கிறது. அதன் உச்சிதான் ஈச்வரன் நம்மிடம் வைக்கும் பரிவான அன்பு. பரம கருணை, அனுக்ரஹம் என்று அதற்குப் பேர் சொல்கிறோம். அந்த ஈச்வரனிடம் நாம் வைக்கிற உசந்த அன்புதான் பக்தி என்பது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ-சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

"ஏதாவது கஷாயம் போட்டுத் தரட்டுமாப்பா?"

"ஒண்ணும் வேண்டாம். நான் சித்தப் படுக்கிறேன்."

வயிற்றைப் பிடித்துக்கொண்டு அப்படியே ஊஞ்சலில் படுத்தான், குமார்.

பத்து நிமிஷம் கூட ஆகியிருக்காது. வாசல் கதவு தட்டப்பட்டது.

அப்போதுதான் அறுந்த சதையில் சுண்ணாம்பு வைத்துக் கொண்ட விசாலம் வாசலுக்கு விரைந்தாள். கூடம் ரேழியைத் தாண்டி, வாசல் திண்ணைவரை நடந்து போவதுகூட அறுபது வயது உடம்பிற்கு அலுப்பாகத் தெரியவில்லை. தாழ்ப்பாளைத் திறப்பதுதான் விசாலத்திற்குப் பிரம்மப்பிரயத்தனமாய் இருந்தது.

ஞாயிற்றுக் கிழமைகளில் பொதுவாய் வாசல்கதவு திறந்தே இருக்கும். வித்யாவும், குமாரும் வாசல் திண்ணையிலேயே வந்தவர்களோடு உட்கார்ந்து பேசிப் பொழுதைக் கழித்துவிடுவார்கள். மதுவும், டீ.வி.யில் கார்ட்டூன் படம், டர்பன், ரஜனி—என்று புரிந்த, புரியாத எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான். காலை ஆறு மணிக்குத் திறந்த வாசற்கதவு ஒருவழியாய் இரவு எட்டு மணிக்கு மூடப்படும்.

"விசாலம் மாமி! விசாலம் மாமி!" கூவியபடி வாசல் கதவருகில் எதிர் வீட்டு வேதா நின்று கொண்டிருந்தாள்.

விசாலம் கட்டை விரலைத்தூக்கிய நிலையில் மீதி நான்கு விரல்களால் கதவுத் தாழ்ப்பாள்களை விலக்க முயன்றாள். அதற்குள் வேதா, "மாமி! கதவெல்லாம் திறக்க வேண்டாம். இப்படியே கதவுக் கம்பி பின்னாடியே சொல்லிடறேன். மாமி! நீங்க ஊரிலேர்ந்து வந்தது முதல் ஆசைப்பட்டேளே, க்ருஷ்ண ப்ரேமியோட கதா காலட்சேபம் கேக்கணும்னு. இன்னிலேர்ந்து கீழச் சித்திரை வீதியில் எம்பார் வீட்டுக்கு எதிரே ஆரம்பம்.... மஹாபாரதம் சொல்றாராம். ரொம்ப அருமையாய் இருக்கும். போயிட்டு வாங்கோ....!" என்றாள்.

வேதா போய்விட்டாள்.

விசாலத்திற்கு விரலில் அடிபட்டதே மறந்துவிட்டது. க்ருஷ்ணப்ரேமி! எத்தனை உயர்ந்த உபந்நியாசகர்! கண்முன்னே காட்சிகளை நிறுத்துகிற மாதிரி அத்தனை தத்ரூபமாய் கதை சொல்வாராம். இன்றைக்குச் சீக்கிரம் வேலைகளை முடித்துவிட்டுப் போய்விட வேண்டும்.

விசாலம் சுறுசுறுப்பானாள்.


சரியாய் ஏழு ஐம்பதுக்கு விசாலம் வேலைகளை முடித்துக் கொண்டு புறப்பட ஆயத்தமானாள். பத்து நிமிஷத்தில் கீழச் சித்திரை வீதி போய்விடலாம்.

"வித்யா!" என்று அறைக்குள் இருந்தவளைக் கூப்பிட்டாள்.

தங்க கவரிங் நகைகளுக்கு
தன்னிகரற்ற பெயர் "மேரி"

கண்ணைக் கவரும், அழகும், பொலிவும், தரமும் உத்திரவாதமும் உடைய உலகப் புகழ்பெற்ற 22ct "மேரி" தங்க கவரிங் நகைகளை வாங்கி அணிந்து மகிழுங்கள்!

நகைகளின் நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் நகைகள் அனுப்பப்படும். வி.பி.பி. சார்ஜ் தனி. இலவச கேட்லாக்கைப் பெற எழுதுங்கள்!



மேரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால்பெட்டி: 1405, 14, ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை-600 017.

"விடுங்கோ, உங்களுக்கு நேரங்காலமே இல்லே....." என்று புருஷனைக் கடிந்தபடி புடவைத் தலைப்பை அரைகுறையாய்ப் போர்த்திக் கொண்டு வித்யா வெளியே வந்தாள்.

"என்னம்மா? எங்கேயோ புறப்படற மாதிரி இருக்கு?" என்றாள்.

அவள் குரலில் தொனித்த கிண்டலை விசாலம் லட்சியம் செய்யவில்லை. சிறுசு! அப்படித்தான் பேசும்!

ஆனாலும் பெருமையுடன், விசாலம் விவரம் சொன்னாள்.

கேட்டதும் வித்யா சட்டென முகம் மாறினாள்.

"உங்களைத்தானே....?" என்றாள் அறையை நோக்கி.

குமார் ஓடி வந்தான். "என்ன விது?"

"உங்கம்மா எங்கியோ மஹாபாரதம் கேட்டுட்டுப் பாதி ராத்திரி வரப் போறாராம்."

வித்யா இப்படிச் சொன்னதும் விசாலம் அவசர அவசரமாய், "எதிர் வீட்டு வேதாவோட பாட்டியும் வராளாம்.... சேர்ந்து போயிட்டு ஜாக்கிரதையா வந்துடறேம்.. கழுத்துலகூட செயின் போட்டுக்கலே' என்றாள் மூளிக் கழுத்தைக் காட்டியபடி.

"ஆஹா! நாங்க ஒண்ணும் அதுக்குக் கவலைப்படலே... ஆமாம், மஹாபாரதம் என்ன உங்களுக்குத் தெரிஞ்ச கதைதானே? திரும்பத் திரும்ப அதைப் போய்க் கேட்டே ஆகணுமா? கிராமத்தில்தான் நெறைய கேட்டிருப்பேளே!"

"புராணக் கதை திரும்பத் திரும்பக் கேட்கக் கொடுத்து வச்சிருக்கணும்மா, வித்யா!"

"அதுசரி.... கதை கேட்டுட்டு ராத்திரி நீங்க திரும்பி வரப்ப யார் எழுந்து கதவைத் திறக்கிறது? ஆபீஸ் வேலை செஞ்சிட்டு களைப்பா தூங்கிண்டிருப்போம், வந்து கதவைத் தட்டுவேள். யார் எழுந்து வந்து தாழ்ப்பாளைத் திறந்து.... போறும் போங்கோ.... மஹாபாரதமாம்.... மஹாபாரதம்.... திரும்பத் திரும்ப அலுக்காதோ மனுஷாளுக்கு?"

"ஆமாம்மா.... பழைய கதை.... திரும்பத் திரும்ப 'போர்' அடிக்கும் உனக்கு.... பேசாமல் போய்ப் படு."

கணவனும் மனைவியும் அந்த வயதான ஜீவனின் வாயில் மண்ணைப் போட்டுவிட்டு அது வாயடைத்து நிற்கும்போதே அறைக்குள் போய்க் கதவைத் தாழ் போட்டுக் கொண்டன..

உள்ளே சிணுங்கல், சிரிப்பு, சிருங்காரக் குழைவு....

விசாலம் மூடிய கதவைப் பார்த்துக் கண் பனிக்கக் கேட்டாள். "திரும்பத் திரும்ப.... அலுக்காதோ, மனுஷாளுக்கு?"



• என். கோவிந்தசாமி.

புதுவையின் தமிழ் மன்றங்கள் அறுபது!

பாண்டிச்சேரி மாநிலத்தில் மற்ற எந்த ஒரு மாநிலத்தின் மொழிக்கும் இல்லாத அளவுக்குத் தமிழ் மொழிக்காக அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய அமைப்புகள் இயங்கி வருகின்றன.

இந்த அமைப்புகள் அனைத்திலும் மிகுந்த தொடர்பு கொண்டவர்களாக விளங்குபவர்கள் தொழிலதிபர்கள் என். கோவிந்தசாமி, வி. சொக்கநாதன் ஆகிய இருவர்.

— சிதம்பரம் வி. காமராஜ்.



• வி. சொக்கநாதன்.



* புதுச்சேரியில் உள்ள 'அரிக்கமேடு' என்ற இடத்தில் நிலத்தை அகழ்வாராய்ச்சி செய்ததில் புதுவை வரலாற்றைப் பற்றிய சுவையான தகவல், கிடைத்தது. 'ரோமாபுரி'யில் இருந்து சில வணிகர்கள் புதுவைக்கு வந்து இங்குள்ள பொருட்களை வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாகத் தங்க நாணயங்களைக் கொடுத்தனர். இதனால் நாளடைவில் அவர்களது தங்க நாணயங்களின் இருப்பு பெருமளவு குறைந்து போனதால், நம் மீது பொறாமை கொண்ட ரோமாபுரியினர் நம்முடன் நடத்தும் வாணிபத்தைக் கண்டித்துக் 'கண்டன ஊர்வலங்கள்' நடத்தினர்.

— வ. நாராயண நம்பி.

A ஃபார் ஆப்பிள் M ஃபார் மர்டர்


விடிந்து வெகு நேரமாகியிருந்தாலும், ஆகாயம் பூராவும் அப்பிக் கிடந்த சாம்பல் நிறமான அழுக்கு மேகங்கள், கிழக்கில் எட்டிப் பார்த்த சூரியனை ஒரே அமுக்காய் அமுக்கி — பூமியில் வெளிச்சம் விழாத படிக்கு வில்லத்தனம் பண்ணிக்கொண்டிருந்தன. எங்கோ ஐநூறு கிலோ மீட்டர்க்கு அப்பால் வங்கக் கடலில் உட்கார்ந்திருந்த புயல் கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்து சென்னையை மிரட்டிக் கொண்டிருக்க, எந்த நிமிஷமும் வாயைத் திறக்கக் கூடிய சாத்தியத்தில் இருந்தது தலைநகர ஆகாயம். சூரியனின் கதிர்கள் தோற்றுப் போயிருந்ததில், காற்றில் குளிர் குண்டூசி முனைகளாய் மாறியிருந்தது. மரங்களில் அடைபட்டிருந்த பட்சி வர்க்கங்கள், பொழுது விடிந்துவிட்டதா இல்லையா என்பதை அனுமானிக்க முடியாமல், கத்துவதற்காக யோசித்தன.

குத்துகிற குளிரைப் பொருட்படுத்தாமல் அந்நேரத்துக்கே குளித்துவிட்ட யாமினி பெட்டிக்கோட்டை மார்பு வரைக்கும் உயர்த்திக் கட்டி, சேலையை மேலே போர்த்திக் கொண்டு, அந்தச் சிதிலமான பாத்ரூமின் தகரக் கதவை 'டர்ர்ர்'ரென்று திறந்து கொண்டு வெளிப்பட்டாள்.

யாமினி ஒரு இருபது வயது சொர்க்கம். தோல் சீவிய மாம்பழ நிறம்; மின்சாரம் ததும்பும் கண்கள். செல்லமாய்த் தொட்டு நீவிவிட்ட மாதிரி நாசி. இரண்டு ரோஜா இதழ்களைப் பிய்த்து ஒட்ட வைத்த மாதிரி உதடுகள். கெட்டி வெண்ணெய்க் கட்டியாய் மோர்வாய்.... அப்புறம் (இந்தக் கதைக்கு ஜெ. எப்படியும் யாமினியின் உருவத்தை வரைந்திருப்பார். கழுத்துக்குக் கீழ்பட்ட சங்கதிகளை கண்ணால் பார்த்துக் கொள்ளுங்கள்.)

பாத்ரூமினின்றும் வெளிப்பட்ட யாமினி வீட்டிற்குள் நுழைந்தாள். அப்பா திருஞானம் ஒரு அடைப்புக்குறி மாதிரி இன்னமும் போர்வைக்குள் இருக்க, அம்மா ஆனந்தி ஸ்டவ்வில் பாலை ஏற்றிவிட்டு, சர்க்கரை டப்பாவைத் தட்டித் தட்டி— ஒட்டியிருந்த சர்க்கரைத் தூள்களைச் சேகரம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

ஆனந்தி நாற்பது வயதைத் தொட்டிருந்தாலும், இன்னமும் தலையில் நரை விழாமல், உடம்பைச் சிக்கென்று வைத்து, யாமினிக்கு மூத்த அக்கா மாதிரி இருந்தாள். பயந்த சுபாவம். கே. எஸ். கோபாலகிருஷ்ணன்



ராஜேஷ்குமார்



படத்தில் வருகிற மாதிரியான அடக்க வொடுக்கமான மனைவி. கணவர் திருஞான மும் ஆனந்திக்கு ஏற்ற மாதிரி அப்பிராணி யாய் இருந்தார். தனியார் கம்பெனி ஒன்றில் எட்டு மணி நேரமும் 'டியர் ஸார்' என்று டைப் மெஷினைத் தட்டும் உத்யோகம். எப் போதாவது ஆபீஸ் மானேஜர் கூப்பிட்டு, 'என்னய்யா.... திருஞானம்.... இப்படியா டைப் பண்றது?' என்று அதட்டலாய்க் கேட்டால், மனசு இரண்டாய் ஒடிந்து போய்க் கண்களில் நீர் திரள்கிற ரகம். கூட்ட மாய் வருகிற பஸ்களைத் தவிர்த்துவிட்டு எந் நேரமானாலும் காலியாய் வருகிற பல்லவனுக் காகக் காத்திருப்பவர். அவருக்குப் பிடிக்காத இரண்டு எது என்று கேட்டால், 1. அரசியல்; 2. சினிமா என்பார். பிடித்த இரண்டு எது என்று கேட்டால், 1. யாமினி...; 2. யாமினி... என்று சொல்பவர். யாமினிக்குப் போன மாதமே கல்யாண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்திருக்கிறது. மாப்பிள்ளைப் பையன் கிருஷ்ண மூர்த்தி. ஒரு தேசிய வங்கியில் சுழலும் ஃபேனுக்குக் கீழே உட்கார்ந்து கிரிக் கெட் காமெண்ட்ரியைக் கேட்டுக்கொண்டே, மாதமானால் ஆயிரத்துச் சொச்சம் ரூபா யைச் சம்பளமாக வாங்கும் பாக்யவான். எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லாத வன் என்று தரகரால் 'அக்' மார்க் முத்திரை குத்தப்பட்டவன். அவனுடைய ஒரே பிடிவாதம், வேலைக்குப் போகிற பெண்தான் தனக்கு மனைவியாய் வரவேண்டும் என்பது. கல்யாண நிச்சயதார்த்தத்தை வேண்டு மானால் நடத்திக் கொள்ளலாம்.... உங்கள் பெண்ணுக்கு வேலை கிடைத்த அடுத்த வாரமே திருநீர்மலையில் கல்யாணம் என்று மாப் பிள்ளைக்கு அப்பா அடித்துச் சொல்லியிருந் தார்.

கல்யாணம் நிச்சயமான பின், யாமினிக்கு இரண்டு இண்டர்வியூக்கள் வந் து, இரண் டுமே கண்துடைப்பு இண்டர்வியூக்கள். மனைவியின் தூ...ரத்துச் சொந்தக்காரப் பொண்ணுக்கு அப்பாய்ண்ட்மெண்ட் ஆர் டரை அனுப்பி வைத்துவிட்டு, இண்டர் வியூக்கு வந்த பெண்களிடம் உலகிலேயே உயரமான மலை, ஆழமான கடல், அகல மான ரோடு எது என்று கேட்டுத் தெரிந்து கொண்டு, ஒரு புன்னகையோடு அனுப்பி வைத்த இண்டர்வியூக்கள்.

ஆனால் —

யாமினிக்கு —

இன்றைக்குத்தான் அட்டெண்ட் பண்ணப் போற இண்டர்வியூ மனத்தில் கொஞ்சம் நம்பிக்கை வார்த்துக் கொண்டிருந்தது.

குளித்து முடித்து நீர் சொட்டும் முகத் தோடும், தாறுமாறாய்ப் போர்த்திக் கொண்ட சேலையோடும் உள்ளே வந்த யாமினியை அம்மாக்காரி ஆனந்தி ஆச்சர்யமாய்ப் பார்த் தாள். ''அதுக்குள்ளே குளிச்சிட்டியாடி.... முதுகைத் தேய்க்க வரலான்னு இருந்தேன்.''

''நானே தேச்சுக்கிட்டேன்.''

''காதுல சோப்பு நுரை பார்... நீ குளிச்ச லட்சணம் நல்லாயிருக்கு....'' ஆனந்தி மகளின் காதைத் துடைத்துவிட, அவள் ப்ளைவுட் தடுப்புக்குப் பின்னால் போனாள். ஸ்பான்ச் வைத்த பிராவை மாட்டிக் கொண்டே, இண்டர்வியூக்கு எந்த சேலையைக் கட்டிக் கொண்டு போகலாம் என்று யோசித் தாள். மூளை, தக்காளி நிற போட்டோ பிரிண்ட் சேலையைக் கட்டிக் கொண்டு போ என்றது.

மர பீரோவைக் குடைந்து, அம்மாவின் சேலைகளைத் தள்ளி வைத்து, கவரில் போட்டு வைத்திருந்த அந்தத் தக்காளி நிற போட்டோ பிரிண்ட் சேலையையும், அதே வண்ண ப்ளவு ஸையும் எடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

ஆனந்தியின் குரல் கேட்டது.

''யாமினீ வர்றியா.... காப்பி கலந்து வெச்சிருக்கேன்.''

''ஆத்தி வையம்மா வந்துடறேன்.''

''ஏண்டி ஆகாசம் பூராவும் இப்படி நிறை மாசப் பொண்ணு மாதிரி கனத்துக்கிடக்கு. எப்படிடி இண்டர்வியூக்குப் போவே?''

''மழை பாட்டுக்கு மழை வரட்டும். நான் பாட்டுக்கு பஸ்ஸைப் பிடிச்சுப் போயிடு வேன்.''



பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்ததாலோ என் னவோ, பாண்டிச்சேரிக்கு ஒரு தனிக் களை உண்டு. இங்குள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையில், அவர்கள் பேசும்போது ஒரு பிரெஞ்சு வார்த்தையாவது வந்து விழாமல் போகாது. ஆங்கிலத்தின் சிதைந்த சொல்லைப் போல உச்சரிக்கப்படும் இதன் மூல வடிவம் பிரெஞ்சு.

தமிழில் கேட்க இனிமையோ இனிமை!

பாமர மக்களிலிருந்து 'ஸொல்தா' (மேல் மட்டத் தினர் — ஃபாரின் ரிட்டர்ன்டு) வரை பேசப்படும் அவ் வார்த்தைகளுள் சிலவற்றை நீங்களும் தெரிந்து கொள் ளுங்களேன்:

'கோர்னமா' — கவர்னர் மாளிகை, 'பூதரமாவு' — முகப்பவுடர், 'இரேக்கட்டி' — சாக்பீஸ், 'அவுக்கா' — அட்வகேட், 'பொசியம்' — டானிக், 'ஒப்பித்தால்' — ஹாஸ்பிடல், 'சவுக்காரம்' — துணி சோப்பு.

எப்படி...? 'பிச்சேரி' யில் (ஸாரி... புதுச்சேரியில்) கையாளப்படும் வார்த்தைகள் முடியைப் 'பிச்சிக்க' வைக்கின்றதா?

— நடாதூர் வி. திருமகன்.



"ஏண்டி அமிஞ்சிக்கரை எங்கிருக்கு. பல்லாவரம் எங்கிருக்கு. இந்த மழையில் ரெண்டு மூணு பஸ்ஸை மாத்திப் போறதுக்குள்ளே பிராணனே போயிடுமே."

பின்னலை மாட்டிச் சேலையைச் சுற்றிக் கொண்டு வெளியே வந்தாள் யாமினி. "அதெல்லாம் சிரமமில்லாம போயிடலாம்மா! எங்கே எனக்குக் காப்பியைக் கொடு."

ஆனந்தி மகளை ஏறிட்டுப் பார்த்தாள்.

பாலீஷ் துணியால் தேய்த்த பாத்திரம் மாதிரி மினுமினுப்பாய்த் தெரிந்த மகளை நெஞ்சு நிறைக்கப் பார்த்துக் கொண்டே காப்பி டம்ளரை எடுத்து நீட்டினாள்.

அதே விநாடி திருஞானமும் போர்வையைக் கசாமுசாவென்று விலக்கிக் கொண்டு கண்களைத் தேய்த்தபடி எழுந்து உட்கார்ந்தார். கேட்டார்.

"அம்மா யாமினி ரெடியாயிட்டியாம்மா?"

"ஆயிட்டேன்பா."

"இண்டர்வியூ எத்தனை மணிக்கு?"

"பத்து மணிக்கு. எட்டு மணிக்கே இங்கிருந்து கிளம்பினாத்தான் இண்டர்வியூ நேரத்துக்குப் போய்ச் சேர முடியும்பா."

"அந்தக் கம்பெனியோட பேர் என்னம்மா?"

"கிட் புட்ஸ்."

"கம்பெனில என்ன தயார் பண்றாங்களாம்?"

"பேப்பர்ல ஒருவாட்டி அந்தக் கம்பெனியோட விளம்பரத்தைப் பார்த்திருக்கேன்பா. குழந்தை உணவுத் தயாரிக்கிற கம்பெனி. விசாரிச்சுப் பார்த்த அளவில ரெப்யூடட் கம்பெனின்னுதான் சொல்றாங்க."

"எப்படியோ அந்த வேலை கிடைச்சுட்டா பரவாயில்லேம்மா. நிச்சயம் பண்ணி வெச்சிருக்கிற உன்னோட கல்யாணம் நடந்துடும். எல்லார் வீட்லேயும் நல்ல வரன் அமையலே. அதனால பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணலே; கையில பணம் இல்லே. அதனால பொண்ணு கல்யாணம் நிக்குதுன்னு சொல்வாங்க. ஆனா உன்னோட நிலைமையே வேறம்மா... கையில பணம் இருக்கு; மனசுக்குப் புடிச்ச மாப்பிள்ளை அமைஞ்சிருக்கு. வேலை இல்லாததனால கல்யாணம் நடக்கலே."

"கவலைப்படாதீங்கப்பா. எனக்கு இந்த வேலை கிடைச்சுடும்."

"எப்படிம்மா அவ்வளவு நிச்சயமா சொல்றே?"

"அப்பா இந்த வேலைக்கு முக்கியமான க்வாலிபிகேஷன், பி. எஸ்ஸியில ஹோம் சயன்ஸ் வேணும். நான் ஹோம் சயின்ஸ். ஹோம் சயின்ஸ் படிச்ச காண்டிடேட்ஸ் ரொம்பவும் கம்மி...: அதுவும் கம்பெனி பல்லாவரத்துல இருக்கு. அவ்வளவு தூரத்தை யாரும் ப்ரிஃபர் பண்ண மாட்டாங்க."

திருஞானம் சிரித்தார்.

"உன்னோட நினைப்பு தப்பும்மா. ஆண்கள் மாதிரியே பெண்களும் இப்போ எங்கே வேலை கிடைச்சாலும் போறதுக்குத் தயாரா இருக்காங்க. சஹாரா பாலைவனத்துல ஒரு

ஆபீஸ் கட்டி, அங்கே இண்டர்வியூ வெச்சாலும் போவாங்க.''

ஆனந்தி கணவரின் பேச்சில் குதூகலிட்டாள். ''நீங்க அவகூட வளவளன்னு பேசிட்டிருக்காதீங்க. எந்திரிச்சுப் போய்க் குளிச்சு முடிச்சுட்டு, குழந்தையை பஸ் வரைக்கும் கொண்டு போய் விட்டுட்டு வாங்க. பாழாப் போன மழை கொட்டியும் தீர்க்காம, விலகியும் போகாமே ஆகாசத்துல நின்னு பயமுறுத்துது. அந்த ரேடியோவைக் கொஞ்சம் திருப்புங்க... என்ன சொல்றான்னு கேக்கலாம்.''

திருஞானம் எழுந்து, வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டே, ஸ்டாண்ட் மேலிருந்த புகைபடிந்த ரேடியோவை நோக்கிப் போனார்.

சரியாய் எட்டு மணி.

பஸ் ஸ்டாப் வரைக்கும் வருகிறேன் என்று புறப்பட்ட அப்பாவை வேண்டாமென்று தவிர்த்துவிட்டு வாசற்படி இறங்கினாள் யாமினி.

இடது தோளில் வானிடி பேக். வலது கையில் மடித்து வைக்கப்பட்ட ஊதா நிறக் குடை. ஸ்லிப்பர்கள் லேசாய் சப்திக்க, தெருக்கோடியில் இருக்கும் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள். தலைக்கு மேல் ஆகாயம் குளிர் மேகங்களோடு அலைந்து கொண்டிருக்க, பஸ் ஸ்டாப்பில் கூட்டம் சொற்பமாய் இருந்தது.

விரித்த குடையோடு பஸ் வருகிறதா என்று எட்டிப் பார்க்கும் ஒரு பெரியவர். கையில் புத்தகக் கட்டோடு நோஞ்சானாய் ஒரு நீல நிறத் தாவணிப் பெண். பாலீதின் பேப்பரில் சுற்றப்பட்ட பைல்களோடு ஒரு ஆபீஸ் கோயர். லுங்கியை வழித்து கட்டிக்கொண்டு பீடிப் புகையோடு ஒரு பேர்வழி. அவ்வளவு தான். இந்த நான்கு நபர்களோடு ஐந்தாவது நபராய்ப் போய் இணைந்து கொண்டாள் யாமினி. நிமிஷங்கள் நகர. 'எங்கே இறங்கி, எந்த பஸ் பிடித்துப் போனால் பல்லாவரத்துக்குச் சமீபம்' என்று யோசித்துக் கொண்டே தலையை உயர்த்தியவளுக்கு —

ஒரு சின்ன ஷாக்.

ஸ்கூட்டரை வெகு அருகாக நிறுத்தியபடி, கிருஷ்ண மூர்த்தி, வருகிற மாதத்தில் ஏதாவது ஒரு நாளில், அவளுடைய கழுத்தில் தாலியைக் கட்டப் போகிற, கிருஷ்ண மூர்த்தி, புன்னகையோடு தெரிந்தான்.

''குட்மார்னிங் யாமினி'' பல்வரிசை ஒழுங்காய்த் தெரியச் சொன்னான்.

''கு... கு... குட்மார்னிங்.''

''எங்கே புறப்பட்டே?''

''ஒரு இண்டர்வியூ.''

அவன் மலர்ந்தான். ''ஈஸிட்.... எங்கே?''

''பல்லாவரத்துல 'கிட் புட்ஸ்'ன்னு ஒரு கம்பெனி.''

''விஷ் யூ ஆல் த பெஸ்ட்.''

''தேங்க்யூ.''

''இன்னைக்குக் காலையிலேதான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். உனக்கு வேலை கிடைச்சாலும் சரி, கிடைக்காமே போனாலும் சரி, அடுத்த மாசம் 'ஹேமமாலினி'யில் கல்யாணத்தை முடிச்சுட வேண்டியது தான்னு. எங்க ஃபாதரும் மதரும்கூட ஒத்துக்கிட்டாங்க.''

யாமினியின் முகத்தில் வெட்கம் ஒரு அவசர கோட்டிங் அடித்துப் பார்த்துப் பின் அழிந்தது. மெல்லிய குரலில் சொன்னாள்:

''இந்த வேலை கிடைச்சுடும்ன்னு நம்பறேன்.''

''கிடைக்காட்டியும் பரவாயில்லை யாமினி. டென்ஷன் இல்லாம இண்டர்வியூவை அட்டெண்ட் பண்ணு. வேலை கிடைச்சா சந்தோஷம். கிடைக்காமப் போனாலும் வருத்தமில்லை. அநேகமா இன்னிக்கு சாயந்தரம் தரகர் உன்னோட வீட்டுக்கு வருவார். விஷயத்தை விலாவாரியா எடுத்துச் சொல்வார்.''

யாமினி மனசு பூராவும் ஒரு இனிமை பரவ புன்னகைத்தாள். கிருஷ்ண மூர்த்தி தன் கிராப்பைக் கோதியபடி கேட்டான்.

''நீ இப்போ எங்கே போகணும்?''

''மவுண்ட் ரோடுக்குப் போய் பஸ் மாறணும்.''

''இப் யூ டோண்ட் மைண்ட், நான் உன்னை ட்ராப் பண்றேனே? மழை வேற எந்த நிமிஷமும் பிச்சிக்கும் போலிருக்கு.''

''வேண்டாம். நீங்க போங்க. எனக்கு இப்போ பஸ் வந்துடும்.''

''ஓ.கே! தமிழ் பண்பாடு!'' தோள்களைக் குலுக்கிச் சிரித்த கிருஷ்ண மூர்த்தி கிக்கரை உதைத்து, ஸ்கூட்டருக்கு உயிரூட்டினான். ஸ்கூட்டரின் மேல் பரவிக் கொண்டே சொன்னான். ''யாமினி! இண்டர்வியூ என்னாச்சுன்னு சாயந்தரம் போன் பண்ணிச் சொல்ல முடியுமா?''

''சொல்றேன்.''

''தாங்க்யூ....'' அவன் ஸ்கூட்டரை நகர்த்தினான்.


அவள் சாயந்தரம் போன் பண்ணிச் சொல்லப் போவதில்லை என்பதும், அவன் யாமினியைப் பார்ப்பது அதுவே கடைசி முறை என்பதும் அப்போது கிருஷ்ண மூர்த்திக்குத் தெரிய நியாயமில்லை.

யாமினியின் பஸ் தூரத்தில் வந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

பாண்டிச்சேரி, இந்தியாவுடன் இணைந்த போது, இங்குள்ள மக்களில் நூற்றுக்கு 97 பேர் படித்தவர்கள். கல்வி அறிவு பெற்றவர்கள். அப்போது (1954) இந்தியாவில் வேறெந்த மாநிலத்தைக் காட்டிலும் பாண்டிச்சேரியில்தான் கல்வி அறிவு உள்ளவர்களின் விழுக்காடு அதிகம். (97%).

— எஸ். ஜெயராமன்.





விவரமறிந்தோர் நாடுவது
ஆஸ்ப்ரோ ஆறுதல்
இப்போது 2 வித வீரிய வகைகளில் வருகிறது.
ஆஸ்ப்ரோ , ஆஸ்ப்ரோ 600
சாதாரண தலைவலிக்கு
மண்டை பிளக்கும் கடுமையான தலைவலிக்கு
ASPRO 600
ASPRO 600
ஆஸ்ப்ரோ
எக்ஸ்ட்ரா ஸ்ட்ரெங்த்
ஆஸ்ப்ரோ 600

பாண்டிச்சேரியில் இருக்கும் 'மூர்'மார்க்கெட்டின் தம்பி!



புதுச்சேரியிலுள்ள ராமகிருஷ்ணா நகரையடுத்த ஸ்ரீ வரதவல்லி மாரியம்மன் கோவிலுக்கு எதிரிலுள்ள ஒரு மரம், மற்ற மரங்களைப் போலல்லாது, முன் பகுதியில் யானை முகங்களுடன் காட்சி தருகின்றது. சதுர்முக மர வடிவில் விநாயகரே இங்கு 'ஸ்வயம்பு'வாக எழுந்தருளியிருப்பது கண்டு மக்கள் அதற்கு மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, மாலை சூட்டி, பக்தியுடன் வணங்குவது காண வேண்டிய ஒன்று.

— நடாதூர் வி. திருமகள்.



பாண்டிச்சேரி நகரின் இதயத்தில் அமைந்துள்ள மணக்குள விநாயகர் ஆலயத்தைப் பற்றி கதை ஒன்று உண்டு. இப்போது கோவில் அமைந்திருக்கும் இடத்துக்குப் பக்கத்தில் ஒட்டியவாறு ஒரு பிரெஞ்சுக்காரர் வசித்து வந்தார். ஒருநாள் தன் வீட்டுக்குப் பின்புறம் ஒரு விநாயகர் உருவத்தைக் கண்டார். அதன் புனிதத் தன்மையை உணராத அவர், அதைக் கடலில் விட்டெறிந்திருக்கிறார். என்ன ஆச்சரியம்! மறுநாள் கடற்கரையில் அதே உருவத்தைக் கண்டிருக்கிறார். மீண்டும் கடலில் விட்டெறிந்திருக்கிறார். திரும்பவும் அந்த உருவம் கரையில் ஒதுங்கியிருக்கிறது. மூன்றாவது முறையாக எறிந்தபின் அவர் உடல் நோய்வசப்பட்டிருக்கிறார். பிறகு, சில பெரியவர்களின் ஆலோசனைப்படி, ஓர் ஆலயம் எழுப்பி அங்கு அதே உருவத்தை வழிபாட்டுக்குரியதாக அமைத்த பின்னர்தான் பூரண குணமடைந்தாராம்.

— எஸ். ஜெயராமன்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புதுவையின் இதயப் பகுதியான மகாத்மா காந்தி வீதியில் நீளநெடுக எல்லா இடத்திலும், பிளாட்பாரங்களிலும், கடைகண்ணிகள் முளைத்துவிடும். இதற்காக, முதல் நாள் சாயங்காலத்திலிருந்தே ஆயத்தங்கள் எல்லாம் ஆரம்பமாகிவிடும். ஒருவேடிக்கை என்னவென்றால்—

'Daily Market ஐ விட, 'Sunday Market'க்குத்தான் அதிகக் கூட்டம்' வந்து, 'ஜே.ஜே' என்று கோஷம் போடும். உள்ளூர்வாசிகள் தவிர, அன்று சுற்றுப்புறத்தில் உள்ள திண்டிவனம், கடலூர் — ஏன், சென்னையிலிருந்து கூட இதற்கென மக்கள் வந்து குவிவார்கள்.

'அப்பா அம்மாவைத் தவிர, எல்லாமே கிடைக்கும்' என்று சொல்லப்படும், 'மூர்மார்க்கெட்'டுக்குத் தம்பியாக்கும் இந்த 'ஸண்டே மார்க்கெட்'!

— நடாதூர் வி. திருமகள்



பா
மொழிகளே
3. பிரெஞ்சு
களுமே அ
இந்தியாவிலே
மாநிலம் பா





சந்திரநாகூரிலிருந்து வந்த மூன்று கப்பல்கள் புதுவைக் கடற்கரையினின்று சற்று தூரத்தில் நீரில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. கரையில் ஒரே பரபரப்பு...! ஏன்? அக்கப்பல்களிலொன்றில் புதுவையின் புதிய ஆளுநர் (கவர்னர்) இருக்கிறாராம். யார் அவர்...?

சரியாகக் காலை 6 மணிக்கு இருபத்தியொரு குண்டுகள் முழங்க பதவி ஏற்க இருக்கும் புதிய ஆளுநர், டூப்ளேயேதான்! தனது மனைவியுடனும், பரிவாரங்களுடனும்மிடுக்குடன்இறங்குகிறார்; பதவி ஏற்கிறார்.

சந்திரநாகூரிலிருந்து 13.1.1742 மாலையே புதுவைக்கு வந்து விட்டார். ஆனால் கரையில் இறங்காமல் இரவு முழுவதும் கப்பலிலேயே தங்கி இருக்கிறார். முதல் நாள் மாலை வந்தவர் ஏன் இறங்கவில்லை.

நல்ல நாள் பார்த்து இறங்கி இருப்பாரோ?

ஆதாரம்:

'ஆனந்தரங்கம்பிள்ளை நாட்குறிப்பு'

தகவல்: மலர



புதுவைக் கடற்கரைச் சாலையில் உள்ளது 'பான்சியோனு மகளிர் பிரெஞ்சுப் பள்ளி. 'எம்மதமும் சம்மதம்' என்று அமைதியான முறையில் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன அங்குள்ள தெய்வப்படங்கள். ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு தேவமாதா படமும், அருகிலேயே கல்விக்கு அதிபதியாம் கலைமகள் படமும் அருள்பாலிக்கின்றன.

பெரும்பாலும் கிறிஸ்துவப் பெண்களே படிக்கும் அந்தப் பள்ளியின் நடு ஹாலில் ...ள்ள சுவரில் ஞாயிறு முதல் 7 நாட்களுக் ...ன இராகு கால நேரம் காட்டும் 'டைப் ...ய்யப்பட்ட அட்டை வேறு!

— நடாதூர் வி. திருமகள்.

மறைந்த பிரதமர் ஜவாஹர்லால் நேரு அவர்கள் ஒருமுறை பாண்டிச்சேரி வந்திருந்த போது சொன்னது:

"கொந்தளிப்பான இந்த உலகத்தில், பாண்டிச்சேரி இனிமையும் அமைதியும் நிறைந்த ஓர் இடம். அதனாலேயே, நான் இங்கு வருவதை மிகவும் விரும்புகிறேன். பாண்டிச்சேரியில் தொடர்ந்து பிரெஞ்சு கற்பிக்கப்பட வேண்டும். மேற்கத்திய நாடுகளிலேயே மிகச் சிறந்த கலாச்சாரமான பிரெஞ்சு கலாச்சாரத்தின் ஜன்னலாக பாண்டிச்சேரி அமைய வேண்டும்."

— எஸ். ஜெயராமன்.



...டிச்சேரி மாநில அரசு, தனது ஆட்சிமொழியாக ஐந்து ... அங்கீகரித்துள்ளது. அவை: 1. தமிழ், 2. ஆங்கிலம், 4. தெலுங்கு, 5. மலையாளம். இந்த ஐந்து மொழி ...கஸ்தத்தில் ஒரே நிலையாகத்தான் - கருதப்படுகிறது. ...லே ஐந்து மொழிகளை ஆட்சி மொழியாகக் கொண்ட ...டிச்சேரி மட்டுந்தான்.

— எஸ். ஜெயராமன்.



ஒரு நாள் பாரதியார் எனது தந்தையார் அமரர் நடாதூர் வரகவி சுந்தர வேங்கடாச்சாரியாரைக் கூப்பிட்டு, "டேய், சின்னப்பையா, இன்றைக்கு நாமெல்லாரும் ஹரிஜனங்களோடு கொள்ளுக் கஞ்சி சாப்பிடப் போகிறோம்" என்று அழைத்துக் கொண்டு போய்ச் சாப்பிட்டதால், உறவினர்கள் என் தந்தையாரை ஜாதிப் பிரஷ்டம் செய்தனர்.

சேதி கேள்விப்பட்ட பாரதி, "சின்னப்பையா, அவர்களென்ன உன்னைப் பிரஷ்டம் செய்வது. நீ அவர்களை ஜாதிப் பிரஷ்டம் செய்துவிடு. ஒரு நாள் உன்னைத் தேடி வருவார்கள்" என்றும் கூறினார். பின்னர் என் தந்தையார் முறைப்படி வேத அத்யயனம் செய்து, சமஸ்கிருத மொழியில் க்ரந்தங்கள் எழுதினார். (ஸ்ரீ தேசிகாஷ்டகம், ஸ்ரீ ஹயக்ரீவாஷ்டகம் இன்னபிற.) சித்த வைத்திய ஜோதிட சிகாமணியாக விளங்கிப் புகழ்பெற்ற காலத்தில் உறவினர்கள் தங்கள் தவறுக்கு வருந்தியது மட்டுமில்லாமல், தங்களின் ஆசார்யராய் என் தந்தையாரை ஏற்றபோது, பாரதியின் தீர்க்கதரிசனத்தை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார்.

— புதுவை அமலன்.

முன் கதை

தாபிலேசுவரர் மலையில் உள்ள தாபிலேசுவரரையும் அதே இடத்தில் பாதாளக் குகையில் விளங்கும் சண்டிகாதேவியையும் வணங்கி அருள் பெற்று வரப் புறப்படுகிறான் கௌதமிபுத்திர சதகர்ணி. பிரதிஷ்டானத்தைத் தலைநகராகக் கொண்டு சாதவாகன அரசை ஆண்டு வந்த அவனுக்குத் தன் சிற்றரசை விஸ்தீரணம் செய்து தன் மூதாதையர் காலம் போல் அதனைப் பேரரசாக்க வேண்டும் என்ற ஆசை.

தாபிலேசுவரர் மலைப்பிரதேசத்தில் ஒரு பாடும் பெண்பேய் உலாவுவதாகக் கேள்விப்பட்டிருந்த சதகர்ணி, உண்மையில் சித்தரஞ்சனி பேயல்ல, அழகிய பெண்ணே என்று அறிகிறான். அப்பகுதி மக்கள் பயந்து வீடு வாசல்களைத் துறந்து போய் விடுவார்கள் என்ற நோக்கிலேயே பேய் நாடகம் ஆடப்படுகிறது என்றும் அங்கே படைமுகாம் அமைப்பதே நோக்கம் என்றும் உணர்கிறான். சித்தரஞ்சனியைக் கதாநாயகியாக்கி இந்தப் பேய் நாடகத்தை நடத்துபவன் மகாக்ஷத்ரபனும் வடகொங்கணத்து க்ஷத்ரப மன்னனுமான நாகபாணன். அவனுடைய சூழ்ச்சிகளுக்கெல்லாம் எதிர்ச் சூழ்ச்சி செய்து தான் நம்பிக்கையுடன் அப்பகுதி மக்களுக்கும் வீரத்தை ஊட்டுகிறான் கௌதமிபுத்திரன். ஓர் இரவு நாகபாணனிடம் சிறைப்பட்டு அவனது அஞ்சன்வேல் கோட்டையின் பாதையும் ரகசியங்களையும் அறிந்து கொண்டு மறுநாள் காலையே தப்பிவிடுகிறான். சித்தரஞ்சனி கௌதமிபுத்திரன் மீது காதல் கொண்டு அவனைச் சண்டிகா தேவி சன்னிதியிலேயே திருமணம் புரிந்து கொள்கிறாள். ஆனால் முதலிரவைக் கூடக் குதூகலமாகக் கொண்டாட முடியாமல் அவர்களை ஆபத்துக்கள் சூழ்கின்றன.

சித்தரஞ்சனிக்கு ஏற்கனவே மணாளனாக நிச்சயிக்கப்பட்டிருந்த காஷ்டானனும் சித்தரஞ்சனியின் வளர்ப்புத் தந்தையான க்ஷத்ரபனும் கௌதமிபுத்திரனிடம் ஏமாந்ததில் பெரும் கோபம் அடைந்திருக்கிறார்கள். சித்தரஞ்சனியை எப்படியாவது மீட்டுக் கொண்டு போய் விடுவது என்று திட்டமிடுகிறார்கள். மகாக்ஷத்ரபனான நாகபாணன் யோசனைப்படி காட்டின் ஒரு பகுதிக்குத் தீ வைத்து அப்பகுதி மலைவாசிகளுக்கு ஆபத்து ஏற்படுத்துவது என்றும், சித்தரஞ்சனியைத் தூண்டில் மீனாகப் பயன்படுத்திக் கௌதமிபுத்திரனையும் பிடித்து விடலாம் என்றும் எண்ணுகிறார்கள். ஆனால் கௌதமிபுத்திரன் அவர்களது இந்தத் திட்டத்தையும் முறியடித்து விடவே, காஷ்டானன் ரொம்பவும் பயந்து போகிறான். மகாக்ஷத்ரபன் இந்தத் தோல்விக்காகத் தன்னைத் தூக்கிலே தொங்க விட்டு விடுவான் என்று அஞ்சி, கௌதமிபுத்திரன் பக்கமே சேர்ந்து விடவும் சித்தமாகி விடுகிறான். ஆனால் கௌதமிபுத்திரன் அவனுக்குத் தைரியம் சொல்லி மகாக்ஷத்ரபனிடம் அவனையே தன் தூதனாக அனுப்புகிறான். ''நாளை இரவு மகாக்ஷத்ரபனை நான் மரக்கலத்தில் சந்திப்பதாகச் சொல்'' என்று கூறுகிறான். இந்தச் செய்தியுடன், வாசிஷ்டி நதியின் முகத்துவாரத்தில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் மகாக்ஷத்ரபனின் கப்பலில் அவனைச் சந்திக்க உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு போய்ச் சேருகிறான் காஷ்டானன்.



சாண்டில்யன்

சித்திரஞ்சனி



24. பூஜாரி எங்கே?

வாசிஷ்டி நதியின் முகத்துவாரத்தில் படகில்ஏறியநிமிஷத்திலிருந்துமரக்கலத்தை அடையும்வரை பலப்பல சிந்தனைகளுடன் சென்ற காஷ்டானன், மகாக்ஷத்ரபனின் அசைவு ஒவ்வொன்றையும் கௌதமிபுத்ரன் எப்படி அறிந்து கொள்கிறான் என்ற வியப்புடனேயே சென்றான். நாகபாணன் தங்களுக்காக அஞ்சன்வேல் கோட்டையில் காத்திருப்பானென்று தானும் க்ஷத்ரபரும் எண்ணியதற்கு முற்றும் மாறாக மகாக்ஷத்ரபர் மரக்கலத்திலிருப்பதாகக் கௌதமிபுத்ரன் சொன்னதன்றி, செய்தியொன்றையும்தன்னிடம்சொல்லியிருப்பதைநினைத்துக்கௌதமிபுத்ரன் கண் பார்வையிலிருந்து எதுவும் தப்புவதில்லையெனத் தனக்குள் சொல்லிக் கொண்டான். கௌதமிபுத்ரன் சொன்னது சரியாயிருக்குமானால் க்ஷத்ரபன் அஞ்சன்வேல் கோட்டைக்குச் சென்ற பின்பும் தூக்கிலிட மாட்டான் என்பது தவிர தான் நாகபாணனிடம் செல்வதால் தன் உயிருக்கு ஆபத்து நேரிடலாமென்று நினைத்து அஞ்சினா

லும். அப்படி எதுவும் நடக்காது என்று சதகர்ணி திடமாகச் சொன்னதால் சிறிது மனத்தையும் தேற்றிக் கொண்டான் காஷ்டானன். சதகர்ணி உறுதி கூறிவிட்டாலும் மகாக்ஷத்ரபனின் குணத்தை நன்ருக அறிந்திருந்த காஷ்டானன் தான் தூக்குக் கயிற்றுக்குள் தலையை விடுவதாகவே எண்ணினான். அத்தகையஎண்ணத்தால்ஏற்பட்டகிலியுடன் மரக்கலத்தை அடைந்து நூலேணியில் ஏறியதும் தனது கையைப் பிடித்து நாகபாணனே தன்னைத் தூக்கி மரக்கலத்தில் இறக்கி விட்டதைக்கண்டதும்பாதிஉயிரை அப்பொழுதே விட்டுவிட்டான் காஷ்டானன். பீதியின் விளைவாக அவன் கை வெட வெடவென நடுங்கலாயிற்று.

"உம்! கையை உதருதே. கெட்டியாகப் பிடித்துக்கொள்" என்றுநாகபாணன்மிரட்டியதும் முன்னைவிட காஷ்டானன் கை அதிகமாக நடுங்கத் தொடங்கியதால் அவன் கையைத் தனது கையிலிருந்து விடுவித்து, "வா என்னுடன்" என்று அதட்டிவிட்டு மரக்கலத்தின் நடுவிலிருந்தஅறையைநோக்கி நடந்தான் மகாக்ஷத்ரபன். காவுக்குச் செல்லும் ஆட்டைப் போல் மகாக்ஷத்ரபனைத் தொடர்ந்து காஷ்டானன் அறைக்குள் நுழைந்ததும் சுற்று முற்றும் பார்த்தான்.

அறையில் தங்கள் இருவரைத் தவிர வேறு யாருமில்லையென்பதை அறிந்ததும் சிறிது ஆசுவாசப் பெருமூச்சுவிட்டான் காஷ்டானன். அதைக் கவனித்த நாகபாணன் இகழ்ச்சி நகை உதடுகளில் விரிய, "இங்கு யாரும் இல்லை நம் இருவரைத் தவிர" என்று குரலிலும் இகழ்ச்சியைக் காட்டினான்.

"ஆம்.யாருமில்லை" என்றுஏதோசொல்ல வேண்டுமென்பதற்காகப் பேசினான் காஷ்டானன்.

"வேறு யாரையாவது எதிர்பார்த்தாயா?" மகாக்ஷத்ரபன் குரல் சாட்டையாலடிப்பது போல் ஒலித்தது.

"மகாக்ஷத்ரபருடன் மெய்க்காவலர்..." என்று உளறினான் காஷ்டானன்.

"என் மெய்க்கு இப்பொழுது என்ன அபாயம் வந்துவிட்டது? தவிர...."

"எசமான்?"

"உன்னைப் போன்ற புழுவிடமிருந்து என்னைக் காத்துக் கொள்ள மெய்க் காவலர் வேண்டுமா?"

"வேண்டாம். வேண்டாம்."

"உன்னை இப்பொழுதே என் காலில் போட்டு நசுக்கிவிட முடியாதா?"

"முடியும். முடியும்."

இந்தப் பதிலைக் கேட்டதும் சற்றே சினத்தின் வசப்பட்ட நாகபாணன் வெறுப்பு நிரம்பிய குரலில், "நான் சொல்வதை எல்லாவற்றையும் அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டிய அவசியமில்லை" என்றான்.

"இல்லை, இல்லை" என்று அதற்கும் ஒப்புக்கொண்ட காஷ்டானன், "எசமான் தங்களை எதிர்த்தோ, ஆட்சேபித்தோ பேசுவது முறையாகாது" என்று சொன்னான் பணிவு நிரம்பிய குரலில்.

"எதிரியுடன் சேருவது முறையாகுமா?" என்று கேட்டான் மகாக்ஷத்ரபன்.

"ஒருகாலும் முறையாகாது" என்ற காஷ்டானன் அதிக பணிவைக் காட்டினான்.

அடுத்து நாகபாணன் தொடுத்த கேள்வியைக் கேட்டதும், பாதிப் பிராணனே போய் விட்டது காஷ்டானனுக்கு. "அப்படியானால் எதிரிக்காக ஏன் தூது வந்தாய்?" என்று நாகபாணன் இடியெனச் சொற்களை உதிர்த்தான்.

அதைக் கேட்டுக் கால்கள் ஒன்றுக்கொன்று சிநேகம் செய்து கொண்டு படபடவென பரஸ்பரம் இடித்துக் கொள்ளவே, முட்டிகளைப் பிடித்து அவற்றைச் சமாதானம் செய்த காஷ்டானன் "பிரபு! நான் தூதனாக வந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

நாகபாணன மெதுவாகச் சிரித்தான். "வேறு எந்த தைரியத்தில் நீ இங்கு தனித்து வரமுடியும்?" என்று பதில் கேள்வி தொடுத்தான். அந்தக் கேள்வியுடன் ஒரு பெருமூச்சும் விட்டான் நாகம் சீறுவது போல.

அந்த மூச்சைக் கேட்டதுமே தனக்கு இனி விடிமோட்சம் கிடையாதெனத் தீர்மானித்த காஷ்டானன், "பிரபு! கௌதமிபுத்ரன் நான் தூது செல்லாவிட்டால் என்னைக் கொன்று விடுவதாக அச்சுறுத்தினான். அதனால் வந்தேன். இல்லாவிட்டால்..... என்று சொற்களை முடிக்காமல் விட்டான்.

"இல்லாவிட்டால்? என்ன செய்து விடுவாய்?" என்று நாகபாணன் கேட்டு, "சரி, சதகர்ணி என்ன சொன்னான்?" என்று வினாவொன்றைச் சர்வ சகஜமாகத் தொடுத்தான்.


தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்றமுடிவுக்குவந்ததால்சற்றுத்தைரியத்தை வரவழைத்துக் கொண்ட காஷ்டானன், "மகாப் பிரபு! கௌதமிபுத்ரன் தங்களை இந்த மரக்கலத்தில் நாளை இரவு சந்திப்பதாகச் சொல்லச் சொன்னார்" என்று செய்தியைச் சொன்னான் கம்பீரமான குரலில்.

திடீரென்று காஷ்டானன் குரலில் காணப்பட்ட கம்பீரத்தைக் கண்ட மகாக்ஷத்ரபன், "கௌதமிபுத்ரன் பெயரே ஒரு மனிதனுக்கு எத்தனை துணிவை அளிக்கிறது? போர்நிகழும் போது அவன் கொடுக்கும் உற்சாகம் படைகளை எப்படித் தூண்டும்?" என்று தனக்குள்ளேயே வியந்தான். அத்தகைய எதிரியைச் சமாளிப்பதில் தான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்தான். ஆகவே எதிரியின் பலாபலத்தை அறிய காஷ்டானனை நோக்கி, "காஷ்டானனே! கௌதமிபுத்ரனிடம் இப்பொழுது எத்தனை படைகள் இருக்கின்றன?" என்று வினவினான்.

"படையா?" என்று வியப்புடன் கேட்ட காஷ்டானன், "பிரபு! கௌதமிபுத்ரரிடம்

* வீதியில் சவ ஊர்வலம் சென்ருல், வாகனங்களில் செல்லும் புதுவை மக்கள், கீழே இறங்கி மரியாதை செலுத்தி விட்டுச் செல்வது இன்றும் நடக்கும் நிகழ்ச்சி.

— புதுவை அமலன்.



Blackbelt
Blackbelt
BRIEFS & BANIANS
For strong ones
who wish to remain in style and comfort.
BRIEFS
Sultan
BANIANS
BOXER
TRUNKS
FIANCEE
COMFORT BRIEFS
SAHEB
BANIANS
MARSHALL
BRIEFS
ARMS-AH-185-1
Quality Products of Aristocrat Hosiery Pvt. Ltd.
Post Box No. 3359, Bombay-400 003. Tel: 321861 • 330251

படை எது? இந்த மலைவாசிகள் கூட்டந் தானிருக்கிறது. போரில் நல்ல பயிற்சியுள்ள மகாவீரர்கள் அடங்கிய படைக்கு முன்பு இந்த வெட்டிக்கூட்டம் என்ன செய்ய முடியும்?'' என்றும் வினவினான்.

நாகபாணன் முகத்தில் சிந்தனை படர்ந்தது. ''அப்படியானால் சதகர்ணியின் படை வந்தது உனக்குத் தெரியாதா?'' என்று சந்தேகத்துடன் கேட்கவும் செய்தான்.

காஷ்டானன் முகத்தில் பெரும் பிரமை தட்டியது. ''மகாப் பிரபு! படையாவது வருவதாவது? எங்கிருந்து வரும்? நமது கண் பார்வையில் படாமல் எப்படி வரமுடியும். சதகர்ணிக்கு உதவிப் படை?'' என்று கேட்டான்.

நாகபாணன் தனது ஆசனத்திலிருந்து எழுந்து தீர்க்க சிந்தனையுடன் அறையில் குறுக்கும் நெடுக்கும் உலாவினான். திடீரென்று ஏதோ யோசித்துவிட்டுச் சட்டென்று நடையை நிறுத்தி, காஷ்டானன் அருகில் வந்து அவன் தோள் மீது கையை வைத்து. ''காஷ்டானனா! இப்பொழுது யார் தாபிலேசுவரர் கோயிலில் பூஜை செய்வது?'' என்று கேட்டான்.

''சாதவாகனர்தான்'' என்றான் காஷ்டானன்.

''பழைய பூஜாரி என்ன ஆனான்?'' என்று சாதாரணமாகக் கேட்டான் நாகபாணன்.

''தெரியவில்லை.''

''பரம்பரையாகக் கோவில் பூஜை செய்தவன் திடீரென்று மறைந்துவிட்டான்?''

''ஆம்.''

''அதைப் பற்றி விசாரித்தானா கௌதமி புத்ரன்?''

''இல்லை.''

''இது விசித்திரமாகத் தோன்றவில்லையா உனக்கு?''

''இதில் விசித்திரமென்ன இருக்கிறது?'' என்று பதில் சொன்ன காஷ்டானன் குரலில் குழப்பம் தெரிந்தது. அந்தக் குழப்பம் திடீரென விலகியதால், ''அப்படியானால் பூஜாரி?'' என்று இழுத்தான்.

''பிரதிஷ்டானாவுக்குத்தான் அனுப்பப் பட்டான்.'' நாகபாணன் குரல் உறுதியுடன் ஒலித்தது.

''ஆகையால் சதகர்ணிக்கு உதவி கிடைத்து விட்டதா?''

''தெரியவில்லை'' என்ற மகாக்ஷத்ரபன், ''பூஜாரி பிரதிஷ்டானாவை அடையவில்லை. அவன் இந்த எல்லையை விட்டு நீங்கு முன்பே அவனைச் சிறை செய்துவிட்டோம்'' என்று கூறினான்.

''அப்படியானால் உதவிப் படை வர நியாயமில்லை.''

''சொல்ல முடியாது. ஹோமப் புகையை வளர்த்திருக்கிறான் சதகர்ணி.''

''அதனாலென்ன?''

''புகை படைகளை அழைக்கும் அடையாளம். சாதாரணமாக இதைக் கடற் கொள்ளைக்காரர்கள்தான் செய்வது வழக்கம்.''

''அதை மற்றவர் செய்யக் கூடாதென் பதற்குத் தடை உண்டா?''


''தடை கிடையாது. தர்ம விரோதமாகக் கருதப்படுகிறது'' என்ற நாகபாணன், ''காஷ்டானனா! நீ ஒரு உதவி செய்ய வேண்டும்'' என்று சொன்னான்.


''உத்தரவிடுங்கள்'' என்றான் காஷ்டானன்.

''இங்கிருந்து திரும்பிப் போனதும் சதகர்ணியிடம் பூஜாரி எங்கேயென்று நான் கேட்டதாகச் சொல். அவன் உடனடியாக என்னைப் பார்க்க விரும்புவான். நானே இரவில் பார்க்கும்போது பூஜாரியை இந்த மரக்கலத்திற்குக் கொண்டுவந்துவிடுவதாகச் சொல். அவன் வரும்போது தனியாக வரச் சொல். ஏதாவது தந்திரத்தைக் கையாண்டாலோ அதிக வீரர்களுடன் வந்தாலோ, அவன் கண் முன்பாகவே பூஜாரியை இந்த மரக்கல நடுப் பாய்மரத்தில் தொங்க விடுவேனென்று சொல்'' என்ற நாகபாணன் சொற்களைக் கேட்ட காஷ்டானன் வெலவெலத்துப் போனான். இதைச் சொன்னால் சதகர்ணி தனது தோலை உரித்துவிட்டால் என்ன செய்வதென்று கலங்கினான். ஆனால் வேறு வழியின்றி மகாக்ஷத்ரபன் சொற்படி செய்வதாக உறுதி கூறினான்.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் பழையபடி படகில் இறக்கப்பட்ட காஷ்டானன் தனது பதில் தூதைத் தெரிவிக்கத் துரிதமாகத் துடுப்புகளைத் துழாவி, படகை வேகமாகச் செலுத்தினான். அவன் திரும்பிய போது வெள்ளி முளைத்துவிட்டதால் பொழுது விடியும் நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்த காஷ்டானன் வெகு வேகமாகக் கோயிலை அடைய மலைமீது ஏறிச் சென்றான். அவன் கோயிலை அடைந்த சமயத்தில் கோயிலுக்குள் பூஜை நடந்து கொண்டிருந்தது. மணியும் பலமாக அடிக்கப்பட்டது. வாயிலில் அவனை வரவேற்கக் கௌதமி புத்ரன் சித்தமாக நின்றிருந்தான். உள்ளே எட்டிப் பார்த்தான் காஷ்டானன். அவன் திகைப்பு சொல்லத்தரமல்லாததாயிருந்தது. உள்ளே தாபிலேசுவரர் முன்பு நின்று பூஜாரி பூஜை செய்து கொண்டிருந்தான்!

(தொடரும்)





பூஜையறையில் புகுந்த குதிரை!

"இதுக்கு எத்தனை அழுதீங்க?"

"மாளவி! மரியாதை இல்லாமே பேசாதே. இதைப் பூஜையிலே வைக்க வேண்டிய அளவுக்குப் புனிதமான ஒன்றாக அங்கே ஜனங்க நினைக்கிறாங்க."

"பூஜையிலா...? இதையா?" அவள் பெரிதாகச் சிரித்தாள்.

"**போ**க்ரனில் அணு வெடிப்புப் பரிசோதனை நடத்தப்பட்ட இடத்தைப் பார்க்க வந்திருக்கிறீர்கள். இங்கிருந்து ராம்தேவ் ராவுக்கும்போய்விட்டுதிரும்பலாமே" என்று கூறிவிட்டு அமர்சிங் ரகுவின் முகத்தைப் பார்த்தார்.

"எனக்கு இன்னிக்கு இரவே ஜோத்பூரிலிருந்து கிளம்பித் தில்லி போயாக வேண்டும். அடுத்த முறை வரும்போது பார்க்கிறேனே." ரகு கழன்றுகொள்ளப் பார்த்தான்.

"அதிக நேரம் பிடிக்காது. நீங்கள் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய இடம் சார் அது."

"அங்கே அப்படி என்ன இருக்கிறது?"

"என்ன சார் அப்படி கேட்டுட்டீங்க? அங்கே புகழ் பெற்ற ராம்தேவ்ராவின் சமாதி இருக்கிறது. சுமார் 550 வருஷங்களுக்கு முன் வாழ்ந்து பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிய தோமார் இராஜபுத்திரர்களின் குரு அவர். விஷ்ணுவின் அம்சம் பெற்ற புனிதத் துறவி அவர். இன்றைக்கும் அவரைத் தியானிக்கிறவர்களை விட்டுத் துன்பங்கள் விலகிப் போகும் என்பது மக்கள் நம்பிக்கை."

"சரி, உங்கள் விருப்பப்படியே செய்யலாம்."

"தாங்க்யூ சார்!" அமர்சிங் உற்சாகமாக டிரைவருக்கு ராம்தேவ்ரா போகும்படி கட்டளையிட்டார்.

அங்கே போன பின்புதான் ஷீர்டியைப் போல் அதுவும் ஓர் இடம் என்பது ரகுவுக்குத் தெரிந்தது.

சமாதியிருந்த கூடத்தை அனைவரும் வலம் வந்தார்கள்.

கூடத்தின் மேல் கூரையில் காணப்பட்ட ராம்தேவ்ராவின் வாழ்க்கை வரலாறு சம்பந்தப்பட்ட ஓவியங்களுக்கு அங்கிருந்த அதிகாரியொருவர் விளக்கம் சொன்னார். குதிரை அவரது வாகனமாக இருந்ததாம். அவரை வழிபட நினைக்கிறவர்கள் அவரது சின்னமான குதிரையைப் பூஜையில் வைத்துக் கொண்டால் போதும் என்றும் சொன்னார்கள்.

வெளியே வந்ததும் அந்தக் கடைகள் ரகுவின் கண்களில் பட்டன.

மற்ற கோயில்களுக்கு முன்னால் வரிசை கட்டி நிற்கும் தேங்காய், பழம், பூக்கடைகளைப் போல் அங்கே அட்டையிலும், துணியிலும் குதிரைகளைச் செய்து விற்கும் கடைகள். ஜிகினாவும், வண்ணத்தாள்களும் சுற்றப்பட்டு அலங்காரமாகக் காட்சி தந்த பொம்மைக் குதிரைகள்.

அமர்சிங் இறங்கிச் சென்று, "உங்களுக்காக வாங்கினேன் சார். இந்த இடத்துக்கு வந்ததற்கு ஞாபகார்த்தமாக இருக்கட்டும். பூஜையில் வைத்துக் கொள்ளுங்கள். ராம்தேவ்ராவின் அருள் உங்களுக்குப் பூரணமாக ஏற்படட்டும். இதைப் பெட்டியில் மட்டும் வைக்காதீர்கள். இது என் அன்பளிப்பு." என்றார்.

மிகவும் வற்புறுத்திக் கேட்டபின், அமர்சிங் குதிரைக்காக எட்டு ரூபாய் வாங்கிக் கொண்டார்.

அதை தில்லிக்குக் கொண்டு போனால் அவன் மனைவி மாளவிகா நிச்சயம் ஏதாவது சொல்லுவாள். அவன் மூட நம்பிக்கையுள்ளவன் என்று விமரிசிப்பாள். 'என்ன ரசனை' என்று கிண்டல் பண்ணுவாள். இந்தப் பொட்டலத்தை எப்படியாவது இங்கேயே விட்டு விட்டுப் போய்விடுவதுதான் நல்லது. ரகு தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

தான் வந்த வேலை முடிந்ததும் ஜோத்பூர் ரயில் நிலையத்தில் காரைவிட்டு இறங்கிய போது,குதிரை சுற்றப்பட்ட பொட்டலத்தைக் காருக்குள்ளேயே மறந்தவன் போல் விட்டு விட்டு இறங்கினான்.

நல்லவேளையாக அதை டிரைவரோ அமர்சிங்கோ கவனிக்கவில்லை!

முதல் வகுப்புப் பெட்டியில் ஏறி அமர்ந்து அமர்சிங்கிடம் விடை பெற்றாயிற்று.

திடீரென்று.....

டிரைவர் ஓடி வந்தான்.

"சார், இந்தப் பொட்டலம் காரில் நின்னு போச்சு."

மூச்சு வாங்க உள்ளே ஏறி அதைச் சீட்டின்

லக்ஷ்மி ரமணன்

மீது வைத்துவிட்டு இறங்கினான் அவன்.

''தாங்க்யூ. இதுக்காகவா இத்தனை வேகமாக வந்தாய்?''

ரகு பொட்டலத்தை மேல் பெர்த்தில் ஒரு பக்கமாக வைத்தான்.

மறுநாள் காலையில் தில்லியில் இறங்கிய போது ''சார் இந்த பாக்கெட்'' என்று சக பிரயாணி எடுத்துக் கொடுத்தார்.

வேறு வழியில்லை.

அதைவீட்டுக்குளெடுத்துப்போய்மாளவிகாவின் விமரிசனத்திற்கு ஆளாகத்தான் வேண்டும்.

''இதைப் போய் எதுக்கு வாங்கினீங்க, கொஞ்சம் கூட ரசனையில்லாமே.''

எடுத்தஎடுப்பிலேயேமாளவிகா அப்படிக் கேட்டது ரகுவுக்குச் சங்கடமாக இருந்தது.

''நான் என்ன செய்யட்டும்? கூட வந்த அமர்சிங் வாங்கி வந்துவிட்டார்.''

''இதுக்கு எத்தனை அழுதீங்க?''

''மாளவி! மரியாதை இல்லாமே பேசாதே. இதைப் பூஜையிலே வைக்க வேண்டிய அளவுக்குப் புனிதமான ஒன்றாக அங்கே ஜனங்க நினைக்கிறாங்க.''

''பூஜையிலா.... இதையா?'' அவள் பெரிதாகச் சிரித்தாள்.

ரகு பதில் சொல்லாமல் அந்தக் குதிரைப் பொம்மையைத் தன் தாயின் பூஜை அறைக்கு எடுத்துச் சென்று வைத்துவிட்டு வந்தான்.

அரைமணிக்கெல்லாம்....

அவன் அம்மா பிரளயமே வந்த மாதிரி இரைந்தாள்.

''சிவ... சிவா. இதென்ன என் பூஜை சாமானுக்கு நடுவில் ஒரு குதிரை திடீர்னு முளைச்சு நிக்கறது. இதைக் கொண்டு போ.''

''அம்மா இது விஷ்ணுவின் அம்சமான ராம்தேவ்ராவின் அடையாளமாம்.''

''விக்கிரகத்தைக் கடவுளாகப் பார்க்கிறவன் உண்டு. அதை வெறும் கல்லாக நினைக்கிறவனும் உண்டு. இதெல்லாம் அவரவர் மனத்தைப் பொறுத்த விஷயம் ரகு. என்றாலே இது மாதிரி குதிரை, கழுதை பொம்மையை எல்லாம் பூஜைக்குரிய, தகுதியுள்ள சாதனமாக நினைக்க முடியாது. வீணாக வம்பு பண்ணாமே எடுத்துண்டு போ'' அம்மா கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். அவளுடைய தீர்மானங்களை மாற்றுவதென்பது முடியாத விஷயம். சொன்னால் சொன்னதுதான்.

ரகு குதிரைப் பொம்மையை எடுத்து வந்து வரவேற்பறையில் வைத்தான்.

மாளவிகா உடனே அதைக் கையில் எடுத்துக் கொண்டு ஜன்னலுக்கு வெளியில் எறிந்துவிடப் போவதாகப் பயமுறுத்தினாள்.

''கஷ்டகாலம்! இதை எல்லாமா டிராயிங் ரூமில் வைப்பா? ஒவ்வொருத்தர் எத்தனை ரசனையோடு வரவேற்பறையை அலங்கரிக்கிறார்கள். இது இங்கே எதுக்கு திருஷ்டி பரிகாரம் மாதிரி?''

ரகுவுக்குக் குதிரையை அப்படி எறிந்துவிட மனசில்லை.

'ராம்தேவ்ராவின் அருள் உங்களுக்கு ஏற்படட்டும்' என்று நல்வாழ்த்துடன் அமர் சிங் அதைக் கொடுத்தாரே.

தன் அறையில் வைக்கலாமென்றால் அங்கே மருந்துக்குக் கூட ஒரு அலமாரி கிடையாது. மேஜை மீது வைக்க மேஜை புதியதாய் வாங்கினால்தான் உண்டு.



saravana investments

FIXED DEPOSIT SCHEME

Saravana Sound offer makes your Fixed Deposit Grow Safer and Stronger. A Group Holding Company - Pioneers in the Field of Textiles - for more than three Decades - total assets Exceeds Rs. 20 crores.

ONE YEAR 18%

TWO YEARS 19%

THREE YEARS 20%

SARAVANA SPECIAL DEPOSIT SCHEME

DOUBLE YOUR MONEY IN JUST FOUR YEARS.

Deposits Accepted in Multiples of Rs. 500 Subject to a Minimum of Rs. 1000/- Interest Payable Quarterly or Half Yearly. Monthly Interest on Rs. 5000/- and Above.

WE CARE FOR YOUR INTEREST

For Applications and Brochures

MADRAS

saravana investments

Jhaver Plaza, First Floor 1-A Nungambakkam High Road Madras-600 034

Phone : 478797 & 475609 Telex : 041 - 7799 Lxmi in

RAJAPALAYAM

saravana investments

ACM Guest House
Kumarasamy Raja Nagar
Rajapalayam - 626 108
Phone : 2305 & 2107
Telex : 442 - 207 ACM in

KOMARAPALAYAM

saravana investments

Annai Illam Salem Main Road
Komarapalayam - 638 183
Erode R.M.S.
Phone : 625 & 308 (Bhavani Exch)
Telex : 856 - 243 KSM in

ரிடையர் ஆனதும்...



போட்டி : 37

உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறும் நாட்களைப் பலர் ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறார்கள். வேறு பலர் அதை நினைக்கும்போதே திகில் அடைகிறார்கள். ஏன்? நீங்களோ, உங்கள் நண்பரோ, உறவினரோ, ரிடையர் ஆனதும் என்ன நடந்தது? வாழ்க்கை முன்னிலும் அர்த்தமுள்ளதாயிற்று, அல்லது வேதனையாக முடிந்ததா? எதனால்? (கருத்து : எஸ். ஹரிஹரன், சேலையூர்.) உங்கள் அனுபவம் மற்றவர்களும் தங்கள் வாழ்க்கையைத் திட்டமிட வசதியாக அமையும். அதைக் கீழே வெற்றிடத்தில் எழுதி, இந்த அரைப்பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்பவும். பிரசுரமானால் பரிசு. குலுக்கல் முறையில் ஒருவருக்கு வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின் மேல் "ரிடையர் ஆனதும்" என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி : 27.1.86.

இன்னும் 16 வி. ஐ. பி. ஸூட்கேஸ்களே பாக்கி! வாய்ப்பைத் தவற விடாதீர்கள்! வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

என் பெயர் : ....

விலாசம் : ....

....

தன் பிள்ளை ராஜாவின் அறையில் வைத்தால் என்ன?

அன்று மாலையில் பார்த்தபோது குதிரைப் பொம்மை குப்பைத் தொட்டிக்கு அருகில் இருந்தது.

ரகு பதறிப் போய் அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"என்ன ராஜா இது? இங்கே எறிஞ்சிருக்கே?"

"என்னப்பா நீங்க? நான் இன்னும் சின்னப் பையனா? இந்த மாதிரிப் பொம்மை எல்லாம் இங்கே எதுக்கு வெக்கறீங்க? என் காலேஜ் சிநேகிதங்க கேலி பண்ணுவாங்க!"

குதிரைப் பொம்மை பற்றி ஒரு பிரச்னை!

இரண்டு நாட்கள் கழித்து ரகுவின் நண்பன் சரபன் தன் பெண் ராணியுடன் அவர்கள் வீட்டுக்கு வந்தான்.

ராணி சுறுசுறுப்பான பெண்.

பொழுது போகாமல் வீட்டைச் சுற்றி வளைய வந்தாள்.

ஜன்னலின் மீது கேட்பாரில்லாமல் 'அம்போ' என்று கிடந்த பொம்மைக் குதிரை அவள் கவனத்தை ஈர்த்தது.

"இதை நேக்குத் தாங்க அங்கிள்."

அதை உடனடியாக எடுத்துக் கொடுக்க ரகுவுக்கு மனம் வரவில்லை.

தயங்கினான்.

மாளவிகா முந்திக் கொண்டாள்.

"பாவம் குழந்தை கேட்கிறாள். கொடுக்கிறதுதானே" என்றவள் அவன் பதிலுக்குக் காத்திராமல் அவசரமாக அதை எடுத்துக் கொடுத்தாள் ராணியிடம்.

வீட்டில் எத்தனை வேண்டாத சாமான்கள் இருக்கின்றன. இந்த ஒரு குதிரை பொம்மை அதிகமாகிவிடுமா? அதைத் தொலைத்துவிட்டுத்தான் மறுவேலை என்பது போலல்லவா அவள் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறாள்.

மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் அதிகாரி அவன்.

தன் வீட்டில் தான் விரும்பிய இடத்தில் ஒரு பொருளை வைக்கக் கூடவா அவனுக்கு உரிமையில்லை?

அப்படி என்ன அவர்கள் நாகரீகத்திலேயே ஊறிப் பிறந்தவர்களா?

தன் உணர்ச்சிகளை வெளியே காட்டிக் கொள்ள முடியாதவனாய் ரகு பேசாமலிருந்துவிட்டான்.

ஒரு மாதம் கழிந்திருக்கும்.

ரகு தான் போகிறன் போய் வந்ததையே மறந்துவிட்டான் என்று சொல்ல வேண்டும். ஒரு நாள் மாலையில் சரபன் போன் செய்தான். "டேய் பழி! என் பாஸ் எரிக் பீட்டர்சன் போனவாரம் தற்செயலாக வீட்டுக்கு வந்தார். நீ ராணிக்கு விளையாடக் குடுத்தியே அந்தக் குதிரை அவருக்கு ரொம்பப் பிடிச்சுடுத்து. ரொம்ப அழகான ஆர்ட் பீஸ்னு அட்மைர் பண்ணினார். அது மாதிரி ஒரு டஜன் பீஸ் அமெரிக்காவுக்கு அனுப்ப வேணுமாம். வாங்கித் தர முடியுமா? ரகு.... ஹலோ..... ஹலோ......!"

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

விஐபி

கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்லேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

LINTAS VIP M 10 2013 TM

"பாண்டிச்சேரி முக்ய மந்த்ரி எவரு?''
''என். டி. ராமராவ்காரு!''
''அவர் ஆந்திராவின் முதலமைச்சர். உங்கள் மாநிலமான பாண்டிச்சேரியின் முதலமைச்சர் யார் என்றுதான் கேட்டேன்.''
''ராதண்டி!''
''சரி, போகட்டும்! கருணாநிதியைத் தெரியுமா?''
''......''
''எம். ஜி. ஆர்....?''
''மதராஸ் முக்ய மந்த்ரி!''

இப்படியும் ஒரு தொகுதி...

''எம். ஜி. ஆரை மட்டும் எப்படித் தெரியும்?''
''சினிமாவில் பார்த்திருக்கிறேனே!''
"தமிழ்ப் படமெல்லாம் நீங்கள் பார்க்கிறீர்களா என்ன?''
''எப்போதாவது ஏனத்தில் போட்டுக் காட்டுவார்கள். அதில் பார்த்திருக்கிறேன்."
''அப்படியானால் ஏனம் தொகுதியில் போட்டியிடும் எம். ஜி. ஆர். கட்சி வேட்பாளருக்குத்தான் நீங்கள் வோட்டுப் போடுவீர்களா?''
''இல்லே. கைச்சின்னத்திற்குத்தான் போட்டேன்; போடுவேன்!''
''எதற்காகக் கைச்சின்னத்திற்குப் போட்டீர்கள் அம்மா?''
''இந்திராஜியின் சின்னம் அதுதான். எனக்கு இந்திராஜியைப் பிடிக்கும். அவர் மகன் ராஜீவ்ஜியைப் பிடிக்கும். அதற்காகத்தான் போட்டேன்.''
''அவர்களை உங்களுக்கு ஏன் பிடித்திருக்கிறது?''
''பிடிக்கும் என்றால் பிடிக்கும். அவ்வளவுதான்!''
— பாண்டிச்சேரி மாநிலத்தின் ஒரு பகுதியான 'ஏனம்' தொகுதியில் — வயலில் வேலை செய்து கொண்டிருந்த எரக்கம்மா என்ற பெண்மணியைச் சந்தித்துக் கேட்ட போது கிடைத்தபதில்கள்தான் இவை. எழுத்தறிவில்லாத எரக்கம்மாவுக்குத்தான் தங்கள் மாநிலத்தின் முதலமைச்சர் யாரென்று தெரியாது என்பதில்லை. அந்தப் பகுதியிலுள்ள பள்ளி மாணவ — மாணவிகளுக்கும் கூடத் தெரியவில்லை என்பதுதான் உண்மை.
அது சரி; இந்த ஏனம் தொகுதி எங்கே



* எரக்கம்ம



கோதாவரிக் கரை.



* ஏனம் எம்.எல்.ஏ. காமிச்செட்டி.

...பாண்டிச்சேரியின் இன்னொரு பக்கம்

இருக்கிறது? ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்குக் கோடியில் — கோதாவரி நதியின் முகத்துவாரத்தின் மேல்பக்கமாக நமது தேசப் படத்தில் ஒரு முற்றுப்புள்ளி வைத்தால் அதுதான் ஏனம். யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தது இது. இதன் மொத்தப் பரப்பளவு வெறும் முப்பது சதுர கிலோ மீட்டர்கள்தான். மக்கள் தொகை ஏறத்தாழப் பன்னிரண்டாயிரம்தான்.

இதற்கு 'ஏனம்' என்ற விசித்திரமான பெயர் எப்படி வந்தது? அந்தக் காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் தங்குவதற்காக இச்சிறு பகுதியை ஹைதராபாத் நிஜாம் இனமாகக் கொடுத்ததால் முதலில் 'இனம்' என்று அழைக்கப்பட்டு, பிறகு அதுவே நாளடைவில் 'ஏனம்' என்று உருமாறிவிட்டது.

இந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்றால் காக்கி நாடா வரை ரயிலில் சென்று, பிறகு காக்கி நாடாவிலிருந்து இருபத்தைந்து கி. மீ. பஸ்ஸில் போக வேண்டும் என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். ஆனால் காக்கிநாடா பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு ஏனம் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் போதுதான் அதன் கொடுமை தெரியும். எப்போது ஏனம் பஸ் வரும், போகும் என்று சாட்சாத் அந்தப்பரமேஸ்வரனாலேயே கண்டு பிடித்துச் சொல்ல முடியாது. இந்த நிலையிலும் விடாப்பிடியாகச் சுமார் நான்கைந்து மணி நேரம் காத்திருந்து பஸ் பிடித்துப் பிரயாணம் செய்தால், ஏனம் போய் இறங்கியவுடனேயே உடம்பிலுள்ள மூட்டுக்களெல்லாம் தனித்தனியாகக் கழன்று போய்விட்டது போல் தோன்றும். அந்த அளவுக்குச் சாலை வசதி! ஒருமுறை இருதய நோயாளியான தனது உறவினர் ஒருவர் இந்தச் சாலையில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோதே மாண்டுபோய்விட்டதாக, இந்தச் சாலைகளின் அவலத்தைப் பற்றி ரத்தினச் சுருக்கமாகச் சொன்னார் ஏனம் பகுதி இ. காங்கிரஸ் பிரமுகர் ஒருவர்.

ஏன் இந்தச் சாலைகளை இன்னமும் புதுப்பிக்காமலும் பராமரிக்காமலும் வைத்திருக்கிறார்கள்? ஏனம் யூனியன் பிரதேசமாகையால் மது வகைகள் கொள்ளை மலிவு. ஆகையால் அவற்றை வெளி மாநிலங்களுக்குக் கடத்திச் செல்பவர்கள்தான் அடிக்கடி ஏனத்திற்கு வந்து போகிறார்களாம். உள்ளூர்க்காரர்களும் இதுபோன்ற மதுக் கடத்தலில் ஈடுபட்டுள்ளதால் பெரும்பாலும் சாலைகளைப் பயன்படுத்துவதில்லை; குறுக்கு வழியாகக் கடத்துகிறார்கள். இந்நிலையில் சாலை வசதி பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள்? இப்போது ஏனத்தில் பல கோடி ரூபாய்களில் — இத்தாலி அரசின் கூட்டுறவோடு கட்டப்பட்டுவரும் ஸெராமிக்டைல்ஸ் தொழிற்சாலையும், மற்றும் பல ஆயில் மில்களும் தொழிற்சாலைகளும் உற்பத்தியில் இறங்கும் போதுதான் சாலை வசதி சீரடைய வாய்ப்புண்டு என்று அங்குள்ள அரசியல்வாதிகளே சொல்கிறார்கள்.

"ஆக, ஓர் இடம் தொழில் மயமாகும் போதுதான் அங்குள்ள சாலைகளும், போக்குவரத்தும் சீர்ப்படுமா? ஏனத்தில் விளையும் தேங்காய்களையும், நெல்லையும் கொண்டு செல்வதற்குச் சாலை வசதிகள் வேண்டாமா? அங்குள்ள சாதாரண மக்களும், விவசாயிகளும் செல்வதற்குப் போக்குவரத்து வசதி வேண்டாமா?" என்று அவர்களிடம் கேட்ட



* சண்முகம் எம். பி.

போது, ''பாண்டிச்சேரியிலுள்ள அமைச்சர்களும், முதலமைச்சரும் கூட ஏனம் பகுதிக்கு வருவதை இந்த ஊர் எம். எல். ஏ. வும் இப்போதைய பாண்டிச்சேரி சட்டசபையின் சபாநாயகருமான காமிச்செட்டி விரும்புவதில்லை. அவர்களெல்லாம் இங்கே அடிக்கடி வந்து போனால் தமது செல்வாக்குக் குறைந்து விடும் என்று பயப்படுகிறார்'' என்றார்கள். மூர்ச்சையாகாதவர்களுக்கு அவருடைய முழுப் பெயர்! காமிச் செட்டி ஸ்ரீ பரசுராம வரப்பிரசாதராவ் நாயுடு!

ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ. காமிச்செட்டிதான். இப்போது அவர் இ. காங்கிரஸில்தான் இருக்கிறார் என்றாலும், அவர் போகாத அல்லது ஆதரிக்காத கட்சியே பாண்டிச்சேரி மாநிலத்தில் கிடையாது என்று கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்யலாம். அந்த அளவுக்குக் கட்சி மாறியவர் அவர் என்பதை அரசியல் விழிப்புள்ள அனைவரும் அறிவார்கள்.

அவரை நான் ஏனத்தில் சந்தித்த போது, என்னை அவர் பேசவே விடவில்லை. தனது வீட்டிற்குள் கூட்டிச் சென்று, ''இதோ பாருங்கள், இதுதான் என் வீடு... அங்கங்கே சுண்ணாம்புக் காரைகள் உதிர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தீர்களா? இவற்றைச் சரி செய்வதற்குக் கூட என்னிடம் வசதியில்லை. வாழ்நாள் முழுவதும் மக்கள் சேவை ஒன்றையே பிரதானமாகக் கொண்டுவிட்டேன். 'இனிமேலும் என்னால் முடியுமா? அதனால் இனியாவது வேறொருவரைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்' என்று மக்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

''உண்மையில் இந்த வீடு மட்டும்தான் உங்களுக்குச் சொந்தமா? வேறு எதுவுமே கிடையாதா?'' என்று பலமுறை அவரை வற்புறுத்திக் கேட்ட பிறகுதான் ஆந்திரப் பிரதேசத்தில் கொஞ்சம் நிலபுலன்கள் இருப்பதாகச் சொன்னார்.

''உங்களுக்கு மட்டும்தான் இங்கே ஏராளமான மக்கள் செல்வாக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால்தான் உங்களை எதிர்த்துப் போட்டியிடும் யாரும் வெற்றி பெறுவதில்லை. உங்கள் செல்வாக்கை நானும் நேரில் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அதனால் ஏதாவதொரு சிறு கிராமத்திற்குச் செல்வோமா? வருகிறீர்களா?'' என்று கேட்டபோது, சிறிது யோசனைக்குப்பிறகுஒப்புக்கொண்டுபுறப்பட்டார்.

கனகால்பேட்டா என்ற கிராமத்திற்குச் சென்றோம்., ''இதுதான் என்னுடைய ஐடியல் வில்லேஜ்!'' என்றார் காமிச்செட்டி.

அங்குள்ள குடிநீர்க் குளத்தில் மோட்டார் டேங்க் வசதிகள் இருந்தபோதும், மக்கள் குடங்களைத் தூக்கிக் கொண்டு சென்று குளத்தில் நீர் கொண்டு வந்தார்கள். காரணம் கேட்ட போது, ''பல நாட்களாகவே மோட்டார் ரிப்பேர். சரி செய்ய மாட்டேன் என்கிறார்கள். அதனால்தான் குளத்திற்கே வந்து தண்ணீர் எடுத்துப் போகிறோம்,'' என்றார்கள். காமிச்செட்டியைப் பார்த்த போது, ''நேற்றுத்தான் ரிப்பேர் ஆனது. நாளை சரியாகிவிடும்!'' என்றார்.

கிராமத்து வீதிகளில் சென்ற போது, ஆண்கள் உள்பட யாரும் காமிச்செட்டியைக் கண்டு பேச முன்வரவில்லை. அந்தத் தொகுதி மக்களின் 'பிரதிநிதி' என்ற உணர்வோடு மக்கள் அவரை உரிமையோடு கலகலப்பாக அணுகாமல், ஏதோ சபாநாயகர் என்ற மரியாதையோடும், உயர் ஜாதிக்காரர் என்ற (காப்பு என்ற ஜாதிதான் அங்கு உயர்ந்த ஜாதி) தயக்கத்தோடும் அவரைத் தவிர்க்க முயல்வது போல் எனக்குத் தோன்றியது.

கடைசியாக அவரிடம், ''உங்கள் தொகுதியில் சாலை வசதிகள் இல்லை. பஸ்களைப் பார்ப்பதே அரிதாக இருக்கிறது. தடுக்கி விழுந்தால் பதுக் கடைகளின்மேல்தான் விழ வேண்டியிருக்கிறதே தவிர, ஒரு டீக்கடையைக் கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருக்கிறது. தங்குவதற்கும் ஹோட்டல் வசதிகள் இல்லை. எப்போதாவது இருக்கிற ஒரு ஹோட்டலிலுள்ள ஆறு ரூம்களையும் யாராவது வந்து ஆக்கிரமித்துக் கொண்டால் மற்றவர்கள் எந்த வீட்டுத் திண்ணையிலாவது படுத்துத் தூங்கி விட்டுத்தான் செல்ல வேண்டும் என்கிறார்கள். ஆண்டாண்டுக் காலமாக எம். எல். ஏ.வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நீங்கள் உங்கள் தொகுதிக்காக என்ன செய்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''இரண்டு பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. ஒரு கல்லூரி இருக்கிறது. இப்போது சுமார் இருபதுக்கும்மேற்பட்ட தொழிற்சாலைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் சாதனைகள் இல்லையா?'' என்றார் காமிச்செட்டி.

* எந்தக் கடையானாலும் இப்படித்தான்...




ஆனால் தொழிலகங்களை அமைப்பவர்கள் ஏனம் தொகுதியையோ, பாண்டிச்சேரி மாநிலத்தையோ சேர்ந்தவர்கள் இல்லை... அவை வரும் வெளி மாநிலத்தவர்கள். இத்தாலிய அரசின் கூட்டுறவோடு உருவாகிக் கொண்டிருக்கும் ஸராமிக் டைல்ஸ் தொழிற்சாலையும் ஆந்திராக்காரர்களுக்குச் சொந்தமானது. அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ஸராமிக் டைல்ஸை நூறு சதவீதமும் ஏற்றுமதிதான் செய்யப் போகிறார்களாம்.

காமிச் செட்டியிடம் விடைபெற்றுக் கொண்டு நாங்கள் ஏனத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். சுற்றிப் பார்ப்பதற்கு சைக்கிள் ரிக்ஷாக்களைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஒரே ஒரு ஆட்டோ இருப்பதாகச் சொன்னாலும் அது எங்கள் கண்களில் படவில்லை. ரிக்ஷாவில் சென்று சென்று அலுத்துவிட்டதால் கால்நடையாகவே புறப்பட்டோம்.

ஏனத்தின் பிரதானத் தெருவான பிள்ளையார் கோயில் தெருவில் கூட மாட்டு வண்டிகளையும் சைக்கிள் ரிக்ஷாக்களையும் நடந்து செல்லும் மக்களையும் தவிர வேறு போக்குவரத்தே இல்லாததால் விபத்து என்ற பேச்சுக்கே இடமின்றி நடக்கலாம். ஆசையாக இருந்தால் உருண்டு கூடச் செல்லலாம்; பயமே இல்லை!

வீதிகளைச் சுற்றிச் சுற்றி நடந்த போதும் பார்ப்பதற்கு ஒன்றுமே இல்லை. காய்கறி மார்க்கெட்டுக்குள் சென்றால் காய்கறிகளை விட மீன்கள்தான் அதிகமாக இருக்கின்றன. வேறு விசேஷங்கள் எதுவும் இல்லை. மக்களுடைய மொழி தெலுங்கு. கலாசாரத்தைப் பொறுத்தவரை தமிழக—ஆந்திர கலாசாரமேதான்; துளியும் வித்தியாசம் இல்லை. வறுமையும் அறியாமையும் பிரச்னைகளும் கூடப் பொதுவேதான்! பிரெஞ்சுக் கலாச்சாரம் என்று குறிப்பிடும்படி ஒன்றும் தென்படவில்லை. பிராந்திக்கடை வாசல்களிலுள்ள ஷோ கேஸ்களில் காணப்படும் வண்ண வண்ண மதுவகைகளைத் தவிர, பார்ப்பதற்கு வேறு எதுவுமே இல்லையா என்று பிடிவாதம் பிடிப்பவர்கள், அங்குள்ள பெண்கள் தண்ணீர்க் குடங்களை இடுப்பில் சுமந்து செல்லாமல் அனாயாசமாகத் தோள்களில் தூக்கி வைத்துக் கொண்டு செல்வதையும், ஆண்கள் தாங்கள் சுமந்து செல்லும் சுமைகளைக் 'காவடி'களில் தூக்கிச் செல்வதையும் தான் பார்க்க வேண்டும்.

* பஸ்ஸே வராத பஸ் ஸ்டாண்டு.



பொழுது போக்குக்காக ஒரேயொரு சினிமா தியேட்டர் மட்டும்தான் இருக்கிறது. சினிமா பார்க்காத நாட்களில் அடர்த்தியான தென்னந்தோப்புகளுக்குள் சென்று தேங்காய்களை வேடிக்கை பார்க்கலாம். அது பிடிக்காதவர்கள் ஊர் ஓரத்திலுள்ள கோதாவரி நதிக்கரைக்குச் சென்று படகில் ஏறிப் பயணம்செய்துமகிழலாம். ஆனால் அங்குள்ள கோதாவரித் தண்ணீரைக் குடிக்க முடியாது. கடலில் கலக்கும் முகத்துவாரமாக இருப்பதால் கடல்நீர் நதிக்குள் புகுந்து உப்புக் கரிக்கிறது. அதனாலேயே ஏனம் நகரத்தின் (உண்மையில் நகரமே அல்ல!) குடி நீருக்காக ராஜமுந்திரியிலிருந்து கோதாவரியை கால்வாயில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் எப்போதும் வராது. குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே குழாய்களில் தண்ணீர் விடுகிறார்கள்.

* ஏனத்தின் முக்கிய வீதியே இதுதான்.



தென்னந்தோப்புகளும், கோதாவரியும் போதாதவர்கள் கட்டிலில்படுத்துக்கொண்டு கூட்டம் கூட்டமாகப் பறக்கும் கொசுக்களின் ரீங்காரத்தைக் கேட்டு ரசிக்கலாம்! ஆம்; கூட்டம் கூட்டமாகப் பறந்தாலும், அந்தக் கொசுக்கள் சென்னை — சைதாப்பேட்டை கொசுக்கள் மாதிரி கொடூரமானவை அல்ல; ரொம்பவும் சாதுக்கள்; கடிக்கவே செய்வதில்லை! கூட்டமாக வரும் யானைகள் தனி மனிதர்களைக் கண்டால் ஓர் அலட்சிய பாவத்தோடு கண்டு கொள்ளாமல் சென்று விடுமே, அப்படிப்பட்டதொரு அலட்சிய பாவம் அந்தக் கொசுக்களுக்கு!

அங்குள்ள கொசுக்கள்தான் சாதுக்களே தவிர, அரசியல்வாதிகள் அல்ல! ஏனம் என்பது ஓர் அமைதியான நகரம் போல் தோன்றினாலும் அங்குள்ள அரசியல்வாதிகள் அமைதியானவர்கள் இல்லை; எப்போதும் கோஷ்டிப் பூசலில் சுறுசுறுப்பாக இருப்பவர்கள் என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன.

நாங்கள் சென்னைக்குப் புறப்பட இருந்த அன்று மாலை ஏனத்தில் இ. காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் கலந்து கொள்வதற்காகப் பாண்டிச்சேரி மாநில இ. காங்கிரஸ் கட்சித் தலைவரும், பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள ஒரேயொரு லோக் சபா தொகுதி எம். பி. யுமான சண்முகம் ஏனம் வந்திருந்தார்.

சண்முகத்தின் ஏனம் வருகையை ஒட்டி, 'காமிச்செட்டி வாழ்க! சண்முகமே திரும்பிப் போ!' என்று கையால் எழுதப்பட்ட சில போஸ்டர்கள் அங்கங்கே காணப்பட்டன. 'அட! இந்தச் சிறிய இடத்திலுமா இ. காங்கிரஸில் கோஷ்டிப்பூசல்!' என்றவியப்போடு சண்முகத்தைச் சந்தித்துக் கேட்டபோது, ''நான் ஊழலை எதிர்க்கிறேன். ஊழல் செய்பவர்கள் என் கட்சிக்குள்ளேயே இருந்தாலும் அவர்களை எதிர்க்கிறேன். பாண்டிச்சேரியிலுள்ள அமைச்சர்கள் கூட ஏ. சி. காரில் செல்வதை ஆட்சேபித்து எளிமையை வற்புறுத்தி வருகிறேன். அதனாலேயே சிலர் நான் கூட்டும் கட்சிக் கூட்டங்களுக்கு வரப் பயப்படுகிறார்கள். இந்த ஏனம், பாண்டியிலிருந்து வெகுதூரத்தில் இருப்பதால் இங்குள்ளவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதே வெளியில் தெரிவதில்லை. அவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது நான் அடிக்கடி இங்கு வந்து போய்க் கொண்டிருக்கிறேன். அதன் எதிரொலிதான் இந்த போஸ்டர்கள். இதற்காகவெல்லாம் நான் ஒரு போதும் பயப்படப் போவதில்லை!'' என்றார்.

''பாண்டிச்சேரியில் முதலமைச்சரை விட கவர்னர்தான் அதிகமாகச் செயல்படுகிறார் என்று சிலர் சொல்கிறார்களே, உண்மையா? கட்சியின் மாநிலத் தலைவர் என்ற முறையில் அதை ஆதரிக்கிறீர்களா?'' என்று கேட்டதற்கு, ''கவர்னர் இவாரி சுத்தமானவர். அதனால்தான் சில விஷயங்களில் தலையிட வேண்டியிருக்கிறது. அதில் என்ன தவறு?'' என்று சண்முகம் சுருக்கமாகத் தமது பேட்டியை முடித்துக் கொண்டாலும் ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

பாண்டிச்சேரியில் இதுவரை எந்த அமைச்சரவையும் முழுமையாக ஐந்தாண்டுகள் நீடித்ததில்லை. ஏதாவதொரு காரணத்தால் கவிழ்ந்து கொண்டேதான் வந்திருக்கிறது. அதேபோல் இப்போது பாரூக் மரைக்காயர் தலைமையிலுள்ள அமைச்சரவையும் கூடிய சீக்கிரம் ஏதாவதொரு காரணத்தால் கவிழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

— இளங்கோவன்.

புகைப்படங்கள்: மனோ.

BLIND DATE

முதலில் கதை:

ஜொனாதன் ராட்க்ளிஃப், ரச்சேல் என்னும் பெண்ணின்பால் ஈடுபாடு கொள்கிறான். அவளை அடிக்கடி பின்தொடர்கிறான். ஒரு விபத்தில் பார்வையை இழக்கிறான். டாக்டர் ஸ்மகர் ஒரு விநோதமான கருவியை அவனுக்குப் பொருத்துகிறார். எதிரே இருக்கும் பொருள்களின் வடிவ அமைப்பு மட்டும் நேரடியாய் அவன் மூளைக்குள் பார்வை நரம்பு வழியே தெரிய, ஜொனாதன் உலகில் மறுபடி நடமாடுகிறான்.

அதே ஊரில் இளம்பெண்களை ஒரு தீர்மானத்துடன் கொன்று வரும் சைக்கோபாத் ஒருவன் இருக்கிறான். ஒரு கொலை நடந்த இடத்தில் எதேச்சையாகப் பார்வையில்லாத ஜொனாதன் அவன் முன் எதிர்ப்படுகிறான். கொலையாளியின் வடிவம், அவன் ஓட்டும் காரின் விநோத இரைச்சல் மட்டும் ஜொனாதனுக்குப் புலப்படுகிறது.



ஜொனாதனின் பிரியத்துக்குரிய ரச்சேலைக்கொலைகாரன் தேர்ந்தெடுக்க, அவளை க்ளைமாக்ஸில் அவன் காப்பாற்ற முயற்சிகள் எடுத்துக் கொள்ள...

ஒரு விஷயம்; முன்னாலேயே கதை தெரியாவிட்டால் படம் புரிவது கஷ்டம்.

வசனம்:

கதை புரிவதே கஷ்டம், வசனத்திற்கெங்கே போவது?

காமிரா:

கேட்கவா வேண்டும்? தூள். அதுவும் 'கம்ப்யூவிஷன்' எனும் பார்வை மெஷின் வழியே பார்க்கும் காட்சிகள் பிரமாதம். இரவில் ஜொனாதன் காரை ஓட்டிப் போகும் ஸீன் பரவசமான ஒன்று.

இசை:

பயங்கரப் படத்திற்குத் தேவையான இரைச்சல் இசை. அங்கங்கே நிசப்தமும் கைகொடுக்கிறது.

நடிப்பு:

இயல்பானபர்ஃபாமென்ஸ்.

பார்க்கலாமா?

ஓ யெஸ்.

—ஜெயமன்மதன்.

முன் கதை

சுவாமிநாதன் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர். அவர் மனைவி விமலா திடீரென்று நோய்வாய்ப்பட்டு நர்ஸிங் ஹோமில் சேர்க்கப்படுகிறாள். சுவாமிநாதனின் சேமிப்பு சீக்கிரமே கரைந்து போக விமலாவின் நகைகளைக் கூட விற்க வேண்டிய நிலை உருவாகிறது. இப்படிப்பட்ட நெருக்கடி சந்தர்ப்பத்தில், தான் பெற்ற மகனைப் போல் வளர்த்து ஆளாக்கி, கல்யாணமும் செய்து கொடுத்த தன் தம்பி கணேசன் இன்று வசதியான நிலையில் ஓகோ என்று வாழ்பவன் — எட்டிக் கூடப் பார்க்கவில்லையே என்ற ஆதங்கம் சுவாமிநாதனுக்கு. கணேசனும் அவர் மனைவி அருணாவும் உதவாவிட்டால் போகட்டும், அருகில் வரவே பயந்து ஒதுங்குவதைக் கண்டு மனம் நொந்து போகிறார். வீட்டுக்கார அம்மாள் பார்வதிதான் சற்று அனுசரணையாக இருந்து ஓரளவு ஆறுதல் அளிக்கிறாள்.

நர்ஸிங் ஹோமில் இரு இளம் டாக்டர்கள் சுவாமிநாதனுக்கு அறிமுகமாகிறார்கள். மோகன் ஒரே கடுகடுப்பான பேர்வழி. செல்வம் இதற்கு நேர்மாறாக, பண்பின் உறைவிடமாக, நோயாளிகளிடம் பரிவுடன் நடந்து கொள்கிறான்.

நகைகளை விற்பது என்று சுவாமிநாதன் தீர்மானித்த போது கேசவனை அவர் சந்திக்கிறார். அவன் வெகு காலம் முன்பு அவர் வீட்டுக்கு எதிர்வீட்டில் வசித்து அவரது உதவிகளை ஆபத்துச் சமயத்தில் பெற்றவன். கேசவன் அவருக்கு உதவ முன்வந்து கடன் தருகிறான். நகையை விற்க அவசியமில்லை என்கிறான். ஆனால் அவன் கள்ளக் கடத்தல் போன்ற தப்புக் காரியங்களில் ஈடுபட்டிருப்பவன் என அறிந்ததும் பணத்தை உடனே திருப்பிக் கொடுத்து விடுகிறார் சுவாமிநாதன்.

தம்பி கணேசனின் மகன் அஸ்வத்தும் மகள் ஜல்



வர்யாவும் சுவாமிநாதன் தம்பதியாலேயே ஆசையோடு வளர்க்கப்பட்டவர்கள். ஐஸ்வர்யாவின் காதலுக்குப் பெற்றோர் தடை விதித்தபோது சுவாமிநாதன் தான் இடையில்புகுந்து அவள் மனம்போல்மாங்கல்யம் கிட்ட வழிவகுத்தார். அவள் இப்போது அமெரிக்காவில் இருக்கிறாள். அஸ்வத், பெங்களூரில் வேலையில் இருப்பவன், பெரியம்மாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பது அறிந்து சென்னை வருகிறான். அவர்களைப் பார்த்துப் பண உதவி செய்யவும் தயாராயிருப்பதைத் தெரிவிக்கிறான். "இப்போ வேண்டாம், இந்தத் தடவை எப்படியோ சமாளித்துவிட்டேன்" என்று கூறும் சுவாமிநாதனிடம் தன் மனம் மஞ்சுளா என்ற சக ஊழியையிடம் சிறைப்பட்டிருப்பதைத் தெரிவிக்கிறான் அஸ்வத். ஐஸ்வர்யாவுக்காக வாதாடியது போல் தன் சார்பிலும் பெற்றோரிடம் பேச வேண்டும் என்று வேண்டுகிறான்.

பின்னர் அஸ்வத் வீடு திரும்பும்போது அவன் அம்மா அருணா கவலையோடு அவனுக்காகக் காத்திருக்கிறாள். ஐஸ்வர்யா லண்டனுக்கு வந்திருப்பதாகக் கடிதம் கிடைத்திருக்கிறது. 'அவளும் பெரியம்மாவைப் பார்க்கத் திடுதிப்பென்று புறப்பட்டு வருகிறாளோ?' — எரிச்சலுடன் அருணா தவிக்கிறாள்.

10

அருணாவிற்கு எரிச்சல் அதிகமாகவே வந்துவிட்டிருந்தது. வழக்கம் போல் குளித்து, நின்று நிறுத்தி நிதானமாக உடை உடுத்திக் கொள்ள முடியாத அவசரக் கோலம். கண்ணாடி முன் ஒரு விநாடி எட்டிப் பார்த்தவளுக்குத் தலையைப் பிய்த்துக் கொள்ளாத குறை.

அஸ்வத் பெங்களூரிலிருந்து புறப்பட்டு வந்தவன் அவளிடம் இரண்டு வார்த்தைகள் கூடப் பேச முடியாதவனாய், வெளியே ஓடிக் கொண்டிருந்தான்.

மறுநாள் அவளே ஆதங்கத்துடன் கேட்டு வைத்தாள்." அஸ்வத்! நிற்கக்கூட நேரமில்லாமல் அப்படி என்ன ஒரே ஓட்டமா ஓடிக் கொண்டிருக்கே, ரெண்டு நிமிஷம், சோபாவில உட்கார்ந்து கொண்டு, அப்பா கூடவோ, இல்லே அம்மாகிட்டேயோ பேசக் கூடாதா?"

அஸ்வத் தாயைப் பார்த்துச் சிரித்தான். "அம்மா! நிச்சயமாக உங்கிட்ட பேசத்தான் வரப் போறேன். அதற்கு முன் கொஞ்சம் அவசர வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கு," மகனிடம் மேற்கொண்டு அவளால் எதுவும் கேட்க முடியவில்லை. மனத்தினுள் குறை மட்டும் அவளுக்குப் பாரமாக அழுத்தியது. ஐஸ்வர்யாவின் வருகை அவளுக்கு இம்முறை ஏனோ மகிழ்ச்சியைத் தரவில்லை. மாறாக மனத்தினுள் ஒரு நெருடலை ஏற்படுத்தியது.

மகள் அமெரிக்காவிலிருந்து வருகிறாள் என்றதும் அவள் எத்தனை உற்சாகம் காட்டி இருக்க வேண்டும்? சென்ற முறை ஐஸ்வர்யா வருகிறாள் என்றதும், தன் தோழிகளிடம் மற்றும் தெரிந்தவர்களிடம் எல்லாம், "எங்க ஐஸ்வர்யா வரா. வந்து ஒரு மாசம்கூட இருக்க முடியுமோ என்னவோ" என்று டமாரமடித்துவிட்டிருந்தாள்.

விமான நிலையத்திற்கு, அருணாவே போய் மகளை எதிர்கொண்டழைத்து வந்தாள். அவர்களது படுக்கையறை கட்டிலின் மீது ஐஸ்வர்யா, தனது பெட்டியைத் திறந்து பரப்பிய



சொர்க்கத்தின் கதவுகள்

சாமான்களைக் கண்டு வியப்பினால் விழிகள் விரிய நின்றது இன்றும் அவள் நினைவில் நிற்கிறது.

"அம்மாவுக்கு ஸெண்ட், சைனா ஸில்க் புடவைகள், அப்பாவுக்கு ஷர்ட், அஸ்வத்துக்கு ஒரு கால்குலேட்டர்" என்று பெருமையுடன் எடுத்த வைத்த ஐஸ்வர்யா இப்போது எப்படி வந்திருக்கிறாள்? மனம் சீர் தூக்கிப் பார்த்தது.

"எங்க ஐஸ்வர்யா வாங்கிக் கொண்டு வந்த புடவை!" என்று எத்தனை கர்வமாக அவள் அந்தச் சைனா ஸில்க் புடவையில் ஒயிலாக வளைய வந்தாள்! அவள் போட்டிருந்த ஸெண்டின் நறுமணத்தைப் பற்றிய பெயர்களின் ஊகங்களைப் பெருமையுடன், பிறர் கூறக் கேட்டு ரசித்திருக்கிறாள்

"அருணா வரும் போதே 'இண்டிமேட்' வாசனை ஆளைத் தூக்குகிறது.

ஸக்ஷ்மி

''இல்லே, அது 'வொர்த்' வாசனே.''

''அதுவும் இல்லே'' அருணா உள்ளூரச் சிரித்து மகிழ்வாள். அதிலும், ஐஸ்வர்யாவின் பிரசவத்திற்கு அமெரிக்கா சென்று வந்த பிறகு அவள் அடியோடு மாறிவிட்டிருந்தாள்.

''இந்த 'காஸ்' அடுப்பில் வேலை செய்யறதை நாம்பெரிசா நினைக்கிறோம். அமெரிக்காவில் சமையல் செய்யறதே தனி சுகம். அங்கேயெல்லாம் கடையில் நம்ம ஊர் சாமான்களெல்லாம் கிடைக்கிறதே!'' என்பது முதல் ஆரம்பித்து, ஐஸ்வர்யா மருத்துவமனையில் எத்தனை வசதிகளுடன் குழந்தை பெற்றாள் என்பது வரை சொல்லித் தீர்த்துக் கொண்டிருந்தாள்.

''இங்கே மாதிரி இல்லே. குழந்தை பிறக்கிறதுக்கு முன்னாலேயே பேர் சொல்லிடணுமாம். ஆண் குழந்தையானால் கிரண், பெண் குழந்தைன்னா மஹிமான்னு எழுதிக் கொடுத்து விட்டாள். கடைசியில் பிறந்தது கிரண்தான்.'' அமெரிக்க மயக்கத்திலிருந்து விடுபட்டு, அவள் சென்னை திரும்பியும் கூட அவள் வாய் ஓயவே இல்லே. ஆனால், சென்ற முறை கண்டதுபோல் ஐஸ்வர்யா இல்லையோ என்ற உறுத்தல் அவள் மனத்தின் ஒரு மூலையில் சிறு முளையாகக் கிளை விட்டது.

''ஐஸ்வர்யா வராளாம். விமான நிலையத்துக்கு வரச் சொல்லி இருக்கிறாள்,'' என்று அஸ்வத் கூறியதும் அருணாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லே.

இப்போதுதானே, தீபாவளிக்குப் புடவை வாங்கி, விழாதவர் காலில் விழுந்து, கெஞ்சாத குறையாக அனுப்பி வைத்தாள் மகளுக்கு. அதைக் கட்ட முடித்த கையோடு புறப்பட்டு விட்ட மாதிரி...?

''ஐஸ்வர்யா இன்றைக்கா வருகிறாள்?'' என்றுகுழப்பத்துடன் கணவனைக்கேட்டாள்.

''ஆமாம்! நேத்திக்கு ராத்திரி 'போன்' வந்ததாம். நீ 'கிளப்'ல இருந்து வர லேட்டாச்சே. அப்போ... அஸ்வத்தான், அவளிடம் பேசினான்!'' அவள் கணவர் அலட்சியமாகக் கூறி முடித்துவிட்டார்.

''குழந்தைக்கு விசேஷமாக எதுவும் இல்லேயே?'' சிறிது கவலேயுடன் கேட்டபடி மகனைப் பார்த்தாள்.

''எனக்கு என்னம்மா தெரியும்? 'நான் புறப்பட்டு வரேன். விமான நிலையத்துக்கு இந்த நேரத்திலே வந்து கூட்டிண்டு வா'ன்னு 'போன்' பேசினாள். ஓ.கேன்னேன். அதிலேயும் லண்டன் கால். உள்ளூர்ல பேசறாப்பல மணிக்கணக்காப் பேச முடியுமா என்ன?'' என்ற மகனின் குரலில் தொனித்த கண்டிப்பில் அருணா அசந்து போனாள்.

ஐஸ்வர்யாவைக் கூட்டி வர, அஸ்வத் காரை எடுத்துக் கொண்டு, விமான நிலையத்திற்குப் போன போது, அருணா கூடச் செல்லவில்லே.

சற்றுநேரத்தில் வாயிற்புறம் உறுமிக் கொண்டு வந்து நின்ற காரிலிருந்து இறங்கிய மகளைக் கண்டதும் அருணா திகைப்படைந்து



போனாள். இளைத்துக் கறுத்து... "என்ன ஐஸ்வர்யா! உடம்பு ரொம்ப மோசமா இருக்கே!" என்று பதற்றமாக வினவினாள்.

அவளருகே துள்ளிக் கொண்டு வந்த பேரனை ஆவலுடன் பிடிக்கக் கையை நீட்டியதும், ''ஓ! டோண்ட் டச் மீ...'' என்ற கிரண், தாயாருடன் ஒட்டிக் கொண்டான்.

''பயணக் களைப்பு. ஒரே அலைச்சல். தூங்கினால்சரியாகிவிடும்,'' என்றபடி ஐஸ்வர்யா, பெட்டியைத் தூக்கிப் படுக்கையறைக்குள் வைத்தாள்.

''ரொம்பப் பசிம்மா. குளிச்சிட்டு, முதல்லே சாப்பிடணும்,'' என்றவள், தாயாரிடம் மேற்கொண்டு பேசாதவளாய்க் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

''மம்மி! கம் ஆன். கம் அவுட்...'' என்று உரக்கக் கத்தியபடி குளியலறைக் கதவை லொட், லொட்டென்று தட்டியபடி போராடிக் கொண்டிருந்த பேரனைக் கண்டு சினம் பொங்கியது அவளுக்கு.

''அம்மா வருவா. நீ வா. சாப்பிடறியா?" பற்களைக் கடித்துச் சினத்தை விழுங்கினாள் அருணா.

''நோ!'' குழந்தை அடம்பிடித்தது. அருணாவுக்கு நல்ல நாளிலேயே பொறுமை கிடையாது. அதிலும், சிறு குழந்தைகளிடம் பக்குவமாகப் பழகும் நிதானமும் அவளிடம் குறைவு. இந்தப் பேரனிடம் அவள் எவ்வாறு நிதானமாக [illegible]க்கப் போகிறாள்?

அவளது குழந்தைகளான ஐஸ்வர்யாவும், அஸ்வத்தும் அவளிடமா வளர்ந்தார்கள்?

ஐஸ்வர்யா குளியலே முடித்து மாற்றுடை அணிந்து வந்தவள், கிரணிடம் சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

''குழந்தைக்குச் சாப்பாடு போட்டுடு ஐஸ்வர்யா, பசிக்குமோ, என்னவோ...?''

''அவனுக்கு 'பிரேக்ஃபாஸ்ட்' சாப்பிட்டுப் பழக்கம்மா.'' ஐஸ்வர்யா மகனை அள்ளியெடுத்தபடி, சாப்பாட்டு மேஜைக்கு வந்தாள்.

''தோசை, இட்லி... ஏதாவது...''

ஐஸ்வர்யா கல,கலவெனச் சிரித்தாள். ''ஐயோ, அம்மா! அவன் அமெரிக்காவிலே வளர்ந்த பிள்ளை. பிரட், சீஸ், ஜாம்னு சாப்பிடுவான். ஆம்லட் ரொம்பப் பிடிக்கும். இல்லாட்டா 'எக் ஸாண்ட்விச்' பண்ணிக்

* புதுவையில் ஒரு வீட்டில் நடப்பது சுபகாரியமா? அசுப நிகழ்ச்சியா? என்பதைத் தெரிந்து கொள்ள ஓர் அடையாளம்:

1. வாசலில் ஒற்றை வாழை மரம் இருபுறம் இருந்தால்: அசுப காரியம்.
2. ஜோடி வாழைமரம் இருபுறம் கட்டப்பட்டால்: சுப காரியம்.

—புதுவை அமலன்.

குடுக்கணும். அவனுக்கு இந்தத் தோசை, இட்லி பழக்கப்படுத்தவே இல்லே.''

அருணா பிரமிப்புடன் நின்றாள். எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது போன்ற நெருடல். அவள் மகளே திடும்மென ஒரு புரியாத புதிரைப் போல ஆகிவிட்ட பிரமை...

ஊர் விட்டு ஊர், உலகின் ஒரு புறமிருந்து மறுபுறம் பயணம் செய்ததன் மாற்றங்கள் என்ற காரணங்களால், இரவு பகல் வேளைப் பழக்கங்கள் ஐஸ்வர்யாவுக்கு மாறிவிட்டிருந்தன. பகலில் தூங்கினாள். இரவில் தூங்காமல் தவித்தாள். எல்லாவற்றையும் விட, பேரனைச் சமாளிப்பது அருணாவுக்குப் பெரும் பிரச்னையாகி விட்டிருந்தது.

மகள் கும்பகர்ண சேவை செய்யும்போது பேரன், கையில் பொம்மைத் துப்பாக்கி சகிதம் வீடு முழுவதும் அதம் பாய்ந்து கொண்டிருந்தான்.

''ஓல்டு லேடி, ஹேண்ட்ஸ் அப்,'' என்று அருணாவைப் பயமுறுத்தியதை அவளால் ரசிக்கவே முடியவில்லை.

''உங்க பொண்ணு வந்திருக்காளே, என்ன ஏதுன்னு விசாரிச்சேளோ?'' என்று கணவனிடம் ரகசியமாய்க் கிசுகிசுத்தாள் அருணா.

''இதில் விசாரிக்க என்ன இருக்கு? நம்மளைப் பார்க்கணும்னு தோணியிருக்கு. வந்திருக்கா,'' என்று கணேசன் அசட்டையாகக் கூறினார்.

''அமெரிக்கா கொல்லைத் தலைமாட்டில் இருக்கு. அதுதான் நம்மளைப் பார்க்கப் புறப்பட்டு வந்திருக்கா. போறுத குறைக்கு, ரெட்டைவால் பேரன். வீட்டில் ஒரு சாமானை விட்டு வைக்கிறதில்லே. இதுவே இன்னொருத்தர் வீட்டுக் குழந்தையா இருந்திருந்தா, எப்படியெல்லாம் திட்டி இருப்பேன். இப்ப நம்ம பேரனாய்ப் போய்த் தொலைஞ்சிருக்கு. வாயைத் திறக்கவே வழியில்லே.'' பொரிந்து கொட்டினாள் அருணா.

அன்று மாலை, கணேசன் அலுவலக விஷயமாக ஹைதராபாத் சென்று விட்டார். ''என்னிக்கு 'இந்த மனுஷர் வீட்ல இருந்து ஒழுங்காக் கவனிச்சுண்டார்? எல்லாம் என் தலையிலதான்!'' மனத்தினுள் பொருமிக் கொண்ட அருணா, தன் சேலையை மாற்றிக் கொள்ள அறைக்குள் சென்றாள்.

அவளது படுக்கையறைக் கட்டிலின் மீது, பேரன் கிரண், ஒப்பனைப் பொருட்களை வாரி இறைத்திருந்தான்.

''கிரண்! என்னடா இது?'' என்று அதட்டியபடி பேரனை உருட்டி விழித்தாள் அருணா.

''அம்மா! கொஞ்சம் வெளியிலே போகணும்.'' உள்ளே வந்த மகளை ஒரு விநாடி உறுத்துப் பார்த்தவள், ''ஏதானும் வாங்கணுமா என்ன?'' என்று கேட்டாள்.

''இல்லே. பெரியப்பாவையும் பெரியம்மாவையும் பார்த்துவிட்டு வரேன்.''

''அஸ்வத் காரை எடுத்துக் கொண்டு போயிருக்கான். அவன் வந்ததும் போகலாமே!''

''மெட்ராஸ் எனக்குப் புதுசா என்ன? ஒரு 'ஆட்டோ' வச்சுண்டு போறேன்!'' —மகள் அழுத்தமாகக் கூறியதைக் கேட்ட அருணாவுக்குச் சீற்றம் பொங்கியது.

''பெரியப்பா, பெரியம்மா! அப்படி என்னதான் சொக்குப்பொடி போட்டு வச்சிருக்காளோ தெரியலே,'' உள்ளூரப் பொருமியபடி, வெளியே வந்தாள், அருணா.

சில விநாடிகளில், வெளியே கிளம்பிய மகள், ''அம்மா! கிரண் இங்கேயே இருக்கட்டும். நான் போயிட்டு வந்துடறேன்,'' என்றபடி, வாயிற் பக்கம் விரைந்தாள்.

''ஐயையோ! நான் பேரனைக் கவனிக்க வேணுமா?'' கவலையுடன், உட்பக்கம் திரும்பிய அருணா, கலவரமடைந்து போனாள்.

முன்புற ஹாலில், அருமையும் பெருமையுமாக ஆடம்பரத்துடன் வீற்றிருந்த கலர் டி. வி. அதனடியில் அடக்கமாக அமர்ந்திருந்த வீடியோ இரண்டிலும் பேரன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தான்.


எவரையும் தொடக் கூட சம்மதிக்காத அருணா பேரனின் திருவிளையாடலைச் சகிக்க முடியாதவளாய், ''டேய், தொடாதே அதை. ஸ்டாப் இட். இடியட்'' என்று கூக்குரலிட்டாள். அவளுக்கு மூச்சிரைத்தது. பேரனின் முதுகில் நாலு அறை வைத்தால் என்ன என்ற ஆவேசம் பிடர் பிடித்து உந்தியது.


''ஐ வாண்டு வாட்ச். வீடியோ கேம்ஸ். ஐ வாண்ட்...'' பேரன் அடம் பிடித்தபடி, டி. வி.யைத் திருக ஆரம்பித்ததும் அவளது கோபம் பன்மடங்காகப் பெருகிற்று. அவளை மதிக்காமல் மகள் வெளியே ஓடிக் கொண்டிருக்கிறாள். மகனும் அப்படியே. தன்னையும் கவனித்துக்கொள்ள முடியாமல், இந்தப் பேரனின் பின்னால் ஓடிக்கொண்டு... ஆத்திரம் தலைக்கேறியது. ''பெரியப்பாகிட்டே பேசுவதற்கு என்ன இருக்கும்? பெத்த தாய்கிட்டக் கூடப் பேச நேரம் இல்லாம...'' எரிச்சல் தாளாமல், எல்லார் மீதும் இருந்த கோபத்தைச் சேர்த்து வைத்துப் பேரன் முதுகில் ஒரு சாத்து சாத்தினாள் அருணா.

பேரன் கிரண், ஊளையிட்டதைப் பொருட்படுத்தாதவளாய், அவன் கையைப் பற்றிக் கர,கரவென இழுத்துக் கொண்டு வந்து, சோபாவின் மீது உட்கார வைத்தும் அவள் சீற்றம் தணியவில்லை.

(தொடரும்)

தார் பாலைவனத்தின் மத்தியில் தகிக்கும் வெப்பத்தையும் தாங்கி நின்று பாதுகாப்பு தரக் கூடிய கூரைத் தகடு எது?





தார் பாலைவனத்தில் இத் தகடுகள் தேவைப்படாது என்றாலும், ராம்கோ அஸ்பெஸ்டாஸ் கூரைத் தகடுகள் எத்தகைய வெப்பத்தையும் ஏற்று நிலைத்து நிற்கும் வகையில் உறுதியுடன் தயாரிக்கப்படுகின்றன.

ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் ஆயுளுக்கும் உழைக்கும் வண்ணம் வலுவாக உருவாக்கப்படுகின்றன. சிறந்த மூலப் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதில் கண்காணிப்பு, உற்பத்தியில் நவீனத் தொழில்நுட்பம், திட்டமிட்ட தரக்கட்டுப்பாடு இவற்றின் இணைப்பே ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளின் சிறப்பு.

எனவேதான் ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் எப்படிப்பட்ட பருவநிலைகளையும் எதிர்கொண்டு, காலத்தை வென்று நிலைத்து நிற்கின்றன. எனவே கூரைத் தகடுகளில் ராம்கோவின் புகழ் கொடிகட்டி பறப்பதிலும் தலைசிறந்த கட்டடக் கலை நிபுணர்களும் பொறியாளர்களும் அதையே தேர்ந்தெடுப்பதிலும் வியப்பதற்கு எதுவுமில்லை.

Ramco

ராம்கோ. ஏனெனில் அதுவே அதிகபட்ச வெப்பத்தையும் அநாயாசமாக ஏற்று, ஆயுட்காலம் முழுவதும் உழைக்கும் வண்ணம் உறுதியாகத் தயாரிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

ராம்கோ தரமான கூரைகளுக்கு மட்டுமல்ல, நிரந்தரமான பாதுகாப்புக்கும் கூட.

சதர்ன் அஸ்பெஸ்டாஸ்
சிமெண்ட் லிமிடெட்
739, அண்ணா சாலை,
சென்னை 600 002.
போன்: 82006

பரிபூரண விற்பனையாளர்கள்:
ராஜா சாரிடி டிரஸ்ட்

அலுவலகங்கள்: பெங்களூர்
• எர்ணாகுளம் • ஹைதராபாத்
• பூனா • விஜயவாடா
• விசாகப்பட்டினம்

தொழிற்சாலைகள்:
அரக்கோணம் (தமிழ்நாடு)
கரூர் (கர்நாடகம்)

பிரஷர் பைப் பிரிவு:
மக்ஸி (மத்தியப் பிரதேசம்)

'எனக்குத் தடுமாற்றமில்லை' என்கிறார் பக்தவத்சலம்

* தங்களது 29.12.85 தேதியிட்ட கல்கி இதழில் கேள்வி–பதில் பகுதியில் என்னைப் பற்றி ஒரு குறிப்பைப் படித்தேன். அதில் ஆசிரியர் ஊர்ச்சி பற்றிய எனது கருத்தைக் குறிப்பிட்டு, நான் தடுமாற்றமடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு எந்தவிதமான தடுமாற்றமும் இல்லை. இன்னும் நான் தங்களது அனுதாபத்துக்குரியவனாகவில்லை.

வருவாயில் மூன்றில் இரண்டு பங்கை அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்குமே கொடுத்துவிட்டால் வரி செலுத்தும் மக்களுக்கு எதைக் கொடுப்பது? இது பற்றிமக்கள்தான்சிந்திக்க வேண்டும். இதற்குச் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் ஓராண்டு பள்ளிகளை மூடிவிடலாமென்று யோசனை கூறினேன். இதை மக்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து சிந்தித்துப் பார்க்கட்டும் என்றுதான் நான் கருத்துத் தெரிவித்தேன். இதிலென்ன தடுமாற்றம்?

சென்னை–4. எம். பக்தவத்சலம்.

இனிய கவிதை!

* இளையராஜாவின் மனம் திறந்த பேட்டியை படித்தபோது, ஏதோ ஒரு தெய்வ சன்னதியில் பறவைகளின் சுரவோசையைக் கேட்டு லயித்தது போன்ற ஓர் இனிய உணர்வு ஏற்பட்டது. இசையில் தெய்வீகத்தைக் காணும் அந்த இசைச் சக்கரவர்த்தியின் பேட்டியை ஓர் இனிய கவிதையாகத் தொகுத்து வழங்கிய ஆசிரியருக்கு எங்கள் மனம் திறந்த பாராட்டுக்கள்!

சீர்காழி–10. ஆர். எஸ். இராஜு

இளையராஜாவுக்கு இசையமைத்து விட்டீர்கள்!

* 'அடக்கமாக இருக்கிறேன் என்ற எண்ணமே ஒரு கர்வமாகிவிடக்கூடும்....' என்னும் வார்த்தைப் பிரயோகத்தைப் படிப்பது இதுதான் முதல் தடவை. அர்த்தம் நிறைந்த நயமான சொல்லாக்கம். பாடலுக்கு இசையமைக்கும் இளையராஜாவைக் கட்டுரையில் இசையமைத்திருக்கும் தங்கள் எழுத்தைக் கண்டு மகிழ்ந்தேன்.

திருச்சி–14. தமிழினியன்.

* இளையராஜாவின் பேட்டியைப் படித்து அவருடைய சித்தாந்தங்களைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் என்னிலிருந்து பிரிந்து எதிரே நின்ற நானை, நான் பார்த்தபோது, அந்த நான் சட்டையைக் கிழித்துக் கொண்டு முடியைப் பிய்த்துக் கொண்டிருந்தது.... அதெல்லாம் இருக்கட்டும், பேட்டி கண்ட கி. ராஜேந்திரன் தெளிவாக எப்படித் திரும்பினார்?

பம்பாய்–23. ப. விஜயபாலன்.

என்ன துணிச்சல் உங்களுக்கு!

* முதல் பக்கத்தில் இளையராஜா புராணம்; மறு பக்கத்திலேயே ஜெயமன்மதன் இளையராஜாவின் பின்னணி இசை டொமுக்–டொமுக்–டம்–டம் என்ற விமர்சனம்! ஆண் பாவம் பொல்லாதது சார்!

ஈரோடு–10. அமிர்தா சௌந்தர்ராஜன்.

கனவல்ல; நிஜம்தான்!

* 'கண்ணில் தெரியும் கனவுகள்' – செய்யாறை குப்பம்பட்டியாக்கி, நிஜத்தைக் கருவாக வைத்து எழுதப்பட்ட சிறுகதைக்கு ஒரு சபாஷ்!

குடியாத்தம்–2. இரா. கி. பட்டாபிராமன்.

மேலான பரிசு!

* வாழ்வே இனி இல்லை என்று விரக்தியடைந்த தொழு நோயாளிகளுக்கும், ஊனமுற்றோருக்கும், அநாதைகளுக்கும் புகலிடமாக விளங்கும் எழுபத்தியோரு வயது இளைஞரான பாபா ஆம்தே 'ஒரு மனித தெய்வம்' இவருக்கு மக்ஸேஸே விருது கிடைத்தது பொருத்தம்தான் என்றாலும் எத்தனையோ எண்ணற்ற மனிதர்களின் 'இதய தெய்வம்' என்ற பெரும் பரிசு அவருக்குண்டே!

மயிலாடுதுறை. இரா. பழம்.

ஜீரணிக்க முடியவில்லை!

* இந்தியாவை கட்டிக் காக்க அடுத்த நபர் தயாராக இருப்பதை எண்ணிச் சந்தோஷப்பட முடியவில்லை. ஏனென்றால், 'ராஜீவிற்கு ஏதாவது நே ந்துவிட்டால்...' என்ற வரிகளை எங்களால் ஜீரணிக்க முடியவில்லையே.

காஞ்சீபுரம். படுதலம் சுகுமாரன்.

சமுதாயச் சாடல்

* கடைசிப் பக்கக் கவிதை சிறந்த சமுதாயச் சாடல். ஆனால் 'சொர்க்கத்தின் சமாதியிலும் புல்லாய் முளைத்து எழுதும் நாங்கள்' – ஊஹூம் புரியவில்லை.

நீடூர். க. இராஜசேகரன்.

* 'A ஃபார் ஆப்பிள், M ஃபார் மர்டர்' கதையைப் படிக்க V ஃபார் வாசகர்கள், E ஃபார் ஈகராய் இருக்கிறோம்.

கோவை. உமார்த்தி.

* ருசி கதை – ருசிக்க முடியாதபடி கடைசியில் நெஞ்சில் என்னவோ 'கப்'!

பெங்களூர், 18. சுபஜா.

இமர் தாராளம்!

* என்ன சார் என்ன ஆச்சு உங்களுக்கு? இமரென்று நிறைய ஜோக்குகளைப் போட்டு எங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டீர்கள்!

கோவை–9. கோ. க. சுரேஷ்.


இதுதான் அக்கிரமம்!

* அநியாயம், அக்கிரமம்; என்ன வித்தியாசம்? மொத்தம் பதினொரு கேள்விகளுக்கே தாராக பதிலளித்தது அநியாயம் என்றால், ஒரே வாசகரின் இரண்டுகேள்விகளுக்குபதிலளித்திருப்பது அக்கிரமம்!

கும்பகோணம்–1. பா. கிருஷ்ணதாஸ்.



உங்கள் புதிய டு வீலர் 20,000 கி.மீ. ஓடிய பின்னர் எவ்வளவு கச்சிதமாக இருக்கும்?



உங்களுடைய புதிய மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் சாலையில் இறங்கிய உடனேயே அது பழையதாகத் தொடங்கி விடுகிறது. இதை மறந்துவிட வேண்டாம். ஒவ்வொரு முறை திருத்தும்போதும், ஸ்டார்ட் செய்யும் போதும், வேகத்தை கூட்டும்போதும், வளைவில் திரும்பும் போதும் அது மேலும் பழையதாகிறது.

மூன்றாண்டுகள் 20,000 கி.மீ. ஓடிய பின்னும் அது 'இளமை மாறாமல் இருக்க' என்ன செய்வீர்கள்? உங்களின் பெருமை தரும் பொக்கிஷம் செலவு இழுத்து வைக்கும் சுமையாக மாறாமல் எப்படித் தடுப்பது?

நாங்கள் கூறும் அடிப்படை குறிப்புகளை பின்பற்றுங்கள். உங்கள் டு வீலர் வாகனத்தில் இருந்து அதிகப் பயன் பெறலாம். பணமும் செலவழியாது தண்ணீராக ...

'ரன்னிங்-இன்' — நீண்ட உழைப்புக்கு மென்மையான துவக்கம்

உங்களுடைய டு வீலர் வாகனம் தீவிர உழைப்பின் இன்னல்களை மேற்கொள்ளும் முன் சுமார் 3,000 கி.மீ மென்மையாக ஓட்டி இஞ்சினின் இயங்கு பாகங்களை மென்மைப் படுத்த வேண்டும். அதற்கு ஆக்ஸிலரேட்டரை லேசாகப் பிடித்து, திடீரென வேகம் கூட்டுவதைத் தவிர்க்க வேண்டும். இஞ்சின் தாள்வது போல் தெரிந்தால் கியரைக் குறைக்க வேண்டும்.

சரியான தரமுள்ள ஆயில் போடுங்கள்

எப்போதுமே சரியான தரமுடைய ஆயிலை கூறப்பட்ட அளவு பெட்ரோலுடன் கலந்து போடுங்கள் — மிகவும் குறைவாக ஆயில் போட்டால் இயங்கு பாகங்கள் சீக்கிரம் தேய்ந்து இஞ்சின் கோளாறு ஏற்பட்டுவிடும். தேவைக்கு அதிகமாக ஆயில் போட்டால் புகை உண்டாகி கருப்புப் புகை வெளியேறுகிறது.

'கிளட்ச் இன்றி செல்வது' இஞ்சினுக்கு நல்லதல்ல

சரிவில் இறங்கும்போது கிளட்ச் இன்றி செல்ல வேண்டாம். இதனால் பிரேக் செயல்படாது போவதோடு மீண்டும் கியர் போடும்போது வாகனத்தின் சரியான வேகம் உங்களுக்கு தெரியாமல் போய், இஞ்சின் சேதமடையும்.

இஞ்சின் ஒரு விசைக்கூடம் — அதைக் கச்சிதமாக வைத்திருங்கள்

உங்கள் டு வீலர் வாகனத்தை முறையாக செக்-அப் செய்ய பெயர் பெற்ற கேரேஜுக்கு கொண்டு செல்லுங்கள். ஸ்பார்க் பிளக் அளவு, இக்னிஷன் நேரம், தொடர்பு பாயிண்ட்கள் ஆகியவற்றை சரிபாருங்கள். இந்த முன்னெச்சரிக்கையால் இஞ்சினில் பெரிய கோளாறு ஏற்படாமல் பெருத்த செலவு மிச்சப்படும். அது மட்டுமல்ல எரிபொருள் சிக்கனமும் ஏற்படுகிறது.

எரிபொருள் சேமிப்பு — உங்கள் வாகனப் பராமரிப்பின் ஓர் அம்சம்


நாங்கள் கூறும் வகைக் குறிப்புகளை (மேலும் பல விவரங்களை அனுப்புகிறோம்) நீங்கள் பின்பற்றினால் உங்கள் ஸ்கூட்டர் அல்லது மோட்டார் சைக்கிள் புத்தம் புதியது போல் இயங்கக் காண்பீர்கள். எரிபொருள் செலவும் மிச்சமாகும்.

டு வீலர் வாகனப் பராமரிப்பு மற்றும் எரிபொருள் சேமிப்பு பற்றி அறிய விரும்புகிறேன். உங்கள் இலவச புத்தகத்தை அனுப்பி வைக்கவும்.

பெயர் ____________________

முகவரி ____________________

____



Petroleum Conservation Research Association (PCRA)

பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரீசர்ச் அஸோஸியேஷன்,
906, "சேத்தி பவன்",
7, ராஜேந்திரா பிளேஸ்,
புதுதில்லி-110 008.

டு வீலர் பராமரிப்பும் எரிபொருள் சேமிப்பும் இணைபிரியாதவை

அன்று போராடினோம்; இன்று சூதாடுகிறார்கள்!



• ஐ. கே. குமாரன்.



• போராளிகள் நினைவுச் சின்னம், மாஹே.

பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு மாஹேதான் முன்னோடியாக இருந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

இந்தச் சுதந்திரப் போராட்டத்தைத் துவக்கி வைத்தவர் மாஹேயைச் சேர்ந்த மஹா ஜன சபை கட்சியின் அன்றைய தலைவர் ஐ. கே. குமாரன். மாஹேயின் காந்தி என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படுபவர்.

குமாரனுக்கு இன்றைக்கு வயது 83. எளிமையான வேட்டி. வெள்ளைக் கதர் சட்டை. இன்றைய அரசியலைப் பற்றிப் பேசும் போது நொந்து போன குரல். அன்றைய நினைவுகளை அசை போடும்போது மலர்ந்து போகும் முகம். மாஹேயின் சூடிக்கொட்டாவில் இருக்கும் அவருடைய எளிமையான வீட்டில் அவரைச் சந்தித்தோம். கனல் தெறித்த அவர் பேச்சிலிருந்து சில சிதறல்கள்:

• உலகப் போர் நடந்த காலம். பிரெஞ்சு காலனிகளில் இருந்த, சுவாசிக்கத் தெரிந்த இளைஞர்கள் எல்லாம் பிரெஞ்சு அரசால், ராணுவ வீரர்களாய் நியமிக்கப்பட்டு அவர்களுக்காகப் போராட அழைத்துச் செல்லப்பட்டார்கள். எத்தனையோ இந்திய இளைஞர்கள் அதில் கொல்லப்பட்டார்கள்.

• க்விட் இந்தியா போராட்டத்தில் ஈடுபட்டு அலிபுரம் ஜெயிலில் இரண்டு ஆண்டுகள் அடைபட்டேன். அங்கே எனது மூக்கு உடைக்கப்பட்டது. இதோ, இந்த வடுவைத் தொட்டுப் பாருங்கள். எவ்வளவு ஆழம்!

• இந்தியா, பிரிட்டிஷ் அரசிடமிருந்து சுதந்திரம்பெற்றுவிட்டது. ஆனால்எங்களுக்கு பிரெஞ்சு அரசிடமிருந்து சுதந்திரம் கிடைக்கவில்லை. இதை எப்படி நாங்கள் பொறுத்துக் கொள்ள முடியும்? போராட்டம்தான் ஒரே வழி!

• இங்கு முனிசிபல் தேர்தல் வந்தது. ஓட்டுப் போட ஒவ்வொருவருக்கும் அடையாளச் சீட்டு வேண்டும். போராட்டத்தை ஆதரித்தவர்களுக்கு இந்த அடையாள அட்டைகளை வழங்க பிரெஞ்சு மேயர் மறுத்தார். அட்மினிஸ்ட்ரேட்டரைக் கேட்டோம். அவரும் மறுத்தார். நாங்கள் ஊர்வலமாய்ப் போய்முனிசிபல்ஆஃபீஸ்எதிரில்உட்கார்ந்து சத்தியாக்கிரஹம் செய்தோம். ஏனத்திலிருந்து போலீஸ்'வந்தது. காரணமின்றித் தடியடிப் பிரயோகத்தில் இறங்கியது. எங்களைச் சேர்ந்தமீனவர்கள் கற்களைக் கைகளில் வைத்து மடக்கி, முஷ்டியால் போலீஸை அடித்தார்கள். உடனே துப்பாக்கிச் சூடு நடத்த ஆர்டர் செய்தும் சிப்பாய்கள் சுடவில்லை. மாறாகத் துப்பாக்கிகளை எல்லாம் சரண்டர் செய்தார்கள். இனி அரசு எங்கள்

கையில் என்று நாங்கள் அறிவித்தோம். ஆறு நாட்கள் ஆட்சி செய்தோம். ஏழாவது நாள் இரண்டு கப்பல்களில் பிரெஞ்சு ராணுவம் வந்து இறங்கியது. கைதாகிவிட்டால் போராட முடியாது என்பதால் நாங்கள் எல்லோரும் நதியைக் கடந்து இந்திய எல்லைக்குச் சென்றுவிட்டோம்.

* ஆறு வருடங்கள் மாஹேயை விட்டு விலகி இருந்து போராடினோம். கற்பழிப்பு, வன்முறை, திருட்டு போன்ற குற்றங்கள் எங்கள் மீது சுமத்தப்பட்டு 53 பேர்களுக்கு விசாரணை இல்லாமலேயே இருபது வருடங்கள் வரை பிரெஞ்சு அரசால் தண்டனை விதிக்கப்பட்டது.

* அடுத்தகட்டமாக மாஹேயைச் சுற்றி நாங்கள் வியூகம் அமைத்து, பண்டங்களின் போக்குவரத்தைத் தடுத்து அவர்களை ஸ்தம்பிக்கச் செய்தோம்.

* 1954 ஜுலை 14. பிரெஞ்சுப் புரட்சி நினைவு நாள். அன்றைக்கு நாங்கள் ஒரு படையாகத் திரண்டு மாஹேவிற்குள் பிரவேசித்தோம். அப்போது சென்னை போலீஸும் எங்களுக்கு உதவியாக மற்ற மூன்று சாலைகளில் அவர்களுடைய வேன்களை நிறுத்தி வைத்தார்கள். இந்தக் காட்சி அட்மினிஸ்ட்ரேட்டரைக் கலக்கிவிட்டது. அரசு பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து விட்டு இரண்டு நாட்களில் (16.7.1954) கப்பலில் ஏறி அவர்கள் சென்றுவிட்டார்கள்.

* அடுத்த மூன்றரை மாதங்களுக்கு நான் தான் மாஹேயின் அட்மினிஸ்ட்ரேட்டர். 1.11.54 அன்று பிரெஞ்சு அரசு பாண்டிச்சேரிக்கும் சுதந்திரம் வழங்கியது. அன்றைக்கே மாஹேயின் ஆட்சிப் பொறுப்பை இந்திய அரசிடம் ஒப்படைத்தேன். எனக்குப் பதவிகள் தர அவர்கள் முன்வந்தபோதும், 'என்னுடன் போராடியவர்கள் சுகப்படாதபோது, நான் மட்டும் பதவியில் இருப்பதா, வெட்கம்!' என்று மறுத்துவிட்டேன்.

* இப்போது மாஹே குடிகாரர்கள், சூதாடிகள், ஸ்த்ரீலோலர்கள் ஆகியோர்களால் நிர்வகிக்கப்படுகிறது. எங்கும் மது வெள்ளம். கணக்கைப் பார்த்தால் ஒவ்வொரு ரூபாய் அரிசி விற்பனைக்கும், இரண்டு ரூபாய் மது விற்பனையாகி இருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்த மதுக்கடைகள் மாஹே மக்களுக்காக மட்டும் திறக்கப்படவில்லை. அரசின் சம்மதத்துடன் வெளி மாநிலங்களுக்குக் கள்ள விற்பனை செய்வதற்காகவே நிறைய லஞ்சம் கொடுத்துத் திறக்கப்பட்டுள்ளன. வெட்கக் கேடு.

கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரம், இந்த உரையாடல் நடந்தது. நாங்கள் புறப்பட்டபோது அவரும் வெளியே கிளம்பினார். ஒரு கையில் டார்ச். ஒரு கையில் ஊன்றுகோல். பாறையால் ஆன அவரது வீட்டுப் படிகளில் இறங்கும்போது ஒருமுறை நின்று, திரும்பி, வீட்டைப் பார்த்தார். ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

''ஆறு நீண்ட வருடங்கள். என்னுடைய இந்த வீட்டை, மாஹேயின் சுதந்திரத்திற்காகப் பிரிந்திருந்தேன்.''

புதுச்சேரி பிறந்த கதை!

மொகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப் அரசாளத் தொடங்கிய ஒன்பதாம் வருடம், செப்டம்பர் மாதம் 29ம் தேதி, பிரெஞ்சுக் காரர்கள் இந்தியாவில் நிரந்தரமாக வாணிபம் செய்வதற்காக சூரத்தில் ஓர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. சூரத்தில் சுங்கத் தீர்வையைச் செலுத்திய பிரெஞ்சுக்காரர்கள் எங்கு வேண்டுமானாலும் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். பிரான்கவா மர்த்தென் என்பவர் சென்னையில் கத்தோலிக்க பாதிரியார் கரோன் என்பவரின் ஆலோசனைப்படி, பூந்தமல்லி தானப்ப முதலியாரை இடைத் தரகராய் நியமித்து, சோழமண்டலக் கரையில், சென்னைக்கும் பரங்கிப்பேட்டைக்கும் இடையே வசதியான ஒரு துறைமுகத்தைத் தேர்ந்தெடுத்தார். அந்த இடம்தான் வேத காலத்தில் 'வேதபுரி' என்றும்; பிறகு 'புதுச்சே' என்றும், 'பொந்திசெரி' என்றும் அழைக்கப் பெற்ற புதுச்சேரி பிறந்த கதை.

பாண்டிச்சேரிக்கு இப்போதுதான் பல்கலைக்கழகம் வந்தது என்றாலும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், பாகூர் என்ற பகுதியில், நாலந்தாவை விடச் சிறந்ததாகக் கருதப்படும் ''சமஸ்கிருத பல்கலைக்கழகம்'' இருந்தமைக்குச் சரித்திர காலச் சான்றுகள் உள்ளன. இதற்கு வருகை தரும் பொருட்டே விஜயநகர மன்னர் ஸ்ரீ கிருஷ்ணதேவராயரும், அப்பாஜியும், புதுவைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.



தகவல்: புதுவை அமலன்.




DIPR/Efficient

அறிவுக்குத் தீனி



* மையழியையும், கேரளாவையும் இணைக்கும் பாலம் பாதி கேரளம் — பாதி பாண்டிச்சேரி.



* மாஹே மசூதி.



* மாஹே நதியும், அராபியக் கடலும் சங்கமமாகும் முனை.

1. மாஹே — ஏன் இந்தப் பெயர்?

மையழி என்பதுதான் இவ்வூரின் உண்மையான பெயர். 1725ல் மாஹே என்னும் பிரெஞ்சு போர் வீரனால் இந்த இடம் கைப்பற்றப்பட்டதால் மாஹே என்று அழைக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கும், கேரள மக்களைக் கேளுங்கள். பாசத்துடன் மையழி என்றுதான் குறிப்பிடுகிறார்கள்.

2. மையழிபுழையுடே தீரங்களில் (மையழி நதியின் கரைகளில்) இது ஒரு புகழ் பெற்ற நாவல். மாஹேயின் சரித்திரப் பின்னணியில், இந்தியர்களையும், பிரெஞ்சுக்காரர்களையும் சுற்றி பின்னப்பட்ட நாவல். இந்நாவலின் ஆசிரியர் எம். முகுந்தன், மாஹே மண்ணைச் சேர்ந்தவர். தற்சமயம் தில்லி, பிரெஞ்சு தூதரகத்தில் பணிபுரிகிறார். இருமுறை கேரள சாகித்ய அகாதமி பரிசு வாங்கி இருக்கும் இவருக்கு வயது நாற்பத்தி இரண்டுதான்.

3. மாஹேயில் நல்ல சாப்பாடா? மூச். இருந்த நல்ல ஹோட்டல்களும் மூடப்பட்டு விட்டன. ஏனாம்? பிராந்தி, விஸ்கி கடை வியாபாரிகள் இந்த ஹோட்டல்களை மிக மிக நல்ல விலைக்கு வாங்கி, விஸ்கி கடைகளாக மாற்றிவிட்டார்கள். தம்மாத்தூண்டு ஊரில் 64 பிராந்திக் கடைகள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

4. மாஹேயில் ஸ்டவ்கள் வெடிப்பதேயில்லை. பெண்கள் தீக்குளிப்பதில்லை. ஏனெனில் இங்கே வரதட்சணைக் கொடுமையே இல்லை!

5. மாஹேயில் சினிமா, டிராமா சங்கதிகள் இல்லை. கடற்கரையும் சுத்தம் இல்லை. மக்கள் பாவம், பொழுது போகவில்லை



* முகுந்தன், எழுத்தாளர்.



* செயின்ட் தெரஸா சர்ச்.





* பிரெஞ்சுப் புரட்சியின் நினைவாக... மாஹே பார்க்கில் சிலை.



* கிருஷ்ண ரதோச்சவம்.

யெனில் இருக்கும் ஒரே ஒரு பூங்காவைத்தான் நாட வேண்டி உள்ளது. ஆனால் இருள் சூழ்ந்த மாலை நேரங்களில் இந்த பூங்காவில் அமர்வது தனி சுகம். மாஹே நதியும், அரேபியக் கடலும் சங்கமமாகும் இடம் இது. கரைகளில் இருந்து சிதறிய வெளிச்சங்கள், நீரின் மேல் நடனமாட, அந்தச் சங்கம சுகத்தில் அலைகளின் ஆர்ப்பரிப்பு இருக்கிறதே, அட, அட, அட, அட!

6. ஓர் ஆச்சரியமான அரசு புள்ளி விவரம். மாஹேயின் ஜனத் தொகையில் ஆயிரம் பேருக்கு, மலையாளம் பேசுபவர்கள் 995 பேர்கள். தமிழ் பேச மூன்று பேர். தெலுங்கு ஒருவர். கன்னட மொழிக்காரர் ஒருவர். பிரெஞ்சு பேசுபவர்கள்? பெரிய பூஜ்யம். ஒருவர் கூட இல்லையாம்!


7. 'செயின்ட் தெரஸா சர்ச்தான் மலபாரிலேயே பழைமையான ஒன்று. இது மாஹேயில் உள்ளது. இந்த சர்ச்சிலிருக்கும் தெரஸாவின் சிலை பற்றி ஒரு கதை. இந்த சிலை சுமந்த கப்பல் மாஹே அருகே திடீரென நின்றுவிட்டதாம். மேலே நகர மறுத்ததாம். அதனால் சிலையை இங்கே நிறுவினார்கள் என்று ஒரு சாரார் சொல்கிறார்கள். மற்றொரு சாராரோ, கடலில் வலை விரித்த மீனவர்களிடம் இந்த சிலை சிக்கியதாகச் சொல்கிறார்கள். எதுஎப்படியோ, ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் நிகழும் திருவிழாவிற்கு ஆயிரக்கணக்கில் எல்லா மதத்து மக்களும் வந்து அலை மோதுகிறார்கள்.

8. மாஹேயில் பஸ்களுக்காக மக்கள் காத்திருப்பதில்லை. ஏராளமான ஆட்டோக்கள். சரிந்து ஏறும் சாலைகள்தான் அதிகம் என்பதால் சைக்கிள் ரிக்ஷாக்கள் சுத்தமாய் இல்லை. ஆனால் ஆட்டோகாரர்கள் நியாயமானவர்கள். வெளியூர்க்காரர்களிடமும் அதிகம் கேட்டு ஏமாற்றுவதில்லை.

9. மாஹேயின் ஸ்பெஷல் அயிட்டம் ஏதாவது சாப்பிட வேண்டுமென்று ஒரு நப்பாசை.




* மையழி புழையூடே தீரங்களில்.



* மாஹே ஒரு தோற்றம்.

* கிருஷ்ணன் கோவில் விமானம்.



'மாம்ஸமும் அல்லா, மீனும் அல்லா' என்று சொல்லி, கட்லெட் போன்ற ஒரு சமாச்சாரத்தைத் தட்டில் வைத்தார்கள். 'கள்ளு மக்காய்' என்று பெயராம். சாப்பிட்டுவிட்டு விசாரித்த போதுதான் குடலைப் புரட்டும் விஷயம் தெரிந்தது. முத்து எடுப்பது போல் மூச்சைப் பிடித்துக் கடலில் இறங்குவார்களாம். ஆழத்தில் இருக்கும் பாறைகளில் சிப்பிகள் மாதிரி ஒட்டிக் கொண்டிருக்கும் இந்த 'கள்ளு மக்கா'யைக் கத்தியால் வெட்டி எடுப்பார்களாம். அதை அரிசி மாவுடன் கலந்து ஃப்ரை செய்து எங்களுக்கு வைத்து விட்டார்கள்.

'இதற்கு ஜீவனுண்டோ?' என்று சந்தேகம் தீராமல் கேட்டோம்.

'பின்னே? மீன் போலே வாய் திறந்திருக்கும். தப்பித் தவறி விரலை வைத்தால் கவ்வி விடும்' என்று சொன்னார் அந்த ஹோட்டலின் முந்தபகான்.

இது இப்படியா?

இன்னொரு ஹோட்டலில் —

'என்ன இருக்கிறது?' என்று கேட்டோம்.

'கோழிக் கால்' என்று பதில் வந்தது. அவசரமாய் மறுத்துவிட்டு வெறும் 'சாயா' சாப்பிட்டோம். பக்கத்து டேபிளுக்கு அதே கோழிக்கால் வந்தது.

வெறும் மரவள்ளிக் கிழங்கு! கோழிக்கால் போல் சீவி மசாலாவில் தோய்த்து எண்ணெயில் பொரித்தது! சுத்த சைவம்! கோழியும் இல்லை! காலும் இல்லை!

10. பிரெஞ்சு ஆட்சி மாஹேயில் விட்டுப் போன நினைவுச் சின்னங்கள் மூன்று:

1. சிதைந்து கிடக்கும் அவர்களது கொடியேற்றுக் கம்பம். முழுவதும் தேக்கினால் ஆனது.

2. கப்பல்களைப் பார்த்துக் கண் சிமிட்டும் கலங்கரை விளக்கம்.

3. பிரெஞ்சு புரட்சியின் நினைவாக பூங்காவில் அவர்கள் நிறுவியிருக்கும் ஒரு பெண் சிலை.

11. மாஹேயில் ஒரு விசேஷமான காட்சி. பெரும்பாலான வீடுகளில் கிணறுகள் சமையலறை அல்லது குளியலறையை ஒட்டி அமைக்கப்பட்டுள்ளன. அந்த அறைச் சுவர்களில் ஒரு பெரிய சதுரத் திறப்பு. கிணற்று வாளி மேலே வந்ததும், அந்தத் திறப்பு வழியாக, அப்படியே தண்ணீரை வீட்டுக்குள் இழுத்துக் கொள்கிறார்கள்.

12. கிறிஸ்தவர்களுக்காக சர்ச், அக்டோபர் திருவிழா, கிறிஸ்துமஸ். முஸ்லீம்களுக்காக மசூதி, ரம்ஜான், மொஹரம். ஹிந்துக்களுக்காக கிருஷ்ணன் கோயில்கள், திருவாதிரை, விஷு, ஓணம். மாஹேயில் எம்மதமும் சம்மதம்!

ஐ

மாஹேயில் நாங்கள் சந்தித்த ஒரு மலையாள எழுத்தாளர் ராகவன்.

''உங்கள் ஊரைப் பற்றிச் சொல்லுங்களேன்'' என்றோம்.

''ஒரு உள்ளங்கை அகலம்தான் மாஹே. ஆயினும், அத்தியாவசியமான அரிசி, சர்க்கரை, எண்ணெய் முதலியவை பாண்டிச்சேரி அரசின் கூட்டுறவுக் கடைகள் மூலம் மிக மலிவாகக் கிடைப்பதால் கேரள மாநிலத்துடன் இணைய யாருக்கும் விருப்பம் இல்லை.

"சிறந்த பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மிக மிக வசதியான ஆஸ்பத்திரி — இன்னும் என்ன வேண்டும்?''

''ஆனால் மாஹே மக்கள் குடிப்பிரியர்கள் போலிருக்கிறதே?''

சிரிக்கிறார்.

''தெருவெங்கும் இறைந்து கிடக்கும் மதுக் கடைகளைப் பார்த்துவிட்டுக் கேட்கிறீர்கள். கோடிக்கணக்கான பணம் இந்த பிஸினஸில் புரள்வதென்னவோ உண்மைதான். ஆனால் வரிச்சலுகையின் காரணமாக, இங்கே மலிவாக விற்கும் மது வகைகளை வாங்கிப் போகும் வெளி மாநிலத்தவரே மிக அதிகம். மாஹே மக்கள் அவ்வளவாகக் குடிப்பதில்லை.''

''மக்களுடைய முக்கிய தொழில் என்ன?''


''இங்கே விவசாயத்தையோ, தொழிற்சாலைகளையோ நம்பி மக்கள் இல்லை. ஆஃபீஸ் வேலைக்குப் போகிறவர்களே அதிகம். வீடு கட்டும் கூலி வேலை செய்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் நாளொன்றுக்கு எவ்வளவு கூலி தெரியுமா? 45 ரூபாய்! இவ்வளவு பணப் புழக்கத்திற்குக் காரணம் என்ன? ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது அரபு நாடுகளுக்குச் சென்று கொள்ளை கொள்ளையாய்ச் சம்பாதிக்கிறார்கள். இதனால் இங்கே வீட்டுமனைகளின் விலை எக்கச்சக்கமாய் ஏறிவிட்டது.''

''உங்களுக்கு வேறு பிரச்னைகளே இல்லையா?''

முகத்தில் லேசாகக் கவலை ரேகைகள்.

''ஏன் இல்லை? டீ. வி. இருக்கிறது. பார்க்க முடியாது. ஏனென்றால் பாதிநேரம் கரெண்டே கிடையாது. கேரளா சுத்தத்திற்குப் பெயர் போனது. ஆனால் இங்கே வாரத்திற்கு இரு முறை தண்ணீர் வந்தாலே அபூர்வம். நாங்கள் எப்படிச் சுத்தமாய் இருப்பது?''

இந்தக் கவலை கூட மாஹேயின் பெயரில் அவர் கொண்ட காதலால்தான் என்று நமக்குத் தெரிகிறது.



* இக்கரையில் மாஹே. அக்கரையில் கேரளா.

ஒரே பிரச்னை — மின்சாரம்தான்!

மாஹேயில் 'ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணு' என்று ஒரு நூல் நூற்கும் அரசுடைமைத்தொழிற்சாலை. இதைநம்பி அறுநூறு தொழிலாளர்களும், அவர்கள் குடும்பங்களும் இருக்கின்றார்கள். இந்தத் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்தோம்.

இதன் ஜெனரல் மானேஜர் வல்சலன் சொல்கிறார்:

''இங்கே ஒன்பது தொழிலாளர் யூனியன்கள் உண்டு. ஆனால் அவர்களால் எந்தப் பிரச்னையும் இல்லை. எங்களுக்கு இருக்கும் பெரிய பிரச்னை மின்சார சப்ளைதான். கேரள அரசு அவர்கள் மாநிலத்தை விட மூன்று பங்கு அதிகக் கட்டணத்தை எங்களிடம் வசூலித்தாலும், எங்களுக்குத் தேவையான ஹைவோல்டேஜ் மின்சாரத்தைத் தொடர்ச்சியாய்க் கொடுப்பதில்லை. மின்சாரப் பற்றாக்குறையால் எங்கள் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.''

மாஹே எம். எல். ஏ. என்ன சொல்கிறார்?

பள்ளூர் மாஹேயின் ஒரு பகுதி. அங்கிருந்து பிரியும் சரிவான பாதை சாலக்கரை

ஏ. வி. ஸ்ரீதரன் எம். எல். ஏ.



* ரமேஷ், மீனவர்.



வல்சலன்.



லவ் மாஹே”





* மீன்களைப் பிடித்துத் திரும்பிய இயந்திரப் படகுகள்

ரில் கொண்டுவிடும். ஆட்டோ நின்றதும் இறங்கி, கால்கள் வலிக்க மேடு பள்ளங்களைக் கடந்து போனால் எம். எல். ஏ. ஸ்ரீதரனின் அமைதியான வீடு.

அவருடைய தமிழில் மலையாள நெடி அதிகம்.

"எங்கள் ஊர் சின்ன ஊர் ஆனாலும், நீங்கள் கேள்விப்பட்ட எல்லாக் கட்சிகளும் உண்டு. நான் இ. காங்கிரஸ் டிக்கெட்டில் வெற்றி பெற்றவன். மாஹேயின் இன்னொரு எம். எல். ஏ. சத்யேந்திரன் கைமுறிவு சிகிச்சைக்காக மணிப்பாலில் உள்ளார். நான் மக்களைத் தினமும் காலை ஆறிலிருந்து பதினொன்று மணிவரை சந்திக்கிறேன். அவர்களுடைய பிரச்னைகளைப் பாண்டிச்சேரி சட்டசபையில் எடுத்துச் சொல்கிறேன்."

"இங்கே மின்சாரப் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறதே?"

"ஒரு கோடி ரூபாய் செலவில் பள்ளூரில் ஒரு துணை மின் நிலையம் நிறுவ அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நிறைய கிணறுகள் தோண்டுகிறோம். புகைவண்டிகள் புழக்கத்தில் இருந்த காலத்தில் இன்ஜின்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்ய மாஹே ரயில் நிலையத்தில் ராக்ஷஸத் தண்ணீர்த் தொட்டிகள் ரயில்வேக்காரர்களால் கட்டப்பட்டன. புகைவண்டிகள் குறைந்துவிட்ட இந்த நாளில், அந்தத் தண்ணீர் வசதியை மாஹே மக்களுக்குத் திருப்பி விடுமாறு ரயில்வேயைக் கேட்டிருக்கிறோம். அவர்களும் சம்மதித்திருக்கிறார்கள். மாஹேயின் வளர்ச்சிக்காகப் பாண்டிச்சேரி அரசு இம்முறை ஏழு கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது."

"உங்கள் தொகுதி மக்களுக்குச் சிறப்பாக என்ன செய்யப் போகிறீர்கள்?"

"மாஹேயிலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெரிய பிரச்னை ஆகிவிட்டது. இங்கே தொழிற்சாலைகளைத் துவங்க அரசு உதவிப் பணம் தரத் தயாராய் உள்ளது. ஆனால் உதவிப் பணம் பெறுபவர்கள், தொழில் துவங்காமலேயே ஓடிவிடுகிறார்கள். இந்த நிலையில் ஐந்நூறு பேருக்கு மேல் வேலை வாய்ப்புக் கொடுக்கும் வண்ணம் ஒரு தொழிற்சாலையைத் தொடங்க முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்."

இந்த இளம் எம். எல். ஏ. மீது மாஹே மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை வீண் போகாது என்று தோன்றுகிறது.

வலை வீசுபவரை வலை வீசியபோது...

மாஹே படகுத்துறையில் நாங்கள் கால் வைத்த நேரம் வெகு சுறுசுறுப்பாய் இருந்தது. வலைவீசிப் பிடித்த வகைவகையான மீன்களும், இறால்களும் கூடைகளுக்கு மாறிக் கொண்டிருந்தன. மோட்டார்ப் படகுகள் நெருக்கியடித்து நின்றன. 'கடல் முத்து' என்று ரசனையோடு தன் படகுக்குப் பெயர் சூட்டிய ரமேஷைப் பிடித்தோம்.

"இன்றைக்கு என்ன பிடித்து வந்தீர்கள்?" என்று வாயைக் கிண்டினோம். அவ்வளவுதான், மனிதர் புலம்ப ஆரம்பித்துவிட்டார்.

"அதையேன் கேட்கிறீர்கள்? இறால்களுக்குத்தான், கிராக்கி அதிகம். ஒரு கிலோ பதினேழு ரூபாய் வரை போகும். ஆனால் மோட்டார் படகு வைத்திருக்கும் நாங்கள் கடலுக்கு வெகு உள்ளே சென்றுதான் வலையை வீச வேண்டும். ஆனால் இறால்களோ கரையோரத்தில், ஆழம் குறைந்த பகுதிகளில் தான் அதிகம் கிடைக்கும். ஆழமற்ற பகுதிகளில் வலைவீசத் தோணிக்காரர்களுக்குத் தான் அனுமதி உண்டு. அதனால் மோட்டார் படகு வைத்திருப்பவர்கள் வருமானம் கம்மிதான்."

"உங்கள் மீன்களை எங்கே விற்கிறீர்கள்?"

"உள்ளூர் மார்க்கெட்டில் மொத்தமாக வாங்கி, கொச்சிக்கு அனுப்பி விடுவார்கள். அங்கே இருந்து மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன."

அதற்குள் மீன்களை வாங்க ஆட்கள் வந்துவிட, மற்றப் படகுக்காரர்களுடன் போட்டி

போட்டுக் கொண்டு ரமேஷும் விற்பனையில் இறங்கிவிட நாங்கள் ஒதுங்கிக் கொண்டோம்.

மாஹே போலீஸ் அதிகாரியுடன் பேசிய போது...

இவ்வளவு சின்ன ஏரியாவிற்கு இவ்வளவு அரசியல் தேவையில்லை. ஊர்வலங்களுக்கு அனுமதி வாங்குவதும் இல்லை. **DYFI (Democratic Youth Federation of India)** காரர்கள் பத்துபேர் சேர்ந்தால்போதும். உடனே ஊர்வலம்தான். ஆனால் யாரும் இவர்களைக் கண்டுகொள்வதில்லை. விபத்துக்கள் அதிகம். ஒவ்வொரு விபத்திலும் எப்படியும் ஆட்டோ ஒன்று காரணமாய் இருக்கும். நாங்கள் நைட் பீட் போவது உண்டு. ஆனால் மாஹேயில் திருட்டு பயமே இல்லை. எப்போதாவது, வெளியூர் ஆசாமிகள் குடித்துவிட்டு தெருவோரம் கிடப்பது உண்டு. அவர்களை போலீஸ், ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டு விடும். பாண்டிச்சேரி ஆட்களை இங்கேயும் பிராந்திக்கடை வைத்திருப்பதால் இங்கே இருந்து அங்கே எடுத்துச் செல்லப் பர்மிட் வாங்கிவிடுவார்கள். ஆனால் எடுத்துச்சென்று வெளி மாநிலங்களில் அதிக விலைக்கு விற்று விடுகிறார்கள். இவர்களை எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. விபச்சாரம் அறவே கிடையாது. வருடத்தில் ஆறு மாதங்கள் தொடர்ந்து மழை. மழை பெய்தால் எங்களுக்கு நிம்மதி. ஊர்வலம் எதுவும் நடக்காது பாருங்கள்!

அந்த அதிகாரி சொன்னதெல்லாம் வாஸ்தவம்தான். போலீஸ் ஸ்டேஷன் வெகு சுத்தம். வேலையில்லாமல் போலீஸ் வேன்கள் இரண்டு துருப்பிடித்து நின்றதை நாங்களே பார்த்தோம்.

சுற்றுலாவா? நோ சான்ஸ்!



சட்டசபை, மந்திரிசபை எல்லாம், சுமார் 700 கி. மீ. **தள்ளியிருக்கும் பாண்டிச்சேரியில்!** அப்படியானால் மாஹேயில் அரசாங்கம் எப்படிச் செயல்படுகிறது? மாஹேயை நிர்வகிக்க அட்மினிஸ்ட்ரேட்டர் என்று ஒருவரை அரசு நியமிக்கிறது. இந்தப் பிரதேசத்தைப் பொறுத்தவரை இவர்தான் ராஜா. இங்கு செயல்படும் பலதுறைகளுக்கும், பாண்டிச்சேரி அரசாங்கத்திற்கும் இடையில், இவர் ஓர் இணைப்புப் பாலம். இப்போதைய **அட்மினிஸ்ட்ரேட்டர் ஏ. பி. பத்மநாபன்.**

இவருடன் பேசிய போது தண்ணீர், மின்சாரம் போன்ற பிரச்னைகளுக்கு எம். எல். ஏ. சொன்ன கருத்துக்களையே இவரும் கூறினார்.

''மாஹேயில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஏதாவது செய்யக் கூடாதா?''

''மாஹே நதியில் சுற்றுலாப் படகுகள் விட ஒரு திட்டம் இருந்தது. ஆனால் வருடத்தில் ஆறு மாதங்கள் மழை. கடலில் கொந்தளிப்பு இருக்கும். நதியிலும் அமைதி இருக்காது. எனவே இந்தத் திட்டம் சரிப்பட்டு வரவில்லை. கடற்கரையிலும் மணல் பகுதி குறைவு. அதனால் அங்கே குடிசைகள் நிரம்பி விட்டன. எனவே கடற்கரையிலும் சுற்றுலா கவர்ச்சி இல்லை.''

கல்கி இதழுக்காக மாஹே சென்று வந்து கட்டுரைகளையும், புகைப் படங்களையும் அளித்தவர்கள் சுரேஷ் — பாலா.




லஞ்சம் கொடுத்துப் பதவி பெறுவது இப்போது தினசரி நிகழ்ச்சியாக மாறிவிட்ட போதும், 300 வருடங்களுக்கு முன்னரே அது அரும்பு விட்டிருந்தது:

''மதாம் துய்ப்ளே க்கு
ஆயிரத்தைந்நூறு ரூபாய்
மட்டுக்கும் நல்லதம்பி பள்ளிப்பால்
செலவழித்துப் பாளையக்கார
உத்தியோகம் வாங்கிக் கொண்டான்''

என்று ஆனந்தரங்கம்பிள்ளை டைரியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

— புதுவை அமலன்.



* காவிரியை நம்பி இருக்கும் காரைக்கால் விவசாயி கள்.

"பாரு பாரு காரைக்கால் பாரு,
காரைக்கால்ல கண்ணாடி மாளிகை பாரு
கண்ணாடிமாளிகைமரக்காயரைப்பாரு."

என்று ஒரு பாட்டு காரைக்கால் பகுதியில் வழக்கில் இருக்கிறது. அந்தக் கண்ணாடி வீட்டுக்குச் சொந்தக்காரர் ஹாஜி ஷேக் தாவுத் மரைக்காயர். பாண்டிச்சேரி வக்ஃபோர்டு தலைவராகவும், காரைக்கால் நகர காஜியாக வும் விளங்கும் இவர் எம்.எல்.ஏ. வாகவும் காரைக்கால் நகர மேயராகவும் இருந்திருக் கிறார். மதஒற்றுமையின் சின்னமாகக் காரைக் கால் திகழ்கிறதென்றால் அதற்கு ஷேக் தாவுது மரைக்காயரும் ஒரு காரணம். காஜி யாரின் மகன்கள், மகள்கள்; சிங்கப்பூரிலும், பாங்காக்கிலும் இருக்கிறார்கள். காரைக் காலில் கப்பல் போக்குவரத்தை மீண்டும் கொண்டு வருவதையே தமது லட்சியமாகக் கொண்டு செயல்படுபவர். "காரைக்கால் கடல் பகுதியில் ஆழம் அதிகம். கப்பல்கள் கரையை நெருங்கி வர வாய்ப்பு உண்டு. நாகப்பட்டினம் போல் ஐந்து மைல் தூரத் தில் கப்பல் நிற்க வேண்டிய அவசியம் இல்லை." என்கிறார் மரக்காயர். முயற்சியில் வெற்றி பெறுவாரா என்பதைக் காலம்தான் சொல்ல வேண்டும்.

கருணையினால் சரியான கை

காரைக்கால் பகுதியில் மறக்க முடியாத வர் மஸ்தான் சாஹிப் வலியுல்லா என்று அழைக்கப்படும் செய்த் தாவுத் புகாரி அவர் கள். இன்று இவருடைய தர்க்காவுக்கு கஷ்டங் கள் நீங்க, கருணை பெற வருபவர்கள் ஏராளம். 17ம் நூற்றாண்டில் ரஷ்யாவில் உள்ள புகாரா என்ற ஊரில் பிறந்து 120 ஆண்டு காலம் வாழ்ந்து, காரைக்காலில் இறையடி சேர்ந்தார் மஸ்தான் சாஹிப்

காரைக்காலுக்குக் கப்பல் வருமா?



* ஹாஜி ஷேக்தாவூத் மரக்காயர்



* புனித தேற்றரவு அன்னை ஆலயம்



* கலியாணசுந்தரம் — செயலாளர் விவசாயிகள் சங்கம்.

வலியுல்லா. இவர் காரைக்காலில் வாழ்ந்த காலத்தில் நிகழ்த்தியுள்ள அற்புதங்கள் ஏராளம். இவரைப் பார்க்க வருகிறவர்கள் தங்கள் வீட்டுத் திண்ணைகளில் கூட்கார்ந்து அமைதியைக் கெடுக்கிறார்கள் என்று சிலர், பிரெஞ்சுத் தளபதியிடம் புகார் சொல்ல, உருவிய வாளுடன் மஸ்தான் சாஹிப்பைத் தாக்க வந்தார் அவர். ஆனால் ஓங்கிய கை அப்படியே இருந்ததாம். சுற்றியிருந்தவர்கள் பிரமித்துப் போய் நின்றார்களாம்! அப்புறம் மஸ்தான் சாஹிப்பின் கருணையினால் அந்தத் தளபதியின் கை சரியானதாம்.

மஸ்தான் சாஹிப் தர்க்காவில், மார்ச்—ஏப்ரல் மாத வாக்கில் நடைபெறும் சந்தனக் குடம் விழா மிகச் சிறப்பு. 'அருகிலுள்ள நாகூரில் நடக்கும், விழாவிற்கு எங்கள் விழா சற்றும் சளைத்ததல்ல' என்று இங்குள்ளவர்கள் பெருமிதத்துடன் கூறுகின்றனர். முஸ்லீம் அன்பர்கள் மட்டுமல்ல, மற்ற மதத்தினரும் இணைந்து மஸ்தான் சாஹிப் சந்தனக் குடத் திருவிழாவைச் சிறப்பாக நடத்துவார்களாம்.

சனீஸ்வரன் கோயிலில் லாட்டரி சனி இல்லை!

* காரைக்கால் திருநளளார் சனீஸ்வரர் கோயிலில் இரண்டு அழகிய மான்களை வளர்க்கிறார்கள்.
* "இங்கு லாட்டரி டிக்கட் மற்றும் புத்தகங்கள் எதுவும் விற்கக்கூடாது. மீறினால் பறிமுதல் (பரிமுதல் அல்ல—கோயில் அதிகாரிகள் திருத்திக் கொள்வார்களாக) செய்யப்படும்." இந்த அறிவிப்பு தமிழகத்தில் உள்ள எல்லாப் பெரிய கோயில்களிலும் இருந்தால் பக்தர்களுக்குத் தொந்தரவு குறையுமே.

கடிகாரம் ஓடுமா?

காரைக்கால் நகருக்குள் நுழையும் போதே தூரத்தில் தெரியும் மாதா கோயில் கோபுரம் நம்மைக் கவர்கிறது. சரியான பராமரிப்பு இல்லாமல் பழைமைத் தோற்றம் அளித்தாலும் கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது. இந்தப் புனிதத் தேற்றரவு அன்னை ஆலயம், 1740ம் ஆண்டு கட்டப்பட்டதாம். கோபுரத்தில் உள்ள கடிகாரத்தில் இணைந்துள்ள மணியின் ஓசை கிட்டத்தட்ட ஆறு கி. மீ. வரை கேட்குமாம்! தற்போது ஒரு சின்ன உதிரி பாகம் கிடைக்காமல், கடிகாரம் ரிப்பேர். பொதுவாகவே முகலாய சாம்ராஜ்யம் நிறுவ முயற்சி செய்யப்பட்டபோது இந்துக் கோயில்கள்தான் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறுவார்கள். ஆனால் அதற்கு மாறாக இந்த மாதா கோயிலும் மூன்று முறை ஐதர் அலியின் வீரர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோயிலின் மணிக் கூண்டைக் கட்ட ஒரு பெண்மணி (பெயர்: லபோர்க்)தான் பணம் கொடுத்து உதவினாராம். இப்போது இந்த மாதா கோயிலைப் புதுப்பிக்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அது ஒரு பக்கம் இருக்கட்டும்; உடனடியாகக் கடிகாரத்தை ரிப்பேர் செய்வார்களா? "இந்த மணியோசையைக் கேட்காவிட்டால், ஏதோ ஒன்றை இழந்துவிட்டது போல் இருக்கிறது" என்கிறார் காரை நகரவாசியான ஜேம்ஸ் பாண்டியன்.




* வாய்க்காலின் செடி, செடிகளை அப்புறப்படுத்தி, ஆழப்படுத்த வேண்டும்.

விவசாயிகள் வேதனை

ஜூன் இரண்டாம் வாரம் என்றால் வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டு இருப்பார்கள் காரைக்கால் விவசாயிகள். இதற்குக் காரணம் மேட்டூர் அணை அப்போதுதான் திறக்கப்படும். அந்தத் தண்ணீர் கடைமடைப் பகுதியான காரைக்காலுக்கு வந்து சேர்வதற்கு இருபது நாட்களுக்கு மேல் ஆகும். கிட்டத்தட்ட 27000 ஏக்கரில் உள்ள பயிர்களுக்கு 10 டி.எம்.ஸி. தண்ணீர் தேவை. ஆனால் கிடைப்பதோ ஒரு டி.எம்.ஸி.கூட இல்லை! இதனால் வெந்து நொந்து போயிருக்கிறார்கள் காரைக்கால் விவசாயிகள். இத்தனைக்கும் கல்லணையிலிருந்து பிரியும் காவிரி, ஏழு கிளை ஆறுகளாகப் பிரிந்து காரைக்கால் எல்லைக்குள்தான் கடலில் கலக்கிறது. ''இருந்தும் என்ன பிரயோஜனம்?'' என்கிறார்கள், காரைக்கால் பகுதி விவசாயிகள் சங்கத் தலைவர் இத்ரீஸ் மரைக்காயரும், செயலாளர் கலியாண சுந்தரமும். ''பணம் இருப்பவர்கள் கொஞ்சம்கொஞ்சமாக இருப்பதை இழந்து கொண்டிருக்கிறோம். இல்லாதவன் கடன் வாங்கி, மூழ்கிக் கொண்டிருக்கிறான். கடந்த ஐந்து வருடங்களில், இரண்டு வறட்சி, மூன்று வெள்ளம். இவற்றால் விவசாயம் அடியோடு பாழ். எங்களுக்கு வேறு என்ன தொழில்? இதுதான் விதி'' என்று சலிப்புடன் சொல்கிறார்கள் இவ்விருவரும். ''தண்ணீர் வரும்என்றுநம்பிவிதைவிதைத்து, நாற்று நட்டு, பயிர் வளர்த்தால், ஒன்று தண்ணீர் வராமல் பயிர் வாடிச் சாகும். அல்லது எக்கச்சக்கமாக மழை பெய்து பயிர்கள் வெள்ளத்தில் சாகும். இதற்கு விடிவு காலமே கிடையாதா?'' என்று வேதனையோடு கேட்கிறார்கள் காரை விவசாயிகள்.

மிகவும் சிறிய பகுதியாதலால், பெரிய அளவில் நீர்பாசனத் திட்டங்கள் எதையும் அரசு நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால், எக்கச்சக்கமாக மழை பெய்து கடலில் வீணாகப் போகும் தண்ணீரைத் தேக்கி வைக்க அரசு ஏதாவது செய்ய வேண்டும்; நிலத்தடி நீரைப் பயன்படுத்த முழு முயற்சி எடுக்க வேண்டும். மத்திய நிலத்தடி நீர் கமிஷனைச் சேர்ந்த அதிகாரிகள், கடற்கரையிலிருந்து 8 கி. மீ. தூரம் வரை குழாய்க் கிணறு போட்டால் பயன் இல்லை என்று தெரிவித்துவிட்டார்களாம். ஆக 8 கி.மீ.க்கு அப்பால் 24 குழாய்க் கிணறுகள் தற்போது போடப்பட்டுள்ளன. ஆனால் இது போதாது என்கிறார்கள் விவசாயிகள். ''பொறையார் ரோடில் ஒரு பக்கத்தை மிகவும் உயர்த்தி, மழைக்காலத்தில் கூடுதலாக வரும் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டும்'' என்கிறார் கலியாண சுந்தரம். ''நவீன முறைகளைக் கையாண்டால், ஓரளவு விடிவு காலம் உண்டு'' என்கிறார் இத்ரீஸ் மரைக்காயர். ''வெட்டப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளில்



* மஸ்தான் சாஹிப், வலியுல்லா தர்க்கா

இருந்து குழாய் மூலம், கடை மடைப் பகுதிக்குக் கொண்டு வந்து ஊற்று முறை மூலம் பாசனம் செய்யலாம்'' என்கிறார்கள்.


இந்த விவசாயத் தலைவர்கள் அரசிடம் எதிர்பார்க்கும் இன்னொரு காரியம்: கால்வாய்க் கரைகளைப் பலப்படுத்தி, மணல் திட்டுக்களையும் செடி கொடிகளையும் அப்புறப்படுத்துவது. இது சீரான நீரோட்டத்துக்கு உதவியாக இருக்கும் என்பது மட்டுமல்ல, அதிக அளவு தண்ணீரையும் பெற வாய்ப்பு உண்டு. அரசு செய்யுமா?

புதுவை விவசாய மந்திரி கோவிந்தராஜன் காரைக்காலைச் சேர்ந்தவர். விவசாயிகளின் கஷ்டங்களை நன்கு அறிந்தவர். விடிவு காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள் விவசாயிகள்.

ப்ரியன்.


புகைப்படங்கள்: **மனோ.**

‘‘நாளுக்கு நாள் புதுப் புது
ஆனால் நம்பி வாங்கச்



திரு மாத்யூ ஜோஷுவா
XI/702, பிஷப்ஸ் கார்டன்
ஃபோர்ட், கொச்சி-1.

திரு ஜீ.கே. ஸ்வாமி
‘சிவசக்தி’ பிளாட் நெ 2
பனம்பள்ளிநகர்
கொச்சி 682 016




CTS 605

CTS 919

கலர் டிவி வாங்குமுன் நீங்க, சாலிடேர் வச்சிருக்கும் நண்பரைக் கேளு

பிராண்டுகள் பல தோன்றுது. கூடியது சாலிடெர் ஒன்றே!"



திரு. மாத்யூ ஜோஷுவா, கொச்சியிலுள்ள ஹார்மஸ்டு ஷிப்பிங் கார்ப்பரேஷனில் ஷிப்பிங் மேனேஜர். அவர், தமது நண்பரும், போர்ட் டிரஸ்டின் ஓய்வுபெற்ற போக்குவரத்து மேலாளரும், கொச்சி துறைமுகத் தொழிலாளர் போர்டின் முன்னாள் துணைத் தலைவருமான திரு. ஜீ.கே. ஸ்வாமி சிபாரிசு செய்த டிவியை வாங்கினார். அவர் கூறுகிறார், "நான் ஒரு கலர் டிவி வாங்க திட்டமிட்டபோது, ஸ்வாமி என் ஆபீசுக்கு வந்திருந்தாரு. ஏற்கனவே ஸ்வாமி, இரண்டு மாசங்களுக்கு முன்னே ஒரு கலர் டிவி வாங்கி இருந்தாரு. ஸ்வாமி வெளிநாடுகளுக்கெல்லாம் போயிருக்காரு. நல்லா விஷயம் தெரிஞ்சவர் என்கிறதனாலே அவருகிட்டே யோசனை கேட்டேன். அவர் எப்படி கலர் டிவிவாங்கினார்னு வெவரமாச்சொன்னாரு. பழைய, பிரபலமான பிளாக் அண்ட் ஒயிட் டிவிகள்லே ஒரு சிலதான் இன்னும் நிலைச்சி இருக்கு. அதுலே இரண்டொரு பிராண்டுலேருந்து ஒண்ணைத் தேர்ந்தெடுக்க தீர்மானிச்சாரு ஸ்வாமி. அந்த பிரபல பிராண்டுகள்லே சாலிடெர்தான் அவருக்கு ரொம்பப்பிடிச்சது. ஏன்னா, என்னிக்குமே அதுலே படம் தெள்ளந் தெளிவா தெரியுது. 'கண் இமைகள்'' உதாரணத்தையும் சொன்னாரு. அதோட, சாலிடெருக்கு உலகப்புகழ்பெற்ற மேற்கு ஜெர்மன் தொழில்நுட்பம் பின்பலமா இருக்கறதனாலே, தரத்தைப்பத்தி முழு நம்பிக்கை ஏற்பட்டது. தவிரவும், அதுக்குக் கிடைக்கிற உடனடியான சேவையும், திறமையான வேலையும் சாலிடெர் வாங்க முக்கிய காரணம்னாரு. அதனாலேதான் நான் ஸ்வாமியைக் கேட்டபோது, ''எத்தனையோ பிராண்டுகள் வந்து போகும். ஆனா நீங்க சாலிடெரைத்தான் வாங்குங்க"ன்னாரு. கடைசியிலே ஸ்வாமி சொன்னாரு: என் ஆலோசனையைக் கேட்டு எத்தனையோ பேரு சாலிடெர் வாங்கி இருக்காங்க. எல்லாருக்குமே அதுலே ரொம்ப சந்தோஷம்'' இப்ப தெரிஞ்சதா நான் ஏன் கொஞ்சமும் தயங்காமே சாலிடெர் வாங்கினேன்னு?

இது உண்மையான கதை. சாலிடெரின் சிறந்த தரத்திற்கு இதுவே சான்று. சாலிடெர் மட்டுமே மக்களிடையே இத்தகைய நன்மதிப்பைப் பெற்றுள்ளது. காரணம், அது அளிக்கும் தெளிவான படம், தத்ரூபமான வண்ண ஒளிபரப்பு மற்றும் தரமுயர்ந்த தொழில் நுட்பம். எனவே இன்று மேன்மேலும் அதிக மக்கள் இதை வாங்குகின்றனர். முதன் முதலில் வாங்குவோரும், மற்ற முன்னணி பிளாக் & ஒயிட் டிவி வைத்திருப்போரும் இதையே நாடுகின்றனர். இந்த சிறப்புகள்தான் சாலிடெர் கலர் டிவியின் உண்மையான பின் பலம், சாலிடெரையே நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கும் சான்று.

இதன் மற்ற சிறப்பம்சங்கள்—சாலிடெர், மேற்கு ஜெர்மனி தொழில் நுட்பத்தால் உருவானது. மேற்கு ஜெர்மனியின் ITT-யிலிருந்து வரும் பிழையற்ற உறுப்புகள் கொண்டது அதோடு, நம் நாட்டின் கடுமையான பருவநிலைகளிலும் சிறப்பாக வேலை செய்ய உருவாக்கப்பட்டது.

தவிர, சாலிடெரில் VCR, வீடியோ விளையாட்டுகள் மற்றும் ஹோம் கம்ப்யூட்டர் கனெக்ஷன் முதலான வசதிகளும் உள்ளன. இவற்றுக்கெல்லாம் சிகரமாக, சாலிடெரின் விற்பனைக்குப் பிந்தைய சேவை எல்லாப் பகுதிகளிலும் உண்டு.

கலர்
சாலிடெர்
-தொல்லையில்லாத் தொலைக்காட்சி



எளியவர்தான் திவாரி ஆனால் செய்ய முடியாது சவாரி

பிரெஞ்சுக்காரன் கட்டின பெரிய கட்டிடம். இப்போதைய பெயர் ராஜ்நிவாஸ். உள்ளே நுழைந்ததும் நேருவிலிருந்து ராஜீவ் வரை அத்தனை பிரதமர்களின் படங்களும். கவர்னரின் நேர்முக உதவியாளர் பாஸ்கரன், அறிமுகப்படுத்திவிட்டு, அந்தப்பக்கம்போய் விடுகிறார்.

தீர்க்கமான பார்வை; கறுப்பு பிரேம் கண்ணாடி; முழுக்கை சட்டை; அமைதியான தோற்றம்; நிதானமான பேச்சு; சன்னமான குரல்; இதுதான் பாண்டிச்சேரியின் துணை நிலை ஆளுனர் திரிபுவன் பிரசாத் திவாரி என்கிற டி. பி. திவாரி.

அக்டோபர் 84ல் பாண்டிச்சேரியில் பதவி ஏற்ற இந்த மனுஷர் அஞ்சு நிமிஷம் பேசினாலும், அளவில்லாத புள்ளி விவரங்களை அள்ளி வீசுகிறார். உத்திரப் பிரதேசத்தில் கான்பூர்காரர். விவசாயக் குடும்பம். குடும்பப் பெயர் திவாரி. உ.பி. அரசாங்கத்தில் நிதி, வேளாண்மை, வருவாய், புள்ளியியல் என்று இவர் வேலை பார்க்காத இலாக்காவே இல்லை. 80—82ல் உ.பி.யின் தலைமைச் செயலாளர். அப்போது வி.பி. சிங்தான் முதல்வராம்.

ரிடையரானவுடன் மாநில திட்டக் கமிஷனில் டெபுடி சேர்மன். அதே சமயம் அஸ்ஸாம் படு கொலை பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட ஒரு நபர் கமிஷனில் இடம் பெற்றார். விசாரணை அனுபவங்கள் பற்றிக் கேட்டால், "ஓ! அவை மறக்க முடியாத நாட்கள்" என்று ஆரம்பித்துச் சொல்கிறார்: "அஸ்ஸாம் மாநிலத்தில் என் கால் படாத ஊரே கிடையாது; விசாரணைக்கென ஊர் ஊராய்ப் போயிருக்கிறேன்; பொது மக்கள் கும்பல் கும்பலாய்க் கூடுவார்கள். கும்பலிலிருந்து இங்கொன்றும், அங்கொன்றுமாய் மக்களை அழைத்து விசாரிப்பேன். அவர்கள் சொல்வதை டேப் ரெக்கார்டரில் பதிவு செய்து கொண்டு, அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, உடனுக்குடன் டைப் செய்து..... இரவு 12 மணிவரைகூட விசாரணை நடத்தியிருக்கிறோம். "ஏராளமாய்ப் பிரச்னைகள் வரும்! உயிருக்கு ஆபத்து; விசாரணையே நடத்த முடியாது" என்றெல்லாம் பயமுறுத்தினார்கள். ஆனால் நான் பயப்படவில்லை. ஆறு மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். சரியாய் ஆறாவது மாதம் 547 பக்க ரிப்போர்ட் ரெடி!"

உருது மொழியில் நல்ல புலமை; சமஸ்கிருதத்திலும் அப்படியே! பேசும்போது கீதையிலிருந்தும், உபநிஷதங்களிலிருந்தும் வெகு சரளமாய் மேற்கோள் காட்டுகிறார். பல்வேறு நிகழ்ச்சிகளிலும் திவாரி ஆற்றின உரைகளைத் தொகுத்து, புத்தகமாய்க் கூடப் போட்டிருக்கிறார்கள். கவர்னராய்ப் பதவி ஏற்றவுடன் இவர் செய்த முதல் காரியம் ஒரு இந்து கோவில், ஒரு சர்ச், ஒரு மசூதி இவற்றுக்குச் சென்று வந்ததுதான்.

கவர்னர் திவாரி காலை 5 மணிக்கெல்லாம் எழுந்து விடுகிறார். சுமார் முக்கால் மணி நேரத்துக்கு ராஜ் நிவாஸ் காம்பௌண்டுக்குள்ளேயே வாக்கிங். அப்புறம் யோகாசனம். நிறைய புத்தகங்கள் படிக்கிறார்; தனிமை விரும்புகிறார். மனைவி பெயர் வித்யா திவாரி. மூணு பெண்கள். ஒரு பிள்ளை. பாண்டிச்சேரியில் கவர்னருடன் திருமதி மட்டுமே இருக்கிறார்.

"கவர்னர் திவாரி எத்தனையோ விஷயங்களில் எப்படிச் செயல்படுவது என்று அறிவுரையும், ஆலோசனையும் கூறியிருக்கிறார்" என்றார் முதல்வர் ஃபாரூக்.

திவாரிக்குப் பிடிக்காதது: விழாக்களில் அவருக்கு மாலையோ, பொன்னாடையோ அணிவிப்பது.

அனாவசிய பந்தா இல்லாத அமைதியான மனிதர். கவர்னரைப் பற்றி, பாண்டிச்சேரி வாசி ஒருவர் நகைச்சுவையாய்ச் சொன்னது: "எங்கள் கவர்னர் எவ்வளவு எளிமையானவர் தெரியுமா? எங்கள் வீட்டு போர்ன்விடா டப்பாவைத் திறந்து வைக்கக் கூப்பிட்டால் கூட ஓடி வந்துவிடுவார்! நல்ல மனுஷன்; ஆனால் அந்த எளிமையை தப்பர்த்தம் செய்து கொண்டு சவாரி பண்ண நினைத்தால் சரியான பாடம் புகட்டி விடுவார். நாங்கள் பெருமைப் படுகிறோம்!"

— நமது நிருபர்

படம்: மனோ.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Frivate Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

உங்கள் வீடுகள்
எழில் மயமாகவே இருக்க
நெரோலாக்
அக்ரிலிக் எமல்ஷன்
பெயிண்ட் டெக்னாலஜி
அறிந்தவர்களின் தயாரிப்பு

சீதோஷ்ண மாறுதல்களினாலும் காலத்தினாலும் எல்லா வீடுகளும் பழுதடைகின்றன.

அதனால் உங்கள் வீட்டிற்குப் பாதுகாப்பு அவசியம். நெரோலாக் அக்ரிலிக் எமல்ஷன் ஸிலிகோனுடன் கூட. இதன் கண்ணைப்பறிக்கும் வண்ணச் சாயல்கள் சுவர்களுக்குப் புத்தழகூட்டுகிறது. தன்னுடைய உயர்ந்த தன்மையினால் சுவர்களுக்கு நிரந்தர பாதுகாப்புமளிக்கிறது.

நெரோலாக் அக்ரிலிக் எமல்ஷன், நெரோலாக் ஸிந்தெடிக் எனாமல், மற்றும் நெரோலாக் ஆயில் பௌண்ட் டிஸ்டெம்பர் எல்லாம் பெயிண்ட் டெக்னாலஜியைப்பற்றி அறிந்துள்ள கம்பெனியால் தயாரிக்கப்பட்டது. ஜப்பான், கன்ஸை பெயிண்ட்ஸ் உடன் ஒருங்கிணைந்து இந்தியாவில் மாருதிக்காக முன்னேற்றமடைந்த டெக்னால்ஜியைப் புகுத்தியுள்ளோம்.

எழில் மிகு பாதுகாப்பு





நெரோலாக் பெயிண்ட்ஸ்

எந்த ரூபத்திலும் எந்த வண்ணத்திலும் மேம்பட்டது!



ULKA-GNP-1-86 TAM

EGISTERED No. M 4392
egistered as a Newspaper in Srilanka

